விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 02 செவ்வாய்க்கிழமை (17.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 363

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சிமெந்து ராம்கோ

# இரணைமடு நீர்த் திட்டம்
## விக்னேஸ்வரன், சிறிதரன் கருத்துப் பிளவு



(யாழ்ப்பாணம்)
இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கு நீரை கொண்டு வருவதற்கான திட்டத்தை செயற்படுத்துவது குறித்து வட மாகாண சபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள கருத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கடுமையாக எதிர்த்துள்ளார்.



வட மாகாண கல்வி திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயம் நடத்திய மார்கழித் திங்கள் முழுநிலை நாள் கலை விழா நேற்று சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாணசபை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அங்கு சிறிதரன் உரையாற்றுகையில்,

கிளிநொச்சியில் ஆயிரமாயிரம் விவசாயிகள் அந்த மண்ணோடு வாழ்கின்றவர்கள் இரணைமடுத் தண்ணீரையே தம்முடைய ஜீவயோபாயத்தில் வைத்து வாழ்கின்றவர்கள். அந்த தண்ணீருக்காக ஏங்கிக் கொண்டிருகிறார்கள்.

அவர்களுடைய வாழ்க்கையி 19-ம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி மகிந்த நாடு திரும்பினார்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கென்யாவுக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டு

நேற்று திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் நாடு திரும்பினார் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தென்னாபிரிக்காவின் மறைந்த, முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவிற்கு இறுதி அஞ்சலி செலுத்தியதன் பின்னர் அங்கிருந்து கென்யாவுக்கு விஜயம் செய்திருந்தார். ஜனாதிபதியின் 20-ம் பக்கம் பார்க்க

## யானை தாக்கி ஒருவர் பலி

கொக்கட்டிச்சோலை, 40ஆம் கட்டை தாந்தாமலை எனும் பிரதேசத்தில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த தாக்குதல் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை நண்பகல் 1.30 மணியளவில இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் மாவடி முன்மாரி பிரதேசத்தை சேர்ந்த 16 வயதுடைய கேதாரபிள்ளை யோகேஷ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த ஒரு வார காலப் பகுதியில் இந்த இடத்தில யானை தாக்குதலுக்கு உள்ளாகி மூவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## போதைப் பொருள் பாவனைக்கு இராணுவமே முழுக்காரணம்
### விக்னேஸ்வரன் பகிரங்கக் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)
வடக்கில் அனைத்தும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளதனாலேயே பாடசாலை மாணவர்களிடையே போதைப் பொருள் பாவனை பரவியுள்ளது.

அதிகரித்த இராணுவத்தின் பிரசன்னத்தால் பொலிஸார் தமது கடமைகளினை சரிவர செய்யமுடியாதுள்ளது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயம் மார்கழி திங்கள் முழுநிலா நாள் கலை விழாவினை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நேற்று காலை 9.30 மணிக்கு நடத்தியிருந்தனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு 20-ம் பக்கம் பார்க்க

## இந்து மகாசபை ஏற்பாட்டில் ஆன்மீக பாதயாத்திரை
### பல நூற்றுக் கணக்கானோர் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)
இந்து மதத்தின் மீது மேற்கொள்ளப்படுகின்ற அடக்கு முறைகளினை கண்டித்தும், மாணவர்களிடையே ஆன்மீகத்தினை வளர்க்கும் நோக்குடனும் இந்து மகாசபையின் ஏற்பாட்டில் பாதயாத்திரை ஒன்று இடம் பெற்றுள்ளது.

இப்பாத யாத்திரை நிகழ்வு நேற்று காலை 8 மணிக்கு சித்தன்கேணி ஈஸ்வரர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்வரை சென்றடைந்துள்ளது.

தற்கால கட்டத்தில் இளைஞர்கள் வேறு திசை நோக்கி திரும்பி செல்வதனாலும், இளைஞர்கள் தவறான பாதையில் செல்வதனாலும் அவர்களினை நல் வழிப்படுத்தும் நோக்கில் இப்பாத யாத்திரை நடைபெற்றுள்ளது.

தற்போது மத நம்பிக்கையினை இல்லாது செய்யும் நோக்கில் இந்து ஆலயங்கள் இடிக்கப்பட்டு வருகின்றன.

சைவ பாரம்பரியங்கள் அழிக்கப்பட்டும் மூடி மறைக்கப்பட்டும் வருகின்றன. இவற்றை எதிர்க்கும் முகமாகவே 20-ம் பக்கம் பார்க்க

**நிரந்தர நியமனம் கோரி தொண்டர் ஊழியர்கள்**

## யாழ். போதனா வைத்தியசாலையில் நான்காவது நாளாகவும் போராட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ். போதனா வைத்தியசாலையின் தொண்டர் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள கவனயீர்ப்பு போராட்டம் நான்காவது நாளாகவும் நேற்றும் தொடர்ந்தது.

கடந்த நான்கு வருடங்களாக தொண்டர் ஊழியர்களாக கடமையாற்றி வரும் சுமார் 240ற்கும் மேற்பட்டவர்கள் தம்மை சேவையில் நிரந்தரமாக்குமாறு கோரி கடந்த 13 ஆம் திகதி இந்த கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

சிகிச்சை பெற்றுக்கொள்ளும் நோக்கில் வைத்தியசாலைக்கு வருகை தரு 20-ம் பக்கம் பார்க்க

## தமிழகத்து ராஜபக்ஷ கருணாநிதிதான்!

கருணாநிதி தமிழகத்து ராஜபக்ஷ என்றும் ராஜபக்ஷ இலங்கையின் கருணாநிதி என்றும் அ.தி.மு.க. கொள்கை பரப்பு செயலாளர் நாஞ்சில் சம்பத் கடுமையாக விமர்சித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று கருணாநிதி, இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக தீர்மானம் வாசிக்குறாரு. காங்கிரஸ், பா.ஜ.க. வுடன் கூட்டணி இல்லன்னு 20-ம் பக்கம் பார்க்க

## மகிந்த அரசிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்!
### காலம் கனிந்துள்ளது என்கிறது ஜே.வி.பி



(கொழும்பு)
ஹெரோயின் போதைப் பொருள் அடங்கிய கொள்கலனை சுங்க திணைக்களத்திடம் இருந்து விடுவிக்க முயற்சித்த குற்றச்சாட்டு தொடர்பாக பிரதமர் டி.எம். ஜயரத்னவுக்கு மாத்திரமின்றி முழு அரசாங்கத்திற்கு எதிராகவும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கான காலம் வந்துள்ளதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் உண்மை நிலைமையை உணர்ந்து அரசாங்கம் பதவி விலக 20-ம் பக்கம் பார்க்க

## கஞ்சாவுடன் இருவர் கைது

மன்னார், தாழ்வுபாட்டு கிராமத்தில் சுமார் 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாப் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 37 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன்வத்தளைமற்றும்கல்முனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரே விசேட அதிரடிப் படையினரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (செ-11)

## இலங்கை மீதான அழுத்தங்கள் எதிர்விளைவுகளை ஏற்படுத்தும்
### ஒத்துழைப்பதே சரி என்கிறார் நிராஜ்

இலங்கை மீதான சர்வதேச அழுத்தங்கள் எதிர்விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமென ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் நிராஜ் தேவா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை 1928ம் ஆண்டு முதல் ஜனநாயக நெறி முறைகளை பின்பற்றி வருகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்புரிமை வகிக்கும் சில நாடுகளுக்கு முன்னதாகவே இலங்கையில் ஜனநாயக முறைமை பின்பற்றப்பட்டிருக்கிறது. எனவே காலனித்துவ அதிகாரங்களை இலங்கை மீது திணிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல.

தற்போதைய அரசாங்கத்தின் மீது சர்வதேசம் கூடுதலான அழுத்தங்களை பிரயோகிப்பது எதிர் விளைவு 20-ம் பக்கம் பார்க்க

வெற்றிப் பயணம் தொடர்கின்றது
ஆஸ்திரேலியா குடும்ப விசா வென்றார்.
காத்தாபாடி வீதி, நுணாவில் மத்தி சாவகச்சேரியைச் சேர்ந்த திரு. தர்மபாலசிங்கம் சுதர்சன் ஆஸ்திரேலியா குடும்ப விசா வென்றுள்ளார்.
எமது வலுவான சட்ட ஆலோசனையில் இது சாத்தியமாகியது.
திசைகாட்டி பிறைவேற் லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 568 9090
www.thisaivisa.com
நீங்களும் தாமதம் வேண்டாம்
உங்கள் திசைகாட்டியிடம்
விரைந்து வாருங்களேன்...
(C 5803)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சிகளின் பட்ஜெட்டை வெற்றிகரமாக நிறைவேற்றுங்கள்

## கூட்டமைப்புத் தலைமை அறிவுறுத்தல்

உள்ளூராட்சிகளின் வரவு - செலவுத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைமையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது.

பிரதேச சபைகளின் வரவு-செலவுத்திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக கடந்த 14-ம் 15-ம் திகதிகளில் வலிகாமம் கிழக்கு (கோப்பாய்), தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபை மற்றும் வல் வெட்டித்துறை நகரசபை உறுப்பினர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது கூட்டமைப்பின் பிரதேச சபை உறுப்பினர்கள் மீதோ, அல்லது தவிசாளர் மீதோ குற்றச்சாட்டுகள் இருக்குமாக இருந்தால் அவை தொடர்பாக எழுத்துமூலம் தலைமைக்கு அறிவிக்கப்படும் பட்சத்தில் அது விசாரணைக்கு உட்படுத்தப்படும் என்றும் ஆனால் வெறுமனே கருதுகோள்களின் அடிப்படையில் பிரதேச சபையின் தவிசாளர் கொண்டு வரக்கூடிய வரவு செலவுத் திட்டத்தை எதிர்த்தோ நிராகரித்தோ வாக்களிப்பதனை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஏற்க மாட்டாது என்றும்,

அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒழுங்கு விதிகளுக்கு முரணானது என்றும் கூறப்பட்டதுடன் வரவு செலவுத் திட்டத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டி இருந்தால் இறுதி வாசிப்புக்கு முன்பாக அவற்றை கலந்து பேசி அனைவரும் ஏற்கக் கூடிய வரவு செலவுத் திட்டமாக அதனை முன்வைக்க வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அவ்வாறு இல்லாமல் தனிப்பட்ட குரோதங்கள் விருப்பு வெறுப் புக்களின் அடிப்படையிலோ அல்லது குறுகிய குழு நலம் சார்ந்தோ வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்கு அளிக்க கூடாது என்றும் தெளிவுபடுத்தப்பட்டது. இதனை மீறுவோர் மீது கட்சி காத்திரமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத் தகவலை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளரும் யாழ் மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.(செ-6)

# மணல் கொள்ளையர்களை பிடிக்க மும்முர தேடுதலில் பொலிஸார்

## நூற்றுக்கும் மேற்பட்டோர் களமிறக்கம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பாலாறு பகுதிகளிலுள்ள வீடுகளில் பொலிஸார் நேற்றைய தினம் பாரிய தேடுதல் நடவடிக்கையொன்றினை மேற்கொண்டுள்ளனர்.

தென்மராட்சியிலுள்ள மணற் கொள்ளையர்கள் பொலிஸாரினை தாக்கியதினை அடுத்தே இப் பாரிய தேடுத்தல் நடவடிக்கையில் பொலிஸார் இறங்கி உள்ளனர்.

குறித்த பகுதியில் அரசில் செல்வாக்குடைய நபர் ஒருவர் நீண்ட காலமாக சட்டவிரோத மணற் கொள்ளையில் ஈடுபட்டு வந்துள்ளார். இவ் மணற் கொள்ளை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கமுற்பட்ட போதிலும் பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவரின் செயற்பாட்டினால் மணற் கொள்ளையினை தடுக்கும் பொலிஸாரின் முயற்சிகள் மழுங்கடிக்கப்பட்டு வந்தன என குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினமும் அதற்கு முன்னைநாளிலும் மணற் கொள்ளையர்கள் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்தவேளை இரு பொலிஸார் அவர்களினை பின்தொடர்ந்து துரத்திய போதும் பொலிஸாரின் வாகனம் முன்னால் கட்டை ஒன்றினை போட்டுவிட்டு, மணலினை கொட்டிவிட்டு டிப்ப ரோடு தப்பி சென்றுள்ளனர்.

இதேபோல் நேற்று முன்தி னம் பாலாவி என்றும் கிராமத்தில் சட்டவிரோத மணல் கொள்ளையர்களினை பிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்த வேளை அவர்களை தாக்கியதோடு பொலிஸாரினை மிரட்டியும் உள்ளனர்.

இச்சம்பவம் ஊடகங்களில் வெளியானதைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எம்.சி.எம்.எம்.ஜெப்ரியின் பணிப்பின் போரில் இத் தேடுதல் நடவடிக்கைகள் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தேடுதல் நடவடிக்கையில் சுன்னாகம்,யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம், கோப்பாய் ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது (செ-4)

**தேவை**

பல்பொருள் வியாபார நிறுவனத்துக்கு வியாபார அனுபவம் உள்ளவர்கள் தேவை.

**0776237956**

சிறுவர் விளையாட்டு பொருள்கள் போதியளவு கையிருப்பில் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (487)

**0776237956**

**பிள்ளையார் இன்**

தினமும் உருளைக்கிழங்கு கறியுடன்

- பூரி, சப்பாத்தி, தோசை 80/- மட்டுமே
- மசாலா தோசை 120/- மட்டுமே

**தொடர்புகளுக்கு:**

**இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021 222 2829** (சி-5795)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-021222 5392

WESTERN UNION MONEY TRANSFER (C-5794)

# மரண அறிவித்தல்

## நடராசா சிவயோகராசா

(களஞ்சியக் காப்பாளர் லங்கா சீமெந்து லிமிட்டெட், சுன்னாகம் மின்சார சபை)



தெல்லிப்பளை வீமன்காமத்தை பிறப்பிடமாகவும் சுன்னாகம் கந்தரோடையை வதிவிடமாகவும் கொண்ட நடராசா சிவயோகராசா நேற்று(16.12.2013)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் நடராசா(ஆய்வு கூடப் பொறுப்பாளர் யூனியன் கல்லூரி) சிவமணி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும் ஜெயந்திமாலாவின்(ஜெயந்தி) அன்புக் கணவரும் யசோதரராஜா(யூனியன் கல்லூரி உயர்தர மாணவன்)ராமகிருஷ்ணராஜா (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்), துர்க்கா( உடுவில் மகளிர் கல்லூரி ஆகியோரது பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு கந்தரோடை சுன்னாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

கந்தரோடை, சுன்னாகம்.

தகவல்: நந்தன்(0777734676) (4873)

# தேசிய மட்டக் கட்டுரை போட்டியில் முதலாமிடம்

(கொழும்பு)

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் சமுகக் கலந்துரையாடல் மற்றும் வேலைத்தளக் கூட்டுறவு அலகினால் நாடளாவிய ரீதியில் இவ் வருடம் நடத்தப்பட்ட தமிழ் மொழியிலான கட்டுரைப் போட்டியில் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தை சேர்ந்த இயன் மருத்துவ உதவியாளரான தங்கராசா தமயந்தி முதலாம் இடத்தினை பெற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த 10-ம் திகதி கொழும்பு சிறிலங்கா பவுண்டேசன் நிறுவனத்தில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில் இவருக்குரிய கேடயமும் சான்றிதழும், பணப்பரிசும் தொழில் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கி கௌரவிக்கப்பட்டதாக யாழ்.ஜெய்ப்பூர் நிறுவன தலைவர் அறிவித்துள்ளார். (அ)

# பசு ஒன்றைக் காணவில்லை


14.12.2013 அன்று சிவப்பு மாடு, கன்னிப் பசு, 5 மாதச்சினை, மடிவிட்டபடி வயிற்றில் வெள்ளை, காதில் நம்பர் உள்ளது. இரு நிற வால், சிறிய கொம்பை உடைய அழகான கைபார் பசுவை காணவில்லை. இதைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**உரிமையாளர்: பஞ்சலிங்கம்,**

**பண்டாரகுளப் பிள்ளையார் கோவிலடி .**

**தொ.பே.இல:-0775302627,0777472778** (4869)

# காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் 9-ம் நாள் விழா



பஞ்சரத பவனி அவனியில் நம் பஞ்சம் அறுக்கும், பஞ்ச புலன்கள் அடக்கி அவன் நாமம் ஜெபிக்கும், பாரினுள் நடக்கும் நல்ல பௌர்ணமி விழா இது. தென்னாடுடைய அவன், எம் சிவன், திண்ணபுரத்தான், இன்றல்ல நேற்றல்ல என்றும் அவன் தேர் வருவான். இறைவன் அவன் நாமம் சொன்னால் நா இனிக்கும். நாவாரப்பாடி மனமார நினைத்து உருகி தேர் வடம் பிடித்து தேர் ஓட நாம் ஓடி தேர் நடக்க நாம் திண்ணபுர திருவீதி நடந்து அருள் பெறுவோம்.

காரை.S.கெங்காதரன்

அனுசரணை

றூபா பன்முக வர்த்தக நிலையம்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு


தொ.பே. : 021 321 0815,021 567 1540

E-mail : valampurii@yahoo.com,

valampurijaffna@gmail.com

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு கதிர்காமநாதன் ஐயா



சுழிபுரம் பறாளாய் ஈஸ்வர விநாயகர் தேவஸ்தான பரம்பரை அர்ச்சகரும் சல்லிக்காடு திருவடிநிலை மகா வித்தியாலய இளைப்பாறிய தலைமை ஆசிரியருமாகிய கார்த்திகேசு கதிர்காமநாதன் 15.12.2013 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலச்சந்திரன், திருமதி லலிதாதேவி, திருமதி சு.பத்மரஜினி, விமலச்சந்திரன், விஜயச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாண்டுரங்கன், து.சுரேந்திரன், திருமதி ரேணுகா, திருமதி அன்னலக்ஷ்மி, திருமதி விஜிதா (வதனா)ஆகியோரின் அன்பு மாமனாரும் நிரஞ்சன், நிவேதிதா, ரவிசங்கர், கஸ்தூரி, காயத்திரி, ரஜீவன், மாதங்கி, சங்கீதா, கேயூறநாதன், நிரூஜன், கஜரூபன், செந்தூரன், ஷீமந்தினி, விபூஷந்தினி, திவ்யந்தினி, பிரசன்னா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பறாளாய் வீதி, சுழிபுரம். (சி-5800) தகவல்:குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## எது செல்வம்?

இரவு நேரம் ஒரு மன்னன் குதிரைமீதேறி நகர்வலம் வந்து கொண்டிருந்தான். அடிக்கடி அவன் இப்படி வருவது வழக்கம்.

நாட்டு மக்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எப்படி இருக்கிறது? என்பதை நேரடியாகத் தெரிந்து கொள்வதறகாகத்தான் அம்மன்னன் இப்படி நகரத்தைச் சுற்றி வருவதுண்டு.

இப்படி வரும் போதெல்லாம் தவறாமல் அவனுடைய கண்ணில் படும் காட்சி ஒன்று உண்டு.

அதாவது ஒரு மரத்தடியில் எந்நேரமும் ஒரு பிச்சைக்காரன் நின்று கொண்டிருப்பான்.

ஒவ்வொரு தடவையும் அவன் பிச்சைக்காரனை அதே இடத்தில் பார்ப்பதுண்டு.

அப்படிப் பார்க்கும் போதெல்லாம் மன்னனுக்கு ஒரு சந்தேகம்.

இந்தப் பிச்சைக்காரன் ஏன் தூங்குவதேயில்லை.

ஒருநாள் அந்த மன்னன் பிச்சைக்காரன் இருந்த அந்த மரத்துக் கருகில் கொண்டு போய் குதிரையை நிறுத்தி விட்டு கீழே இறங்கினான்.

அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து,

"நான் தினமும் இந்த வழியாக வந்து கொண்டிருக்கிறேன். உன்னையும் பார்த்துக் கொண்ட இருக்கிறேன். உன்னுடைய செயல் வியப்பாக இருக்கிறது."

"என்ன வியப்பு?"

"நீ தூங்கி நான் பார்த்ததேயில்லை. நள்ளிரவில் கூட நீ முழித்துக் கொண்டே இருக்கிறாய். நீ ஏன் தூங்குவதேயில்லை? இதுதான் என்னுடைய சந்தேகம்"

பிச்சைக்காரன் போல தோற்றமளித்த அந்தத் துறவி இதற்குப் பதில் சொன்னார்.

"காவல் காத்துக் கொண்டிருக்கிறேன்."

"காவலா?"

"ஆமாம், ஏதோ ஒன்று எனக்குக் கிடைத்திருக்கிறது. அதைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறேன்."

அரசர் அங்கும் இங்கும் திரும்பிப்பார்த்தார். பக்கத்தில் ஒரு பிச்சைப் பாத்திரம் தான் கண்ணில் பட்டது. வேறெதுவும் தெரிய வில்லை.

"என்ன தேடுகிறீர்கள்?" என்றார் துறவி

"உங்களுக்கு என்ன கிடைத்திருக்கிறது என்று தேடுகிறேன்" என்றார் அரசன்.

"அதற்கு ஏன் வெளியில் தேடுகிறீர்கள்? எனக்குக் கிடைத்தது எனக்குள்ளே இருக்கிறது. அதை இழந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் விழித்துக் கொண்டே இருக்கிறேன். தூங்கினால் அது பறிபோய் விடுமோ என்று பயமாக இருக்கிறது.

மயக்கத்தில் நான் அதை மறந்தாலும் மறந்துவிடுவேன். அதற்காகத்தான் இந்த விழிப்புணர்வு."

"எனக்கு ஒன்றுமே தெரியவில்லை" என்றார் மன்னர்.

"உள்ளே போக முடியவில்லை என்றால் உனக்கு எப்படி அது தெரியும்?"

"உன்னிடம் இருப்பது அவ்வளவு பெரிய செல்வமா?"

"ஆமாம்"

"அப்படியானால் என்னிடமும் நிறைய செல்வம் இருக்கிறது."

"உண்மை தான்"

"அப்படி இருக்கும் போது உனக்கும் என்ன வித்தியாசம்"

துறவி சொன்னார்...

"மன்னா! பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லை.

கொஞ்சம் தான் வித்தியாசம். அது என்ன வென்றால்...

நீ வெளிப்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறாய்.

நான் வெளிப்பக்கமாக ஏழையாக இருக்கிறேன். நான் உள்பக்கமாக செல்வந்தனாக இருக்கிறேன். நீ உள்பக்கமாக ஏழையாக இருக்கிறாய்."

"அப்படியானால்?"

"நான் ஏழையாகவும் இருக்கிறேன், செல்வந்தனாகவும் இருக்கிறேன். அதேபோல் நீயும் ஏழையாகவும் செல்வந்தனாகவும் இருக்கிறாய். அதனால்தான் பெரிய வித்தியாசம் இல்லை என்றேன். நீ புறத்திலே செல்வந்தன். நான் அகத்திலே செல்வந்தன். அவ்வளவு தான்." துறவியின் இந்த விளக்கத்திலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா? விழிப்புணர்வோடு வாழ்ந்தால் நாம் எங்கே இருக்கிறோமோ அதுதான் சொர்க்கம். உறங்கிக் கொண்டே வாழ்ந்தால் நாம் இருக்கின்ற இடமே நரகம்.

இது ஞானிகள் வாக்கு.

நம்ம ஆள் ஒருத்தர்,

"எனக்கு தினமும் ஒரு தடவை விழிப்புணர்வு வருகிறது." என்றார்.

பக்கத்திலிருந்தவர் "எப்பொழுது?" என்றார்.

"தினமும் தூங்கி எழுந்திருக்கும் போது"

தூங்கி விழிப்பது என்பது வேறு, ஞானிகள் சொல்லும் விழிப்புணர்வு வேறு.

அதை நாம் தவறாக புரிந்து கொள்ளக்கூடாது. ஒரு நண்பர் வேடிக்கையாகச் சொன்னார்.

"நான் எப்பொழுதும் விழிப்புணர்வோடு தான் இருப்பேன். ஆனாலும் என்னுடைய சொர்க்கவாழ்க்கை இந்த மாதம் 24 ஆம் திகதிவரைக்கும் தான்" என்றார்.

"ஏன் அப்படி?"

"அன்றைக்குத்தான் எனக்குக் கல்யாணம்."

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# ஐ.நா. விசேட பிரதிநிதி சலோகாவின் அறிக்கைக்கு அரசின் பதில் என்ன?

## கூட்டமைப்பின் தலைவர் கேள்வி

பொதுமக்களின் பாதுகாப்பு, கருத்துச சுதந்திரம், காணி அதிகாரம் முதலானவற்றை உள்ளடக்கியுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர் சலோகா பெயானியின் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கத்தின் பதில் என்ன? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் பாராளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஒன்றுபட்ட நாட்டுக்குள் தீர்வு காணப்பட வேண்டுமாயின், மாகாணசபைக்குரிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் வடமாகாணசபைத் தேர்தல் நடத்தியதன் நோக்கம் தவறாகிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற காணி, காணி அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சுகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

13ஆவது திருத்தச்சட்டத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி அதிகாரம் போதாது. இருப்பினும் காணி அதிகாரம் மாகாண சபைகளுக்கே உரித்தானது என அதில் கூறப்பட்டுள்ளது.

உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் காணி அதிகாரம் பிராந்தியத்துக்கே வழங்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்ல ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட நிபுணர்களின் கருத்தும் இதுவாகவே இருக்கின்றது.

காணி அதிகாரம் தொடர்பில் உயர் நீதிமன்ற விவகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் தொடர்புபட்ட அந்த வழக்கில் 3 நீதியரசர்கள் அடங்கிய குழாம் வழங்கிய தீர்ப்பில் அரச காணிகள் மாகாண சபையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் போது மாகாணசபைக்குரிய சட்டத்துக்கு அமையவே அது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் காணி உரிமை பற்றி மாகாண சபைகளே தீர்மானம் மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசுக்கு மாகாணசபைகளே தீர்ப்பு வழங்க வேண்டும் என அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி, 13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை புறக்கணித்து, காணி அதிகாரங்களை மறுத்து தான்தோன்றித்தனமாக செயற்படக் கூடியதாக இருக்குமானால் அது நீதித்துறையுடன் இணங்கிப் போகாது. நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் கையில் அதிகாரங்கள் குவிந்திருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது உண்மையான - நேர்மையான நம்பிக்கைக்கு தடையாக அமையும்.

வடக்கு மக்கள் வடமாகாணத் தேர்தலினூடாக ஜனநாயகத் தீர்ப்பொன்றை தெளிவாக வழங்கியுள்ளனர். இதனை அரசும், அரச அதிகாரிகளும் ஏற்றுச் செயற்பட வேண்டும். தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்பட்டு, தீர்மானம் மேற்கொள்ள வேண்டும்.

வடமாகாண சபையானது மாகாணசபைக்குரிய பூரண அதிகாரங்களுடன் இயங்காவிட்டால் வடக்குத் தேர்தல் நடத்தியதன் நோக்கம் தவறாகிவிடும். அத்துடன் மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கிய மக்களுக்கும் விரக்தி ஏற்படும்.

13ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சமூக நலனோம்பல், புனர்வாழ்வு உள்ளிட்ட விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ள கடிதமொன்று ஜனாதிபதியின் செயலாளர் ஒருவரால் ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் பிரதிகள் ஏனையோருக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும் வடமாகாண முதலமைச்சருக்கு அதன் பிரதி அனுப்பி வைக்கப்படவில்லை.

இதனூடாக மாகாண சபை இயங்குவதைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. வடக்கு மக்கள் ஜனநாயக ரீதியாக வழங்கிய தீர்ப்பை மழுங்கடிக்கச் செய்ய எவராவது நினைத்தால் அது சாத்தியமாக அமையாது.

வடமாகாணசபை நடவடிக்கைகளை முன்னெடுக்க அதிகாரம், ஒத்துழைப்பு வழங்கப்படமாட்டா எனில், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய மாகாண முதல்வரால் முடியாது எனில் வடக்குத் தேர்தல் நடத்தியதன் நோக்கம் என்ன?

வடக்குத் தேர்தலின் பின்னர் வடக்கின் வசந்தம் செயற்றிட்டம் வடமாகாண சபையிடம் கையளிக்கப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கூறினார். ஆனால், வடமாகாணசபைக்கோ அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ வடக்கின் வசந்தம் செயற்றிட்டம் கையளிக்கப்படவில்லை என சம்பந்தன் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 30 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 80 |
| தக்காளி | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 20 | 15 | 40 |
| கரட் | 40 | 40 | 80 |
| பூசணி | 25 | 30 | 40 |
| புடோல் | 20 | 60 | 40 |
| வாழைக்காய் | 30 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 90-180 | 200 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 60-.100 | 170 | 140 |
| பாகற்காய் | 130 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 |
| பயற்றங்காய் | 120 | 60 - 80 | 100 |
| லீக்ஸ் | 70 | 60 | 100 |
| பீற்றூட் | - | 60 | 80 |
| கறிமிளகாய் | 160 | 120 | 140 |
| முருங்கைக்காய் | - | 90 | 240 |
| போஞ்சி | 120 | 110 | 120 |
| க்த்தரி தம்புள்ள | - | - | - |
| கீரை - 1 பிடி | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 50-80 | 60 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-55 | 40-50 | 35-45 |
| இராசவள்ளி | 140 | 120 | 240 |

# இராசி பலன்

17.12.2013

(மார்கழி 02, செவ்வாய்க்கிழமை )
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
பூரணை பிற்பகல் 2.55 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 1.26 மணிவரை
இராகுகாலம் 3.22 - 4.52 மணிவரை
சுபநேரம் 10.52- 12.22 மணிவரை
பூரணை விரதம், இரவு நடேசர் ஆர்த்திராபிசேகம்

**மேடம்** சவால்களைச் சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்** வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வியாபார விருத்தியுண்டு, வருமானம் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், வியாபார நலனுக்காக புது முயற்சி எடுப்பீர்கள், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

**கடகம்** குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், அதிகாரிகளால் அனுகூலமுண்டு.

**சிங்கம்** நல்ல காரியத்துக்கு பிள்ளையார் சுழி போடும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள்.

**கன்னி** காலை நேரத்திலேயே காதலிக்கும் செய்திகள் வந்த சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் வருமானத்தை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்பத்தினருடன் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவிகள் கேட்டு வரலாம், தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்** தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், முயற்சிகளில் தாமதம் ஏற்பட வாய்ப்புண்டு, உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காணவேண்டிய நாள்.

**தனுசு** குடும்பத்தேவைகளை பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், சுற்றத்தினர் வருகையால் சுகம் கூடும் நாள், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**மகரம்** கனிவாக பேசி காரியம் சாதிப்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்புக்கள் நடைபெறலாம், உடல் நலனில் உற்சாகம் பிறக்கும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கும்பம்** சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**மீனம்** உறவினர் வருகையால் உற்சாகம் பெருகும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கை உண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயங்காதுள்ள தொ.சாலைகளை மீண்டும் இயங்க வையுங்கள்

## தீவக மக்கள் கோரிக்கை


யுத்த சூழலால் தீவகங்களில் சேதமடைந்து இயங்காமலுள்ள தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைக்க வேண்டுமென மக்கள் வடமாகாண சபையின் உறுப்பினர்களான சிவயோகன், ஆனால்ட் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப் பிரதேசங்களிலுள்ள அனலைதீவு அலுமினியத் தொழிற்சாலை, மண்டைதீவு கோழித்தீன் தொழிற்சாலை என்பன 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயங்கியுள்ளது.

இதனூடாக அப் பகுதி மக்கள் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டதோடு உள்ளூர் உற்பத்திகளும் அதிகரித்துள்ளன.

ஆயினும் யுத்த சூழலினால் மேற் குறித்த தொழிற்சாலைகள் சேதமடைந்ததினால் மக்களும் வேலை வாய்ப்புக்களை இழந்து அன்றாட வாழ்வாதாரத்தை கொண்டு செல்ல முடியாமல் பின்னடைவுகளை சந்தித்துள்ளனர்.

இவ்வாறாக 24 வருடங்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வந்ததாக சுட்டிக்காட்டியுள்ள தீவக மக்கள் குறித்த தொழிற்சாலைகளை மீளவும் இயங்க வைக்க வடமாகாண சபையில் வலியுறுத்த வேண்டுமென உறுப்பினர்களிடம் கேட்டுக் கொண்டனர். (அ-9-24)




# கலகம் செய்த நால்வருக்கு பரு.நீதிமன்று எச்சரிக்கை

(கரணவாய்)

கரணவாய் மத்திய பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட்ட பெண்கள், ஆண்கள் உள்ளடங்கலாக 4 பேரை பருத்தித்துறை நீதிமன்று எச்சரித்து விடுதலை செய்துள்ளது.

குறித்த 4 பேரையும் கலகம் விளைவித்துக் கொண்டிருந்த போது கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் பருத்தித்துறை பதில் நீதவான் முன்னிலையில் ஆயர்படுத்தினர்.

இந் நிலையில் நால்வரையும் கடுமையாக எச்சரித்ததோடு தினமும் காலை 6 மணியிலிருந்து இரவு 9 மணிக்குள் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இட வேண்டுமென கட்டளையிட்டார்.

அத்தோடு, குறித்த நால்வரும் மீண்டும் இதே குற்றத்தை செய்யும் பட்சத்தில் அவர்களைக் கைது செய்து மன்றில் நிறுத்துமாறும் நெல்லியடிப் பொலிஸாருக்கு பதில் நீதவான் உத்தரவிட்டார். (அ-9-60)




# மோ.சைக்கிள் திருட்டு

(தனங்களப்பு)

கச்சேரி கிழக்குப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை களவாடப் பட்டுள்ளது.

மேற்குறித்த பகுதியில் உள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட க் காரியாலயத்துக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த NPW 6597 என்ற இலக்கத்தையுடைய மோட்டார் சைக்கிளே களவாடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப் பகுதியில் 14 இற்கும் மேற்பட்ட மோட்டார்கள் குறுகிய காலப் பரப்பில் திருடப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-9-37)

# மானிப்பாய் பிரதேச சபை ஆளும் தரப்புடன் கட்சியின் தலைமைப்பீடம் சந்தித்தது

(மானிப்பாய்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி. தென் மேற்கு பிரதேச சபை ஆளும் தரப்பு உறுப்பினர்களுக்கும் கட்சியின் தலைமைப்பீடத்திற்குமிடையிலான சந்திப்பொன்று கடந்த சனிக்கிழமை மார்ட்டின் வீதியிலுள்ள கட்சியின் யாழ். மாவட்டத் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

கட்சியின் பொதுச் செயலரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்ற இச் சந்திப்பில் பிரதேச சபை உறுப்பினர்களின் சமகால நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

குறிப்பாக அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்பட் டுள்ளதோடு அதில் குறிப்பிட்டுள்ள விட யங்கள நிராகரிக்கப்பட்டும் உள்ளது.

இந்த நிலையில் அடுத்தாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எந்த விதத்திலும் யாரும் தோற்கடிக்க துணை போகக் கூடாது என கட்சியின் உயர் மட்டம் அறிவுறுத்தியுள்ளது.

அது மட்டுமன்றி கலைக்கப்பட்ட மானிப்பாய் தொகுதிக் கிளைக்கான புதிய நிர்வாகிகள் விரைவில் தெரியப்படுவார்கள் எனவும் ஒரு சிலரின் மீதான ஒழுக்காற்று நடவடிக்கைகள் இன்னும் நிலுவையிலிருப்பதாகவும் விரைவில் இறுதி முடிவெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கட்சியின் துணைப்பொதுச் செயலரும் மாகாண சபை தவிசாளருமான சி.வி.கே. சிவஞானம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (அ-9-23)

# யாழ்.தொண்டராசிரியர்களுக்கு கலந்துரையாடல் நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

எனவே, தொண்டராசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (அ-2)

# வாகன சாரதிக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

கரணவாய் அண்ணாசிலையடி பகுதியில் வீதியால் சென்றவரை வாகனத்தால் மோதியதுடன் அவரை கூரிய ஆயுதத்தாலும் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் வாகனத்தை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துக் சென்ற நெல்லியடிப் பொலிஸார் வாகன சாரதியையும் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இவ் வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் அண்மையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த வாகன சாரதியை பிணையில் விடுமாறு கேட்டுக் கொண்ட போது நெல்லியடிப் பொலிஸார் பிணை வழங்க மறுத்து விட்டனர்.

இதனையடுத்து குறித்த சாரதியை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டார். (அ-9-60)

# காரைநகரில் மணிவாசகரின் மூன்றாம் நாள் நிகழ்வுகள்


(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளமணிவாசகர்விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று இரவு 8.30 மணிக்கு ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சபையின் தலைவர் மு.சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வரவேற்புரையை நிர்வாக சபைத் தலைவர் ப.ஐங்கரன் நிகழ்த்தவுள்ளார்.

சிறப்புச் சொற்பொழிவுகளை காரைநகர் கம்பன் கழகத் தலைவர் த.சிவகுமாரன் "பக்தி வலையில் படுவோன் காண்க" எனும் தலைப்பிலும் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரமச்சாரி ஜக்ரத சைதன்யா சுவாமிகள் "தாமே தமக்குச் சுற்றமும் தாமே தமக்கு விதி வகையும்" எனும் தலைப்பிலும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து திருமதி கண்ணதாசன் ஸ்ரீதேவி தயாரித்துவழங்கும் "கானவன்வந்துவெளிப்படும் ஆயிடிலே" எனும் பொருளிலான நிருத்தியார்ப் பணமும் வெற்றியீட்டிய மாணவர்களின் நிகழ்வு களும் பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன. (அ-9)



பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வின் போது, விருந்தினர்கள் பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா மங்கல விளக்கேற்றுவதையும் பாடசாலை அதிபர் திருமதி [illegible] உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கோட்டக்கல்வி பணிப்பாளர் [illegible] மாணவர்களுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்களுக்குக் காரணம் சீரற்ற வாகனங்களே!!!

இலங்கையில் தற்போது வாகனங்களால் ஏற்படும் வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இவ் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு வீதி, பாவனைக்கு உகந்ததல்லாத வாகனங்கள் பாவிக்கப்படுவதும் ஒரு காரணமாகும். இத்தகைய வாகனங்களால் ஏனைய வாகனங்களுக்கும், ஆதனங்களுக்கும் சேதங்களை ஏற்படுத்துவது மட்டுமன்றி, பெரும் உயிராபத்துக்களையும் தோற்றுவிக்கின்றன.

இவ் விபத்து நிலைமையை கட்டுப்படுத்தும் பொருட்டு மோட்டார் போக்குவரத்து சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கமைய விபத்துடன் தொடர் புறும் வாகனத்தின் சாரதி மட்டுமன்றி, குறிப்பிட்ட வாகனத்தின் உரிமையாளரும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார். எனவே, சாரதி மற்றும் வாகனத்தின் உரிமையாளர் இருவரும் தமது வாகனத்தை மிகச் சீரிய நிலையில் பேணுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

**இது தொடர்பான சட்டத்தின் பிரிவு 145 பின்வருமாறு அமைகிறது: (மோட்டார் வாகனங்களின் நிலைமை)**

145 (1) மோட்டார் வாகனமெதுவும்

அ) அவ்வாகனத்திலுள்ள நபருக்கு அல்லது வீதியைப் பயன்படுத்தும் எவரேனும் ஆபத்தை, அசௌகரியத்தை, தொந்தரவை அல்லது தீங்கை :

(ஆ) வீதியிலுள்ள ஏதேனும் வாகனத்துக்கு ஆபத்தை : அல்லது

(இ) வீதியின் மீதுள்ள அல்லது அதற்கருகாமையிலுள்ள ஏதேனும்

ஆதனத்துக்கான சேதத்தை விளைவிக்காத அல்லது விளைவிக்கும் சாத்தியங் கொண்டிராத அத்தகையவொரு நிலைமையில் எல்லாவகையிலும் இருந்தாலொழிய, வீதியில் பயன்படுத்தலாகாது.

(2) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி (1) ம் உட்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுமிடத்து, அத்தகைய சாரதி, அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரும் தவரொன்றுக்குக் குற்றவாளியாதல்வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படின், பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாததும், இருபதாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பண மொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

(3) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி (1) ம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறுமிடத்தும், அதன் மூலம் எவரேனுமாளுக்கு ஊறுவிளைவிக்குமிடத்தும், அத்தகைய சாரதியும் அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படின், பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாததும், இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதுமான குற்றப் பணமொன்றுக்கு, அல்லது இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியல் தண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் தண்டனை ஆகிய இரண்டிற்கும், அத்துடன் ஆறுமா தங்களைக் கொண்டவொரு காலப் பகுதிக்கு அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(4) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி (1) ம் உட்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுமிடத்தும், அதன் மூலம் எவரேனுமாளுக்கு பாரதூரமான ஊறைவிளை விக்குமிடத்தும், அத்தகைய சாரதியும் அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டு மென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படின், இருபத்தையாயிரம் ரூபாவிற்குக் குறையாததும், முப்பத்தையாயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப் பணமொன்றுக்கு, அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியல் தண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் தண்டனை ஆகிய இரண்டிற்கும், அத்துடன் ஆறுமாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) ஒரு மோட்டார் வாகனத்தின் சாரதி (1) ம் உட்பிரிவின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுமிடத்தும், அதன் மூலம் எவரேனுமாளின் மரணத்தை விளைவிக் குமிடத்தும், அத்தகைய சாரதியும் அத்தகைய மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படின், ஐம்பதாயிரம் ரூபாவிற்குக் குறையாததும், எழுபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாதது மான குற்றப் பணமொன்றுக்கு, அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியல் தண்டனைக்கு, அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியல் தண்டனை ஆகிய இரண்டிற்கும், அத்துடன் பன்னிரண்டு மாதங்களைக் கொண்டவொருகாலப்பகுதிக்கு அவரது சாரதி உரிமம் இடைநிறுத்தப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்."



**த. பேரின்பநாயகம்**
**ஓய்வுபெற்ற பிரதிபொலிஸ்மா அதிபர் ( போக்குவரத்து)**
**பணிப்பாளர், வீதிப் போக்குவரத்து கல்வி நிறுவகம்.**

# உடுவர காளி அம்பாள் சிலை விசமிகளால் உடைப்பு

## அ.இ.இந்துமாமன்றம் கண்டனம்

பதுளை மாவட்டத்திலுள்ள காலி எல உடுவர முருகன் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்ப்ட்டிருந்த 150 வருட பழைமை வாய்ந்த காளி அம்மன் சிலை விசமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டதையடுத்துஅகில இலங்கை இந்து மாமன்றம் பேரதிர்ச்சியும் மிகுந்த கவலையும் அடைந்தது. இவ் விடயம் குறித்து இந்துமாமன்றம் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இவ்வாறான அழிப்பு மற்றும் களவுகள் சம்பந்தமாக அகில இலங்கை இந்துமாமன்றம் உடனுக்குடன் சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன் அவை தொடர்பாகப் பொலிஸ்மா அதிபர், பாதுகாப்பு செயலர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இவற்றின் சூத்திரதாரிகள் கைது செய்யப்படவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை.

இச்செயல் இவ்வாறான அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களுக்கு ஒரு உந்து சக்தியாக இருப்பதாகவே அகில இலங்கை இந்துமாமன்றம் கருதுகிறது.

மீண்டும் மீண்டும் இந்து ஆலயங்களில் தெய்வ விக்கிரகங்கள் உடைத்து அழிக்கப் பட்டு வருவதும் பெறுமதி மிக்க பொருட்கள் கொள்ளையிடப்படுவதும் இந்து மக்களுக்கு பேரிடியைத் தரும் தொடர் நிகழ்வாக இருப்பதற்கு யார் பொறுப்பு ?

இந்த நாட்டில் சிறுபான்மையினராக இருப்பவர்களின் வணக்கத் தலங்களில் இப்படியான சட்டவிரோத நிகழ்வுகள் நடப்பதைத் தடுக்க அரசாங்கமும் நீதிக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்பான அதிகாரிகளும் தவறி விட்டனர் என இந்து மக்கள் விரக்தியுடன் ஆதங்கத்தைத் தொடர்ந்தும் சுட்டிக்காட்டியமைக்கு அரசாங்கமோ அல்லது பொலிஸ் திணைக்களமோ இதுவரை உரிய நடவடிக்கைகள் எதையும் எடுக்காதது கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

எனவே சகல மதத் தலைவர்களும் அரசியற் தலைவர்களும் இந்த அநியாயம் தொடராதிருக்க உத்தரவாதம் வழங்குமாறு அரசை வலியுறுத்த வேண்டும்.

இந்த நாட்டின் அரசியற் சட்டம் புத்த மதத்திற்கு முன்னிடம் கொடுத்து சகல சமயங்களும் சரத்துக்கள் 10 (மதச் சுதந்திரம்) 14(1) (உ)( மதத்தை பின்பற்றி ஒழுகும் உரிமை) தரும் உரிமைகளையும் அரசாங்கம் உத்தரவாதப்படுத்த வேண்டும் என சரத்து 9 இல் கூறியிருப்பதை அலட்சியம் செய்வது இந்த நாட்டின் அரசியலமைப்பை அவமதிக்கும் குற்றமாகும் என தெரிவித்துள்ளது. (அ)

# கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு 25 சதவீத போனஸ் அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான சட்டபூர்வ சபைகள், அரசாங்க கட்டுப்பாட்டு நிறுவனங்கள் ஆகிவற்றின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் வருட இறுதி போனஸை 25 சதவீதம் இவ்வாண்டு முதல் அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை அளித்துள்ளது.

இந்த நிதியாண்டில் இலாபத்தில் இயங்கும் அரச கூட்டுத்தாபனம், சபைகள் அரச கட்டுப்பாடு நிறுவன ஊழியர்களுக்கு 12 ஆயிரத்து 500 ரூபாவை போனஸாக வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடந்த ஆண்டு 10 ஆயிரம் ரூபாவே இவர்களுக்கு போனஸாக கொடுக்கப்பட்டது. நிதியமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதியின் யோசனைப்படியே இப்போனஸை அதிகரிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: 33உயரம்: 5'6"
தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்
தொ.இ: B/2634

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 64 செவ் 4 ல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: HNDA, Charted Accounting (Following) / முகாமைத்துவ உதவியாளர்
தொ.இ: B/2636

பிறப்பு: 1976 இந்து (V)
நட்சத்திரம்: உத்ராடம் 1
கி.பா: 17 ½ செவ் 1 ல
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L / மேற்பார்வையாளர்
தொ.இ: B/2637

பிறப்பு: 1979 இந்து (Prama)
நட்சத்திரம்: ஆயிலியம் 3
கி.பா: 38உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSc / PA (இத்தாலி)
தொ.இ: B/2640

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து (V)
நட்சத்திரம்: அனுசம் 4
கி.பா: 59 ½உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்
தொ.இ: G/2648


பிறப்பு: 1972 இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் 2
கி.பா: 24 ½ செவ் 4 ல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L / முன்பள்ளி ஆசிரியர்
தொ.இ: G/2649

பிறப்பு: 1976 இந்து (V)
நட்சத்திரம்: பூரம் 1 கி.பா: 33
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: பெண் விவாகரத்தானவர்
தொ.இ: G/2650

பிறப்பு: 1987 இந்து (V)
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: 52 செவ் 7 ல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: ICT, BA (Following)
தொ.இ: G/2654

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு மாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயம் மார்கழி திங்கள் முழுநிலா நாள் கலை விழாவை நேற்று சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடத்தியது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுக்கு மறவன்புலவு அறிஞர் ச.சஞ்சிதானந்தம் நினைவுப் பரிசில் வழங்குவதையும் மறவன்புலவு அறிஞரை த.தே.கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா கௌரவிப்பதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன், சாவகச்சேரி செய்தியாளர்)

# யதார்த்தத்தை உணர்ந்து இலட்சியத்தை அடையும் வழியை சீரமைத்து கொள்வதே புத்திசாலித்தனம்

## வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன்

சமஸ்டியும் ஒத்துழைப்பும் கிடைக்காமையால் எமது இளைஞர் வட்டுக்கோட்டை யில் தனித் தமிழீழம் என்ற தீர்மானத்தை இயற்றினார்கள். இத்தீர்மானத்திற்கு மாறான தீர்வுகளை ஏற்க மறுத்தமையினால் 2009 இல் நாம் பேரழிவினைச் சந்தித்தோம். எனினும் எமது பிரச்சினைகள் இப்போராட்டத்தினால் உலகளவில் நோக்கப்பட்டமை எமக்கு ஆறுதல் அளித்துள்ளது. ஆகவே இலட்சியம் தான் முக்கியம் என்று விட்டு யதார்த்தத்தைக் கோட்டை விடுவதில் பயனில்லை. இலட்சியங்களை மீள் பரீசிலித்து முன் செல்வதே புத்திசாலித் தனம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட மார்கழி திங்கள் முழுநிலா கலை நிகழ்வு நேற்று சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரியில் மீண்டும் ஒரு பொது நிகழ்வில் கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். கலை, கலாசார நிகழ்வுகளை இவ்வாறு நடத்துவதால் பொதுப் பண்பாட்டை எமது மாணவ, மாணவியர்க்கு அவை உணர்த்துவன என்று எதிர் பார்க்கலாம். இது ஒரு வித ஒற்றுமைப்பாட்டை எமது மாணவ சமுதாயத்தினுள் உள்நுழைக்க ஏதுவாக அமையும். உங்கள் முயற்சி நன் முயற்சியாக அமையட்டும் என்று வாழ்த்துகின்றேன். பழையன கழிதலும் புதியன வருதலுந் தான் வாழ்க்கையின் நிரந்தர குணாம்சமாகும். இதனால்தான் புத்த பெருமான் மாற்றமொன்றே இந்த மாற்றமுறும் மாநிலத்தில் மாறாததொன்று என்றார்.

இதில் விசித்திரம் என்னவென்றால் புதியன வந்தாலும் எங்கள் மனங்கள், சிந்தனைகள், ஆசைகள் என்பன பழையனவற்றை விட்டு விடா. அவற்றிலேயே இலயித்திருப் பன. அதை நான் குறை கூறவில்லை. ஆனால் எமது சிந்தனைக்கும் யதார்த்தத்துக்கும் இடையில் இடைவெளி காணத் தொடங்கும் யதார்த்தமும் இலட்சியமும் என்று வேண்டுமானால் தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ளலாம்.

இன்று எமது தமிழ் மக்கள் வாழ்க்கையிலும் இந்த யதார்த்த இலட்சிய முரண்பாடு எழுந்துள்ளது. அதனால் எம்முள் பலவித பாகுபாடுகளும் பகைமைகளும் தலை தூக்கியுள்ளன. இந்த முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டுவர என்னால் முடியாது. ஆனால் இப்பேர்ப்பட்ட ஒரு முரண்பாடு எங்கள் உள்ளங்களில் எழுந்துள்ளனவா என்று எங்கள் ஒவ்வொருவரிடமும் கேட்டு அதைப் பரிசீலித்துப் பாருங்கள் என்று என்னால் கேட்க முடியும். உங்கள் அனுசரணையுடன் அந்தப் பரிசீலனையை இப்பொழுது மேற்கொள்வோம்.

எமது தமிழ் மக்களின் பழைய அரசியல் சிந்தனைகளை பரிசீலித்துப் பார்த்தோமானால் சுதந்திரம் கிடைத்த காலத்தில் சிங்கள மக்களின் அரசியல்த் தலைவர்களுடன் ஒத்துழைத்துச் செல்வோம் என்ற சிந்தனை முதலில் இருந்தது.

ஆனால் சிங்கள மக்கட் தலைவர்கள் இந்திய வம்சாவழியினரின் வாக்குரிமையைப் பறித்த போது எம்மவரிடையே முரண்பாடுகள் வளரத் தொடங்கின.

அதாவது ஒத்துழைப்பு அமைதிக்கு வித்திடும் என்றது ஒரு சாராரின் எதிர்பார்ப்பு அல்லது இலட்சியம். எனினும் தமிழ்ப் பேசும் மலையகத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தது யதார்த்தம்.

பின்னர் தமிழ் மக்களிடையே போட்டிகள் உருவெடுத்தன. ஒருவர் சமஷ்டி என்று கூற அதனை பெரும்பான்மையினர் தர மறுத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டார் மற்றவர். இரு தரப்பாரும் இவ்வாறு பிரச்சினைப்பட தொடர்ந்து வந்த பெரும்பான்மையின அரசாங்கங்கள் தாம் நினைத்தவற்றை நடைமுறைப்படுத்தி வந்தன. கடைசியில் சமஷ்டியும் கிடைக்கவில்லை. ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை. அப்பொழுது தான் தமிழ் ஈழமே ஒரேயொரு தீர்வு என்றது வட்டுக்கோட்டைத் தீர்மானம்.

அப்போது அதாவது 1976 ஆம் ஆண்டில் இலட்சியம் தமிழ் ஈழமாக இருந்தது. அப்போதைய யதார்த்தமோ கையறு நிலையாக இருந்தது.

பின்னர் இளைஞர்கள் போர்க் கொடி ஏற்றினர். தமிழீழம் மட்டுமே எமது இலட்சியம் என்றார்கள். சர்வதேச அனுசரணையுடன் கூடிய தமிழீழத்திற்கு அண்மைத்தைய தீர்வுகளை ஏற்க மறுத்தார்கள் எம் இளைஞர்கள்.

அன்புடன் பாலசிங்கம் போன்றவர்களின் அறிவுரையை நிராகரித்தார்கள். அரசியல் அனுபவம் இருந்திருந்தால் கொடுத்ததை எடுத்து உரியதைச் சாதித்திருக்கலாம். அங்கு தமிழீழம் மட்டுமே இலட்சியமாக இருந்தது. ஆனால் ஒரு அளவுக்குத் தனித்த வாழ்க்கை வடமாகாணத் தமிழ் மக்களுக்கு இருந்து வந்தது. ஆனால் போர் தொடர்ந்து கொண்டிருந்தது. அதுதான் அப்போதைய யதார்த்தம்.

கடைசியில் 2009 இல் எமக்குக் கிடைத்த எமது யதார்த்தம் எல்லாவற்றையும் இழந்த நிலை சகலதையும் பறிகொடுத்த நிலை. ஆனால் எமது பிரச்சினைகள் உலகளவில் நோக்கப்பட்டதே ஒரே ஒரு ஆறுதல்.

எனினும் எமது இலட்சியங்களோ தற்போது பலதரப்பட்டதாகியுள்ளன. இதைத்தான் நான் இன்று கூற முன்வந்துள்ளேன். யதார்த்தங்களை கணக்கில் எடுத்து எமது இலட்சியங்கள் அமைந்தால் பாதிப்புக்கள் குறைவன. இல்லையேல் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும். இன்று ஏற்பட்டுள்ளது.

இன்று எம் மக்களிடையே மூன்று விதமான மனோநிலை கொண்டவர்கள் உள்ளார்கள். மிகக் குறைந்த தொகையினர் இன்னமும் ஒத்துழைப்புத்தான் சிறந்தது என்கின்றனர். அவர்களுக்குத் தமது தனிப்பட்ட நல உரித்துக்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆசை. அவர்கள் இலட்சியம் பணிந்து போய் அமைதி காப்போம் என்பது.

இரண்டாவது குழுவினர் பெரும்பான்மையாக வெளிநாட்டில் இருக்கின்றார்கள். அவர்களின் மனோ நிலையைப் பிரதிபலிப்பவர்கள் உள்நாட்டிலும் இருக்கின்றார்கள். அவர்கள் ஆயுதமேந்தியோர் இலட்சியங்களை ,ஆசைகளை இன்னமும் பிரதிபலித்துக் கொண்டே இருக்கின்றார்கள். வெளிநாடுகள் பல அந்த இலட்சியங்களைச் சிதைக்க உறுதுணையாக இருந்தன என்பதை அறிந்திருந்துங் கூட வெளிப்படையாகத் தமது மனோநிலையை வெளிப்படுத்திக் கொண்டு வருகின்றனர். உள்ளூரின் யதார்த்த நிலை பற்றி அவர்களுக்குக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை. இலட்சியம் தான் அவர்களுக்கு முக்கியம். அதையும் நான் குறை கூறவில்லை. காரணம் யதார்த்தங்களை உள்வாங்குபவன் நான்.

மூன்றாவது மனோநிலையைக் கொண்டவர்கள் இலட்சியத்தையும் யதார்த்தத்தையும் ஐக்கியப்படுத்த முடியாது என்று தெரிந்துங் கூட அடைய முடியுமான இலட்சியத்தை வெளியிட்டு அது நோக்கி முடிந்த வரையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். மூன்றாவது மனோநிலை தான் வடமாகாண சபையினரின் பொதுவான கருத்து.

எமது ஆயுதப் போராட்டத்தை முறியடிக்க உதவியவர்களுள் வெளிநாட்டு அரசாங்கங்கள் பல. அப்போது அவர்கள் போராளிகளின் நடவடிக்கைகளைப் பயங்கரவாதம் என்று அடையாளங் கண்டார்கள். அதனால் பாவம் இலங்கை அரசு அவர்களுக்கு உதவ வேண்டும் அல்லது முறியடிக்காவிட்டால் பயங்கரவாதம் எமது நாட்டுக்கும் வந்துவிடும் என்ற மனோநிலையில் உதவிகள் புரிந்தார்கள். ஆனால் போர் முடியும் போது தான் தெரிந்தது பயங்கரவாதம் இளைஞர்களின் தனிப்பட்ட சொத்து அல்ல என்பது. இப்பொழுது யதார்த்தத்தை ஓரளவு புரிந்து கொண்டு நடந்து வருகின்றார்கள் சர்வதேச அரசாங்கங்கள்.

இவ்வளவையும் நான் இங்கு குறிப்பிட்டமைக்குக் காரணம் இலட்சியங்களையும் யதார்த்தத்தையும் விளக்கப்படுத்தவே. இலட்சியங்கள் கனவுகள். யதார்த்தம் நாம் இப்பொழுது இருக்கும் நிலை. முன்னைய இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் கனவு கானுங்கள் என்றார்.

உண்மைதான் கணவுகளை நனவாக்க உழைப்பது தான் வாழ்க்கையின் குறிக்கோள். எவ்வளவுக்கு எவ்வளவு கூர்ந்து நோக்கி அடைய வேண்டிய இலட்சியத்தின் ஒவ்வொரு அலகையும் கவனத்திற்கு எடுத்து அவற்றை அடைய வேண்டி முன்னேறுகின்றோமோ அந்த அளவுக்கு நாம் இலட்சி யங்களை அடையலாம். ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கின்றது.

எமது இலட்சியங்களுக்கு நேரெதிரான இலட்சியங்கள் எமது எதிரிகளுக்கும் இருக்கலாம். இங்குதான் யதார்த்தம் முக்கியத்துவம் பெறுகின்றது. யதார்த்தத்தை மனதில் கொண்டு இலட்சியங்களை மீள் பரிசீலித்து முன் செல்லுவதே புத்திசாலித்தனம் என்பது எனது கருத்து.

சென்ற நூற்றாண்டின் மத்திய கால கட்டத்தில் உலகில் ஹொக்கி விளையாட்டில் மிகப் பிரசித்தி பெற்ற அணி இந்தியாவாக இருந்தது. அதற்குக் காரணம் அவர்கள் பந்தை ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு மிக விரைவாகச் செலுத்திக் கொடுத்து அடுத்த அணியின் கோல் வரையில் முன்னேறி கோல்களையும் போடக்கூடியதான திறனைப் பெற்றிருந்தார்கள்.

அவர்களின் ஒத்துழைப்படிப்படியிலான வேகத்தை மற்றைய அணிகளால் கட்டுப்படுத்த முடியவில்லை. உடனே இது தான் யதார்த்தம் என்று தெரிந்து கொண்ட நெதர்லாந்து, ஜேர்மனி போன்ற ஐரோப்பிய அணிகள் இந்த யதார்த்தத்திற்கு மாற்று நடவடிக்கை என்ன என்று சிந்தித்தார்கள்.

ஒருவரிடம் இருந்த மற்றவருக்கு மிகவேகமாகப் பந்தைச் செலுத்தி வந்த போது எப்படியாவது பந்தைத் தடுத்து நிறுத்தி உடனே மிக வலுவானக அதை இந்திய அணியின் பக்கத்திற்கு அடித்து விடுவதே அவர்களின் மாற்று உபாயமாக இருந்தது.

இந்திய அணியின் திறன் பந்தைச் செலுத்திக் கொடுப்பதில் அவர்களுக்கிருந்த ஒற்றுமையிலும் ஒருமைப் பாட்டிலும் தங்கியிருந்தது. அதை உடைத்தால் அவர்களை நிலை குலையச் செய்யலாம் என்று கருதி இவ்வாறு செய்து ஐரோப்பிய நாடுகள் வெற்றியும் பெற்றார்கள்.

அதாவது இலட்சியம் தான் முக்கியம் என்று விட்டு யதார்த்தத்தைக் கோட்டைவிடுவதில் பயனில்லை. யதார்த்தத்தை உணர்ந்து, புரிந்து இலட்சியத்தை அடையும் வழியை மறுசீரமைத்துச் செல்வதே புத்திசாலித்தனம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4-29)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண அரசுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி எமது பிரதேச சுகாதாரத்துறையை மேம்படுத்துக

## ஆனந்தன் எம்.பி.கோரிக்கை

(குருமன்காடு)

நீண்ட எதிர்பார்ப்புகளின் பின்னரும் பல்வேறு தடைகளின் பின்னரும் இப்பொழுது வடக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு மாகாண அரசு உருவாகியுள்ளது.

இந்த அரசாங்கம் முதலில் அதனை ஒரு நிர்வாகம் என்று ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்க முன்வரவேண்டும். சுகாதாரம் முதற்கொண்டு உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அனைத்து அபிவிருத்திகளையும் அதனூடாகச் செய்வதற்கு இந்த அரசாங்கத்திடம் ஒரு மனமாற்றம் ஏற்படவேண்டும்.

தகுதிபடைத்தவர்கள் ஆட்சியில் அமர்ந்திருக்கின்றார்கள் என்ற உண்மையை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேணடும். இவ்வாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.சிவசக்தி ஆனந்தன் கடந்த 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சுக்கான வரவு செலவு நிதியொதுக்கீடு மசோதா தொடர்பான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டம் குமுழமுனையில் ஆயிரத்து 200 குடும்பத்தவர்கள் வசிக்கின்றனர். இங்கு சிறிய காயங்களுக்கோ அல்லது ஏதேனும் அவசர மருத்துவ தேவை என்றாலோ ஒரு ஆரம்ப சுகாதாரமையம் கூட இல்லாதுள்ளது. இங்குள்ள மக்கள் 10கி.மீ.தூரத்திலுள்ள முல்லைத்தீவு வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது. கரப்பிணித் தாய்மார்களுக்கு பாதிவழியிலேயே பிரசவம் ஏற்படும் ஆபத்துமுள்ளது. இவ்வாறு நடைபெற்றுமுள்ளது. ஆகவே இப்பிரதேசத்தில் ஒரு மத்திய மருந்தகமும் மகப்பேற்று வைத்தியசாலையையும் நிர்மாணிக்க வேண்டியது அவசியமாகும்.

சுகாதார துறையினர் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளும் அதற்கான பரிந்துரைகளும்.

✶ பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்களில் வைத்தியர்களுக்கான பாரிய பற்றாக்குறை நிலவுகின்றது.

தற்பொழுது வடமாகாணத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் 99 வைத்தியசாலைகளில் 54 பிரதேச வைத்தியசாலைகளும் 34 ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்களும் அடங்குகின்றன. இவற்றில் யாழ்ப்பாணத்தில் 20 வைத்தியசாலைகளும் முல்லைத்தீவில் 9 வைத்தியசாலைகளும் கிளிநொச்சயில் 8 உம் மன்னாரில் 7உம் நிரந்தர வைத்தியர்கள் இல்லாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றன. மேலும் 3 வைத்தியசாலைகள் மூடப்பட்டநிலையிலுள்ளன.


✶ தாதிய உத்தியோகத்தர்களுக்கான பாரிய பற்றாக்குறை.

வடமாகாணத்தில் தாதியர்களுக்கு 825 அனுமதிக்கப்பட்ட ஆளணியுள்ள போதும் 560 பேரே தற்போது கடமையாற்றிக் கொண்டிருக்கின்றனர். மேலும் தாதியர்களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சையின்போது தகுதியான விண்ணப்பதாரிகள் போதுமானதாக இல்லை.

✶ துணை மருத்துவ சேவையிலுள்ளவர்களின் பாரிய பற்றாக்குறை.

துணை மருத்துவ சேவையில் பிரதானமாக மருந்தாளர், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், கதிரியலாளர், இயன்மருத்துவ உத்தியோகத்தர், தொழின்முறை சிகிச்சையாளர், மருத்துவமாது மற்றும் பொது சுகாதார உத்தியோகத்தர்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகின்றது.

மேலும் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் மருத்துவ மாது எவரும் கடமையில் இல்லாததாலும் பயிற்றப்பட்டவர்களே தற்போது சேவையில் உள்ளதாலும் அங்கும் மருத்துவ மாதுக்களை நியமிக்க நடவடிக்கை



எடுக்கப்பட வேண்டும்.

✶ அங்கவீனர்களுக்கான பராமரிப்பு வசதி போதாமை.

வடமாகாணத்தில் போரினால் அதிகளவானோர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான வாழ்வாதாரம் ஒரு பெரிய சவாலாகவே இருந்துவருகின்றது. எனவே, அங்கவீனத்தின் தன்மை அடிப்படையில் மாதாந்த ஊக்குவிப்புத் தொகையாக 5ஆயிரம் ரூபாவை வழங்குவதுடன் அவர்களுக்கான மருத்துவ உபகரணங்களையும் வழங்குவதற்கு முன்வரவேண்டும். நூற்றுக்கணககான இளைஞர்களும் யுவதிகளும் முள்ளந்தண்டு பாதிப்புற்ற நிலையில் அடுத்தவரின் உதவியிலேயே தங்கியிருக்க வேண்டிய நிலையிலுள்ளனர். இவர்களுக்கான மருத்துவ சாதனங்களையும் மருந்துப் பொருட்களையும் மாதாமாதம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவர்களைப் பராமறிப்பவர்கள் இவர்களை ஒரு சுமையாகக் கருதாமல் பணிவிடை செய்வதற்கு அவர்களுக்கும் ஊக்குவிப்புத்தொகை வழங்குவதும் அவசியமாகும்.

✶ நோயாளர்களை காவிச்செல்லும் வண்டிக்கான பற்றாக்குறை.

வடமாகாண வைத்தியசாலைகளில் பிரதானமாக பொது, தள மற்றும் பிரதேச வைததியசாலைகளில் நோயாளர் காவும் வண்டிக்கான தேவை 35 ஆகவுள்ளது. ஜப்பான் அரசாங்கத்தின் அனுசரணையுடன் 30 காவுவண்டிகளை பெற்றுத்தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் இதுவரை கிடைக்கவில்லை.

✶ தங்குமிட வசதிக்கான பற்றாக்குறை.

பொது போக்குவரத்து வசதி சீரின்மையால் உத்தியோகத்தர்கள் நீண்ட தூரம் பிரயாணம் செய்வதில் அசௌகரியங்களை சந்திப்பதுடன் தரமான சுகாதார சேவையை வழங்கமுடியா துள்ளது. அத்துடன் தங்குமிட வசதியை ஏற்படுத்தும் பொருட்டு தரமான சுகாதார சேவையை வழங்க முடியும் என்பது எல்லோரதும் எதிர்பார்பபாகும். ஆனால் தங்குமிட வசதியை ஏற்படுத்துவதற்கு ஒதுக்கீடு போதுமானதாக இல்லை

✶ மூலதன மற்றும் மீண்டுவரும் செல வினங்களுக்கான ஒதுக்கீடு போதாமை.

வருடாந்த பாதீட்டில் மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்களுக்கான ஒதுக்கீடு போதாமலுள்ளது. பிரதானமாக மீண்டுவரும் செலவினங்களில் மேலதிக நேரக்கொடுப்பனவு, எரிபொருட் செலவு மற்றும் ஏனையவைகளுக்கான ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. மேலதிக நேரக்கொடுப்பனவு வழங்கப்படாமையினால் தொழிற்சங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

மேலும் மூலதன செலவில் பிரதானமாக அரசாங்கத்தின் நிதி மூலமான மாகாணத்திற்கென்று குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதிக்கான ஒதுக்கீடு போதுமானதாக இல்லை.


வவுனியாவில் 2005 இற்கு பின்னர் கடந்த எட்டு வருடங்களாக பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளருக்கான நிரந்தரப் பணி நியமனம் வழங்கப்படாதுள்ளதுடன் அதற்கான விண்ணப்பமும் கோரப்படாமலுள்ளது. ஆனால் சுகாதாரத் திணைக்களத்தின் நிர்வாகப் பணிக்கென்று இந்த வருடம் 60இற்கும் மேற்பட்ட மருத்துவ உத்தியோகத்தர்கள் பட்ட மேற்படிப்பை முடித்துவிட்டு நிர்வாகத்துறைக்குத் தகுதி படைத்தவர்களாக இருக்கின்றனர். அவர்களில் ஒருவரை வவுனியாவிற்கு நிரந்தரமாக நியமிப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். வவுனியாவிலும் ஒரு சிறுநீரக நோய் சிகிச்சைப் பிரிவை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது.

வன்னிக்கென்று இருதயநோய் சிகிச்சைப் பிரிவு இல்லை. அதனையும் உருவாக்க வேண்டியுள்ளது.

அனைத்து வைத்தியசாலைகளிலும் மனோதத்துவ நிபுணர்களை நியமிப்பதும் அவசியமானதாகும்.


சுகாதாரத்துறையில் நிலவும் ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் போன்றவற்றில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்கும் வகையில் தாங்களே முயற்சிகளை மேற்கொள்வதற்கும் ஆட்சேர்ப்பில் மருத்துவ சேவையின் தரம் குறையாத வகையில் தகுதிகளை நிர்ணயிப்பதற்கும், எங்கெங்கு எத்தகைய சுகாதார அமைப்புக்களை நிறுவுவது என்பதை அவர்களே தெரிவு செய்து முடிவெடுக்கும் வகையிலும் வடமாகாண அரசின் சுகாதார அமைச்சிற்குப் போதிய நிதியொதுக்கீடு செய்து ஆளுநர் மற்றும் மத்திய அரசின் தேவையற்ற குறுக்கீடுகள் இன்றி வடமாகாண அரசு சுதந்திரமாகச் செயற்படுவதற்கு இந்த அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும் இதற்கு இந்தச் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன் என்று கூறினார்.(ம-250)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அவுஸ்திரேலியா,சிட்னி பழைய மாணவர் சங்கத்தின் கல்வி எங்கள் மூலதனம் செயற்றிட்டத்தின் கீழ் வடமாகாண பாடசாலை நூலகங்களுக்கான நூல்களை கையளிக்கும் 2 ஆம் கட்ட நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றபோது... (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

## பட்டதாரி பயிலுநர்கள் 351 பேருக்கு நியமனம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாட்டத்தில் பட்டதாரி பயிலுநராகக் கடமையாற்றிய 351 பட்டதாரிகளுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன. பிற்பகல் 4 மணி முதல் 6.15 மணி வரையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலாளர் செல்லமுத்து சிறிநிவாசன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போதே இந்த நியமனங்கள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் இந்த நியமனக் கடிதங்களை வழங்கினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் 4 பிரதேச செயலக பிரிவுகளிலும் பயிலுநர்களாகக் கடமையாற்றியவர்களுக்கே இந் நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் 4 பிரதேச செயலாளர்களும் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சரவணபவன் மோகனபவன், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரன், கமநல சேவைகள் ஆணையாளர் எஸ்.தயாறூபன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (மு)

## வீதியை புனரமைக்குக



(கண்டாவளை)

கண்டாவளை பிரதான வீதி புனரமைக்கப்படாமையால் அவ் வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குண்டும் குழியுமான இவ் வீதியால் பயணிப்போர் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையுள்ளது.

எனவே உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுத்து வீதியைப் புனரமைத்து போக்குவரத்திற்கு உதவுமாறு அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-263)

## வறிய குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலர் பிரிவல் 14 விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும், திவிநெகும திட்டத்தின் கீழ்வறிய குடும்பங்களுக்கு கோழிக் குஞ்சுகள் வழங்கும நிகழ்வும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதிதலைவருமாகிய மு. சந்திரகுமார் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேலதிக அரசாங்க அதிபர் செல்லமுத்து சிறிநிவாசன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகன பவன், கரைச்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அமரசிங்கம் கேதீஸ்வரன், கரைச்சி உதவி பிரதேச செயலர் செல்வி சிவகாமி இராசதுரை, கரைச்சி பிரதேச செயலக உதவித்திட்ட மிடல் பணிப்பாளர் ச.பி. அமலராசா ஆகியோரும் இந் நிகழ்வில கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும திட்டத்தின் கீழ் கரைச்சி பரதேச செயலர் பிரிவில் 42 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் தலா ஒவ்வொரு வறிய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு தலா 30 கோழிக்குஞ்சுகள் வீதம் வழங்கப்பட்டன. (ம-254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிராயசித்தம் உண்டா?

குறுஞ்சி என்ற ஊரில் முனுசாமி என்ற ஒருவன் இருந்தான். அவன் ஒரு முறை தேவையில்லாமல் ஒரு கிராமவாசி மீது பழி சொல்லி பஞ்சாயத்தைக் கூட்டி னான்.

பஞ்சாயத்திலும் கிராமவாசிக்கு தண் டனை கிடைத்தது. பின் வீட்டிற்கு வந்த முனுசாமியின் மனசாட்சி அவனை உறுத் தியது.


கிராமவாசி மீதுதான் பழி சொன்னதை எண்ணி வருந்தினான். எனவே, தன் பாவத்திற்கு ஏதாவது பிராயசித்தம் உண்டா என்று தேடினான்.

என்ன பிராயசித்தம் செய்வதென்று அவனுக்குப் புரியவில்லை. எனவே, அந்த ஊரிலிருந்த ஒரு துறவியிடம் சென்றான்.

“துறவியாரே! நான் இந்த கிராமத்தில் வசிக்கும் ஒரு கிராமவாசி மீது வீண் பழி சொல்லிவிட்டேன். அது என் மனதை உறுத்துகிறது. அந்தப் பழி சொன்ன பாவத்தில் இருந்து தப்பிக்க எனக்கு வழி கூறுங்கள்!” என்று கேட்டான்.

துறவி சிறிது யோசித்து விட்டு, “இன்று இரவு ஐந்து கிலோ இலவம் பஞ்சை எடுத்துப் போய் அந்த கிராமவாசியின் வீட்டுக்கு முன்பு பரப்பி போட்டுவிட்டு வந்து விடு. நாளை வந்து என்னைப் பார்,” என்று கூறினார்.

முனுசாமியும் பஞ்சைக் கொண்டு சென்று கிராமவாசியின் வீட்டில் முன் பரப்பிவிட்டான்.



பின் மறுநாள் சென்று துறவியை பார்த்தான். “துறவியாரே! என் பாவம் போய் இருக்குமா இந்நேரம்?” என்று கேட்டான். உடனே துறவி, “முனுசாமி! நீ இப்போது அந்த கிராமவாசியின் வீட்டிற்குச் செல். அவன் வீட்டுக்கு முன் நீ நேற்றிரவு பரப்பிவைத்த பஞ்சை மீண்டும் பொறுக்கிக் கொண்டுவா,” என்று கூறினார்.

முனுசாமி மிகுந்த ஆவலுடன் ஓடினான்.

ஆனால், ஒரு விரல் அளவு பஞ்சுகூட அங்கு இல்லை. எல்லாம் காற்றில் பறந்து போய்விட்டிருந்தது. அதனைக்கண்ட முனுசாமி திடுக்கிட்டான். மீண்டும் துறவியிடம் ஓடி வந்தான்.

“துறவியாரே! நேற்றிரவு நான் கிராம வாசி வீட்டின் முன்னால் போட்டுவிட்டு வந்த பஞ்சில் ஒரு துளிப் பஞ்சாவது இப்போது அங்கு இல்லை. என்ன செய்வது?” என்று கேட்டான்.

துறவி சிரித்துவிட்டு, “முனுசாமி! நீ விரித்துப் போட்டுவிட்டு வந்த பஞ்சை இப்போது மீண்டும் எப்படி அள்ள முடியாதோ, அதேபோல நீ ஒருவர் மீது கூறிய பழியையும் அதனால் உனக்கு ஏற்பட்ட பாவத்தையும் மாற்ற முடியாது.

திருப்பி வாரி எடுக்க முடியாத பஞ்சைப் போன்றதுதான் உன் பழிச் சொற்களும், அவற்றையும் இனி திருப்பி வார முடியாது.

ஆனால், நீ செய்த தவறை எண்ணி மனம் வருந்தினால், அதுவே உன் பாவத்திற்கு தகுந்த பிராயச்சித்தம்.

உன் பாவங்கள் பஞ்சைப் போலவே பறந்துவிடும். எனவே, இறைவனிடம் உன் தவறுக்காக வருந்தி மன்னிப்பு கேள். அதுவே நீ பாவத்திலிருந்து தப்பும் வழி,” என்று கூறினார்.

முனுசாமிக்கு உண்மை புரிந்தது. அன்று முதல் அவன் மற்றவர்கள் மீது பழி சொல்லும் குணத்தையே விட்டு விட்டான். நல்லவன் என்று உலகம் அவனை வாழ்த்தியது.

பிறர் மீது வீண்பழி சுமத்துவதால் பலன் ஏதும் கிடைக்கப் போவதில்லை என்பதை உணர்ந்தான் முனுசாமி.

குட்டீஸ்களே! இந்த உலகில் நாம் பிறருக்குத் தரும் துன்பம், பழி இவற்றிலிருந்து மீளவே முடியாது. எனவே, எப்போதும் மற்றவர்களைப் பழி சொல்லும் குணத்தை விட்டு விடுங்கள். அது நல்ல குணமல்ல.

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆




- 942-நோர்மண்டியின் முதலாம் வில்லியம் படு கொலை செய்யப்பட்டான்.
- 1398-சுல்தான் மெஹ்மூடின் படைகளை டில்லியில் வைத்து டீமூர் படைகள் தோற்கடித்தன.
- 1577-பிரித்தானிய அரசி முதலாம் எலிசபெத்துக் காக அமெரிக்கர்களின் பசுபிக் பெருங்கடல் பகுதியை ஆராய்வதற்காக பிரான்சிஸ் டிரேக் பிரித்தானியா, பிளைமவுத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்டான்.
- 1718-பெரிய பிரித்தானியா ஸ்பெயினுடன் போரை அறிவித்தது.
- 1819-சிமோன் பொலிவார் பெரிய கொலம்பியாவின் விடுதலையை அறிவித்தான்.
- 1834-அயர்லாந்தின் முதலாவது தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1962-அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் டென்னசி, மிசிசிப்பி, கென்டக்கி ஆகிய மாநிலங்களில் இருந்து யூதர்கள் வெளியேற்றப்பட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- 1903-றைட் சகோதரர்கள் வடக்கு கரொலைனாவில் முதன்முதலில் பன்னிரெண்டு வினாடிகள் எஞ்சின் உந்தும் ஊர்தியில் பறந்தனர்.
- 1926-லித்துவேனியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து மக்களாட்சி அரசு கலைக்கப்பட்டு அண்டானஸ் சிமெத்தோனா ஆட்சியைப் பிடித்தார்.
- 1941-இரண்டாம் உலகப்போர்: ஜப்பானியப் படைகள் வடக்குபோர்ணியோவில் இறங்கினர்.
- 1947-இலங்கைத் தமிழரசுக் கட்சி அமைக்கப்பட்டது.
- 1961-கோவாவை இந்தியா, போர்த்துக்கல்லிடம் இருந்து கைப்பற்றியது.
- 1967-முன்னாள் ஆஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் விக்டோரியா மாநிலத்தில் போர்ட் கடலில் நீந்தும்போது காணாமற்போனார். இவர் இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.
- 1970-போலந்தில் கிதீனியா நகரில் தொடரூந்துக்களில் இருந்து இறங்கிய தொழிலாளர்களை நோக்கிச் சுட்டதில் பலர் கொல்லப்பட்டனர்.
- 1986-போதைப் பொருள் வர்த்தகத்துக் கெதிராகக் குரல் கொடுத்த கொலம்பியாவின் பத்திரிகையாளர் கில்லெர்மோ இசாசா சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1989-25 ஆண்டுகளின் பின்னர் பிரேசிலில் முதலாவது பொதுத் தேர்தல் இடம்பெற்றது.

பிறப்புக்கள்

- 1908-வில்லாரட் ஃபிராங்க் லிப்பி, அமெரிக்க இயற்பியல் வேதியியலாளர் (இ.1980)
- 1959-ரஞ்சகுமார், ஈழத்தின் சிறுகதையாசிரியர்.
- 1972-ஜோன் ஆபிரகாம், இந்திய நடிகர்
- 1975-சுசந்திகா ஜயசிங்க, இலங்கையின் ஓட்ட விராங்கனை

இறப்புக்கள்

- 1947-ஜொஹான்ஸ் நிக்கொலஸ் பிரோன்ஸ்ட்டெட், டென்மார்க் நாட்டு வேதியியலாளர் (பி.1879)
- 1975-சோ.இளமுருகனார், ஈழத்துப் புலவர் (பி.1908)

சிறப்புநாள்

ஐக்கிய அமெரிக்கா- றைட் சகோதரர்கள் தினம்

பாலியல், பெண் தொழிலாளர்களுக்கெதிரான வன்முறையை நிறுத்தும் அனைத்துலக தினம்

### ஹரல்ட் எட்வர்ட் ஹோல்



ஹரல்ட் எட்வேர்ட் ஹோலட் 1908 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5 ஆம் திகதி பிறந்தார். இவர் ஆஸ்திரேலியாவின் 17 ஆவது பிரதமராக 1966 முதல் 1967 வரை இருந்தவர்.

இவர் விக்டோரியா மாநிலத் தின் செவியட் கடலில் குளிக்கும்போது திடீரென காணாமற் போனதையடுத்து இவரது பதவிக் காலம் 1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி இல் முடிவுற்றது.

அவர் இறந்ததை ஆஸ்திரேலிய அரசு டிசம்பர் 19 இல் அதிகாரபூர்வமாக அறிவித்தது. ஹோல்ட் மொத்தம் 32 ஆண்டுகள் நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறார். வியட்நாம் போரில் ஆஸ்திரேலியா இராணுவத்தை ஈடுபடுத்தியமைக்கு ஹோல்ட் இன்னமும் நினைவுகூரப்படுகிறார்.

ஹோல்ட் மிகவும் தீவிரமானன அமெரிக்க சார்புத் கொள்கையுடையவராக இருந்தார். அமெரிக்க அதிபர் லின்டன் ஜோன்சனுடன் மிக நெருக்கமான தொடர்பைப் பேணிவந்தார்.

வெள்ளை மாளிகையில் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் அமெரிக்க அதிபர் லின்டன் ஜோன்சனுடன் காணப்படுகிறார்.

ஹோல்ட்டின் இறப்புக் குறித்து பல வதந்திகள் பலராலும் முன்வைக்கப்பட்டன. அவர் தற்கொலை செய்து கொண்டார் அல்லது சீன நீர்மூழ்கிக் கப்பலினால் கடத்தப்பட்டால் என்றும் பலர் விவாதிக்கின்றனர்.

இதுவரையில் அவரது மரணம் மர்மமாக இருந்தாலும் பெரும்பான்மையானோர் பெரும் கடல் அலையினால் அடித்துச் செல்லப்பட்டு இறந்திருக்கலாம் என்றே நம்புகின்றனர்.

அவரது உடல் இதுவரையில் கண்டு பிடிக்கப்படாத நிலையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி மரணவிசாரணை அதிகாரியினால் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ அறிக்கையில் ஹோல்ட் கடலில் மூழ்கியே இறந்தார் என அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

# 16.12.2013 - 13.01.2014



## தனுசு

**மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதங்கள்**

**வந்த விருந்தினர்களை உபசரிப்பதில் வல்லவர்களாக விளங்கும் தனுசு இராசி நேயர்களே!**

**அரசுவழி நன்மைகள் கிடைக்கும் நேரம்!**

## அரசுவழி நன்மைகளைப் பெற்று ஆனந்தம் கொள்ளும் நேரமிது!

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் குரு வக்ரம் பெற்று உங்கள் இராசியைப் பார்க்கிறார். இராசிநாதன் வக்ரம் பெறுவதால் உடல் ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்படும் என்றாலும் பொதுவாக கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறுவது யோகம்தான்.

எனவே, எதிர்பார்ப்புக்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். இடையூறுகள் அகலும். மதிப்பும், மரியாதையும் உயரும். மகிழ்ச்சிக்கு வித்திடும் விதத்தில் தொழில் துறைகளிலிருந்து இலாபம் வந்து கொண்டேயிருக்கும். ஆயினும் மருத்துவச் செலவு கூடிக்கொண்டே செல்லும். இராசியிலேயே சூரியனும், புதனும் சஞ்சரித்து புத- ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார்கள். அதுமட்டுமல்ல, தர்மகர்மாதிபதி யோகமும் உருவாகிறது.

எனவே, போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். புகழ் கூடும். பேட்டி கொடுக்கும் அளவிற்கு பெரிய நிலைக்கு வர கிரக நிலைகள் சாதகமாக இருக்கின்றன. அரசியல்வாதிகளால் நன்மை கிட்டும். ஆறுமாதங்களாக நடைபெறாத சில காரியங்கள் சீரிய முறையில் இம்மாதம் நடைபெற்று செல்வ நிலையை உயர்த்தும். காரியங்களில் வெற்றி கிடைக்கும் விதத்தில் சனியும் உச்சம் பெற்று விளங்குகிறார்.

பதவி உயர்வில் இருந்த தடைகள் அகலும். பல நாட்களாக இருந்த எதிர்பார்ப்புகள் இப்பொழுது நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மேலதிகாரிகளிடம் அனுகூலமாக நடந்துகொள்வர். உங்களிடம் பொறுப்புக்கள் இருந்தபோது வந்திணைந்த நண்பர்கள், பொறுப்புக்களும், பதவிகளும் இல்லாதபொழுது விலகிச் சென்றிருக்கலாம். இப்பொழுது மீண்டும் உங்களுக்கு பொறுப்புக்கள் வந்து புகழ் ஏணியில் ஏறிச் செல்லப் போகிறீர்கள். மறுப்புச் சொன்னவர்கள் கூட இனி மகிழ்வோடு உதவி செய்வர். விலகிச் சென்ற கூட்டம் விரும்பி வந்து சேரும்.

இம்மாதம் வைகுண்ட ஏகாதசியன்று வைகுண்டவாசனை, வைதேகிப் பிரியனான விஷ்ணுவை முறையாக வழிபட்டு வருவது நல்லது. அது மட்டுமல்லாது அனுமன் ஜெயந்தியன்று அனுமனையும் வழிபாடு செய்து இனிய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளுங்கள். சனி இராசியைப் பார்க்கும் காலங்களில் இதுபோன்ற வழிபாடுகள் அவசியம் தேவை.

**மகர புதனின் சஞ்சாரம்!**

மகர இராசியில் புதன் ஜனவரி 2 ஆம் திகதி முதல் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். உறவினர்களின் வருகை அதிகரிக்கும். மனைவி, மக்கள் வழியில் எதிர்பாராத நன்மை கிடைக்கும். தங்கம், வெள்ளி வாங்க வேண்டுமென்ற ஆசை பூர்த்தியாகும். வீட்டில் நடைபெறும் சுபகாரியத்தை முன்னிட்டு விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வாழ்க்கைத் துணை வழியே இருந்த பிரச்சினைகள் அகலும்.

இம்மாதம் அன்புத் தோழிகளின் ஆதரவு கூடும் மாதமாகும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். அருகில் இருப்பவர்களோடு ஏற்பட்ட பகை மாறும். அடுத்த வீட்டார், அயலார்களின் ஒத்துழைப்போடு எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. கணவன்- மனைவிக்குள் கனிவு கூடும். பாசம் பொங்கும், நேசம் வளரும். அனுமன் வழிபாட்டையும், பெருமாள் வழிபாட்டையும் முறையாகச் செய்தால் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வும், பாராட்டும் கிடைக்கும்.


**வளர்ச்சியைக்கூட்டும் வக்ர குரு!**

இராசிநாதன் குரு இம்மாதம் வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். இந்த நிகழ்வு மார்ச் 2 ஆவது வாரம் வரை நீடிக்கிறது. இதன் பலனால் வீடு வாங்க வேண்டுமென்ற ஆவல் நிறைவேறும். விருப்பம் போல பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டு புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தேக நலனில் மட்டும் கொஞ்சம் அக்கறை தேவை. கோபத்தைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டு செயற்படுவது நல்லது.

தாய்வழி ஆதரவு கூடும். உறவினர்கள் பகை மறந்து செயற்படுவர். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் அதிகரிக்கும். வீடு மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். ஒரு சிலருக்கு நாடு மாற்றம் உருவாகலாம். என்ன இருந்தாலும் குருவின் பார்வை உங்கள் இராசியில் பதியும் பொழுது சொன்ன சொல்லை செயலாக்கும் வாய்ப்பு கிட்டும். சுகங்களும், சந்தோஷங்களும் கூடும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியம் சீராக இருக்கும்.

குருவின் பார்வை இராசியில் மட்டுமல்லாமல் 3,11 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, மூத்த சகோதரம், இளைய சகோதரம் ஆகியவற்றால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். முன்னேற்றத்தின் முதல்படிக்கு செல்ல அவர்கள் வித்திடுவர். உடன்பிறப்புக்களின் இல்லங்களில் நடைபெறும் சுபகாரியப் நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். வழக்குகளில் வெற்றி கிட்டும். வருமானம் போதுமானதாக இல்லையே என்று கிளைத்தொழில்கள் ஏதாவது தொடங்க நினைத்தால் அதற்கு கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

# சிவல்புரி சிங்காரம்



## மகரம்

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

**எந்தக் காரியத்தை எந்த நேரத்தில் செய்தால் வெற்றி கிடைக்கும் என்று அறிந்து வைத்திருக்கும் மகர இராசி நேயர்களே!**

**விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரும்!**

## விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேர்வதற்கான அறிகுறிகள் தென்படுகிறது!

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சனி 10 இல் உச்சம் பெறுவது யோகம்தான். 10 இல் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் சனியால் பதவி உயர்வு கிடைக்கும். பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். உதவி செய்யும் உள்ளங்கள் உங்களைத் தேடி வருவர். உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவீர்கள்.

வக்ர இயக்கம் இம்மாதம் ஏற்படுவது நன்மைதான். 12 க்கு அதிபதியான குரு 6 ஆம் இடத்தில் பரிவர்த்தனை பெற்று, வக்ரமும் பெறுகிறார். எனவே, பணியின் காரணமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிணிகள் அகலும். பிரபலமானவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து உதவிக்கரம் நீட்டுவர். துணிந்து செயற்பட்டு தொல்லைகளைப் போக்கிக் கொள்ள வழிவகுத்துக் கொள்வீர்கள்.

சப்தமாதிபதி 5 இல் உச்சம் பெற்று மாதம் தொடங்குவதால் சார்ந்திருக்கும் வாழக்கைத் துணைக்கு முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகம், தொழிலில் உயர்வு கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது அது கிடைத்து மகிழ்ச்சியடைவர். 6 ஆம் இடத்து குருவின் வக்ர இயக்கத்தால் கடன் சுமை பாதிக்கு மேல் குறையும். சுக ஸ்தானாதிபதி செவ்வாய் கன்னி இராசியில் சஞ்சரிக்கிறார். எனவே, தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட பாதிப்புக்கள் விலக மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. வாகனப் பழுது செலவுகள் அதிகரிக்கும்.

அஷ்டமாதிபதி சூரியன்12 இல் மறைவதால் சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுகட்டுவீர்கள். சினேகிதர்கள் மூலம் சில நன்மைகள் வந்து சேரும். என்ன இருந்தாலும் இராசிநாதன் இராகுவின் ஆதிக்கத்தில் சிக்கியதால் சொர்ணமயமான வாழ்வு அமையவும், துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்து உதவவும் நாக சாந்தி செய்வது நல்லது.

வைகுண்ட ஏகாதசியன்று திருவேங்கடனையும் வரும் அனுமன் ஜெயந்தியன்று ஆஞ்சநேய பிரபுவையும் வழிபட்டு வருவது நல்லது.

**மகர புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 2 ஆம் திகதி மகர இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இராசிக்கு 6, 9 க்கு அதிபதியான புதன் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும். தந்தை வழி உறவினர் மற்றும் பங்காளிகளோடு இருந்த பகை அகலும். உத்தியோகத்தில் [illegible] மான நிலையும் ஊதிய உயர்வும் கிடைக்கும். மாமன்காரகன் புதன் என்பதால் மாமன் வழி ஒத்துழைப்பும், மைத்துனர் வழியில் அனுகூலமும் கிட்டும். சேமிப்பு உயர அவர்கள் வழி காட்டுவர். குறிப்பிட்ட இலக்கை அடைய எடுத்த முயற்சியில் தடையாக இருந்தவர்கள் தானே விலகுவர். கடை திறப்பு விழாக்களையும் கட்டட திறப்பு விழாக்களையும் ஒருசிலர் காண்பர்.

இம்மாதம் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் மாதமாக அமையப் போகிறது. எடுத்த காரியத்தை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள். குருவின் வக்ர இயக்கம் உங்களுக்கு கூடுதல் நற்பலன்களைக் கொடுக்கும். குறிப்பாக ருண, ரோகத்திலிருந்து நிவர்த்தி காண்பீர்கள். உத்தியோகப் பிரச்சினை அகலும். உறவினர் பகை மாறும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். கடவுள் வழிபாட்டில் ஆர்வம் காட்டும் நீங்கள் இம்மாதம் வைகுண்டவாசனையும், ஆஞ்சநேய பிரபுவையும் வழிபட்டு வருவது நல்லது. மாதக் கடைசியில் சுபகாரியப்பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

**வளர்ச்சியைக் கூட்டும் வக்ர குரு!**

உங்கள் இராசிக்கு 3,12 க்கு அதிபதியான குரு பகவான் தற்சமயம் வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். இந்த வக்ர இயக்கம் 2014 மார்ச் 2 ஆவது வாரம் வரை நீடிக்கிறது. இக்காலம் உங்களுக்கு இனிய காலமாகவே அமையப் போகிறது. சொக்க தங்கம் வாங்கி சொந்த உபயோகத்திற்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புபவர்கள் மக்கள் செல்வாக்குப் பெற்று மகத்தான தலைமைப் பொறுப் [illegible], சிக்கல்களிலிருந்து விடுபட நினைப்பவர்கள், சிரமங்களை உதறித் தள்ளிவிட்டு வெளியில் வர காத்திருப்பவர்கள் ஆகிய அத்தனை பேருக்கும் இந்த குரு வக்ர காலம் சாதகமாக இருக்கிறது.

எனவே, இக்காலத்தில் பண வரவு திருப்தி தரும். பக்கபலமாக இருப்பவர்களின் ஒத்துழைப்பு கூடும். மண முறிவு ஏற்பட்டவர்களுக்குக் கூட மறுவாழ்க்கை அமையும். இடமாற்றம், வீடு மாற்றம் போன்றவைகள் இயல்பாக வந்து சேரலாம். அஞ்சல் வழித் தகவல் அனுகூலமாக இருக்கும். உறவினர் பகை ஓரளவு மாறும். நீண்ட தூரப் பயணங்களால் ஏற்பட்ட இழப்புக்களை சரிக்கட்டுவீர்கள்.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2,10,12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். அடிப்படை வசதிகளை பெருக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். பொடிப்பொடியா துயரங்கள் உதிரும். பொருளாதார நிலை உயரும். கொடுக்கல்- வாங்கல்களில் இருநத் ஏமாற்றங்கள் அகலும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை மனுக்கள் தொடர்பான தீர்ப்பு ஜனவரி மாதத்தில்

## தலைமை நீதிபதி சதாசிவம்

(சென்னை)

பேரறிவாளன் உள்ளிட்ட 14 பேரின் கருணை மனுக்கள் மீதான விசாரணை முடிந்து விட்டதாகவும், ஜனவரி மாதம் தீர்ப்பு வழங்கப்படும் என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மாநில சட்ட பயிற்சி மையத்தின் சார்பில் நடத்தப்படும் வழக்கறிஞர்களுக்கான பயிற்சி திட்டத்தை நேற்று முன்தினம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் சென்னையில் ஆரம்பித்து வைத்தார்.

இந் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர்,

மரண தண்டனை பெற்றுள்ளவர்களின் கருணை மனுக்கள் மீது முடிவெடுப்பதில் மத்திய, மாநில அரசுகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

14 பேரின் தூக்கு தண்டனையை உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது. அவர்கள் கருணை மனு மீதான பரிசீலனை 13 ஆண்டுகளாக நடந்து வந்தது. தற்போது விசாரணைகள் முடிவடைந்துள்ளன. எதிர் வரும் ஜனவரி மாதம் இதுகுறித்து உச்சநீதிமன்றம் தனது முடிவை அறிவிக்கும் என்றார். (அ-2)

# நைரோபி விகாரையில் ஜனாதிபதி வழிபாடு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நைரோ பிக்கு அருகாமையில் அமைந்துள்ள நைரோபி பௌத்த விகாரையில் வழிபாடுகளை மேற்கொண்டார்.

விகாரையில் வழிபாடுகளை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விகாராதிபதி பன்டே விமல தேரருக்கு அட்டபிரிகர பூஜைப்பொருட்களை வழங்கினார். ஜனாதிபதியை வரவேற்பதற்கு பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்கள் விகாரைக்கு வருகை தந்திருந்தனர்.

தாது கோபுரம், தியான மத்திய நிலையம், பிக்குமார்களின் தங்கு மடம் ஆகியவற்றை உள்ளடக்கிய தேரவாத பௌத்த விஹாரை பத்து வருடத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாகும். (அ-2)

# கென்யாவும் இலங்கையும் ஒப்பந்தங்கள் கைச்சாத்து



இலங்கைக்கும் கென்யாவுக்கும் இடையில், எட்டு இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகியுள்ளன.

நைரோபி நகர அரச மாளிக்கையில் கென்ய ஜனாதிபதி உஹூரு கென்யாட்டா, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இவ்வொப்பந்தத்தில் உல்லாசப் பிரயாணம், கலாசார ஒத்துழைப்பு, விளையாட்டுத்துறை ஒத்துழைப்பு, இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச் சீட்டு உள்ளவர்களை விசா பெறுவதில் இருந்தும் விடுவித்தல், இருதரப்பு வர்த்தகம், பொருளாதாரம், வாணிபம், தொழில்நுட்ப ஒத்துழைப்பு, இருதரப்பு ஆலோசனை விசாரணைகள், ஒருங்கிணைந்த ஆணைக்குழு ஸ்தாபிதம் ஆகியன உள்ளடங்குகின்றன. (அ-2)

# பசிலின் பெயரை பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளர் என்று கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட நபரொருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி, இருவரிடம் 15இலட்சம் ரூபா நிதி மோசடி செய்ததாக சந்தேகநபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கொட்டாவ - மலலசேகர விசேட விசாரணை பிரிவினர் அண்மையில் குறித்த சந்தேகநபரை கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்து கார் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவருக்கு எதிராக நீர்கொழும்பு, நுகேகொட, புதுக்கடை, குளியாபிட்டி, அத்தனகல்ல, கம்பஹா, வத்தளை, குருநாகல், அநுராதபுரம் ஆகிய நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்ட 24 பகிரங்க பிடிவிறாந்துகள் உள்ளமை தெரியவந்தது.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் நீர்கொழும்பு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. (அ-2)

# ஒலிம்பிக் போட்டியில் இலங்கையின் பங்கேற்பை தடுக்க திட்டமிட்ட சதி

(கொழும்பு)

சர்வதேச ஒலிம்பிக் குழுவைப் பயன்படுத்தி இலங்கை ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதை தடுக்க தேசிய ஒலிம்பிக் குழுவிலுள்ள சிலர் சதிகளை மேற்கொண்டு வருவதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் நலனோம்புகை அமைச்சர் டிலான் பெரேரா குற்றம் சாட்டினார்.

பாராளுமன்றில் வரவுசெலவுத் திட்டத்தில் விளையாட்டுத்துறை அமைச்சுக்கள் என நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் அவர் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய ஒலிம்பிக் குழுவில் அங்கம் வகிக்கும் சில அதிகாரிகள் இக் குழு தொடர்பாக கணக்காய்வுகளை நடத்துவதை எதிர்க்கின்றனர்

தேசிய ஒலிம்பிக்குழு தொடர்பாக அரசாங்க கணக்காய்வு பிரிவே மேற்கொள்கின்றது. அரசுக்கு அநாவசியமான தலையீடுகளை மேற்கொள்ள முடியாதென்பதை ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் விளையாட்டுக்குழுக்களை கண்காணிக்கும் கணக்காய்வு செய்யும் அதிகாரம் அரசுக் கேயுள்ளது.

பொதுநலவாய விளையாட்டு தீப்பந்தம் இங்கு கொண்டுவரப்பட்டு புகையிரதத்தில் கொண்டு சென்றமை உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு தேசிய ஒலிம்பிக் குழு செய்த செலவுகள் தொடர்பாகவே அரசு கணக்காய்வு செய்யவுள்ளது.

ஆனால் இந்தக் குழுவிலுள்ள சிலர் இதனை எதிர்க்கின்றனர். அப்படியென்றால் இதில் ஏதாவது இடம் பெற்றிருக்கலாம். இதன் காரணமாகவே எதிர்க்கின்றனர் என்று நான் நினைக்கிறேன். எனவே இக் கணக்காய்வை தடுப்பதற்காக இக்குழு சர்வதேச ஒலிம்பிக் குழுவிடம் போய் முறைப்பாடு செய்து, அதன் ஊடாக விளையாட்டுத்துறை அமைச்சு அரசு வழங்கும் நிதியை மட்டும் கணக் கெடுக்க வேண்டும் என சர்வதேச ஒலிம்பிக்குழு அறிவித்துள்ளது.

இதன் மூலம் மோசடி குழுவினர் விளையாட்டுத்துறை அமைச்சரை மதிலில் சாத்தியுள்ளனர். கணக்காய்வு செய்வதை நிறுத்துங்கள். இல்லாவிட்டால் ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை கலந்து கொள்ள முடியாது என்ற அபாய எச்சரிக்கையையும் விடுத்துள்ளனர் என்றார். (அ-2)



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் உயர் பெறுபேறுகளை பெற்று வருகின்றது. இதனை முன்னிட்டு வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். புஸ்பலிங்கம் கல்லூரி அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரனுக்கு விருது வழங்கி கௌரவிப்பதையும் அருகில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- தும்பளை செய்தியாளர்)

# மிஸ்டர் ஸ்ரீலங்கா ஆணழகன் போட்டியில் தமிழர் வெற்றி

(கொழும்பு)

மிஸ்டர் ஸ்ரீலங்கா ஆணழகன் போட்டியில் இம்முறை தமிழர் ஒருவர் தெரிவாகியுள்ளார்.

மிஸ்டர் ஸ்ரீலங்கா ஆணழகன போட்டி நேற்றுமுன்தினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தொடர்ச்சியாக 66ஆவது வருடமாக இடம்பெறும் குறித்த போட்டியில் 125 போட்டியாளர்கள் பங்கேற்றனர்.

இந்தப் போட்டியில் கட்டான பலமேன் ஸ்போர்ட்ஸ் கழகத்தைச் சேர்ந்த அன்டன் புஸ்பராஜா சகல துறைகளிலும் வெற்றி பெற்றதன் பொருட்டு மிஸ்டர் ஸ்ரீலங்காவாக தெரிவானார்.

இந்தப் போட்டியில் 2ஆம் இடத்தை கடற்படையைச் சேர்ந்த சுபாஸ சிறிவர்த்தனவும் மூன்றாம் இடத்தை இராணுவத்தைச் சேர்ந்த யூ ஜே அமிலவும் பெற்றுக்கொண்டனர்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரசில்ககளை நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். துமிந்த சில்வா, அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் மற்றும் விளையாட்டுத்துறை இயக்குநர் ரஞ்சனி ஜெயக்கொடி ஆகியோர் வழங்கினர்.

இந்த நிகழ்வு இலங்கை பளுதூக்கும் சம்மேளனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க எந்நேரமும் தயாராகவுள்ளோம்

## விஹாராதிபதி சஞ்சிந்தரிய

(கொழும்பு)

பிக்குகளை கண்டால் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஓடி ஒளிக்கின்றார் என அம்பாறை வித்தியானந்த மாகா பிரிவேனாவின் விஹாராதிபதி சஞ்சிந்தரிய தேரர் தெரிவித்தார்.

சாரைப் பாம்புக்கு மண்ணெண்ணெய் பட்டால் ஓடி ஒளிவது போன்றே பிக்குவாகிய எங்களைக் கண்டால் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஓடி ஒளிகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கல்முனை வடக்கு தமிழ் மக்களுடன் கலந்துரையாடும் கூட்டமொன்று அண்மையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தமிழர்களும் சிங்களவர்களும ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். மதங்களின் அடிப்படையில் இரண்டு சமூகங்களும் ஒன்றுதான். ஆனால் இடைப்பட்ட காலத்தில் வந்த சில இடர்களால் தமிழ்,சிங்கள மக்களின உறவுக்குள் விரிசல்கள் ஏற்பட்டன.

தற்போதைய நிலையில் தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் பல பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. அரசியல் பிரச்சினை, காணிப் பிரச்சினை, கல்விப் பிரச்சினை நிர்வாக பிரச்சினை போன்ற பல பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால் கடந்த கால யுத்தத்தைக் காரணம் காட்டி தமிழ் மக்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டன.

இதனை இனிமேலும் விட்டுவிட முடியாது. முஸ்லிம் அரசியல் வாதிகள் அரசாங்கத்தின் பக்கமிருந்து அவர்கள் சார்ந்த சமூகத்திற்கு பல வேலைத்திட்டங்களை செய்து வருகின்றார்கள். ஆனால் அந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை வெறுத்து ஒதுக்கும நோக்கத்துடன் பார்க்கக் கூடாது.

எது எவ்வாறு அமைந்தாலும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பதற்கு நாங்கள் எந்தநேரமும் தயாராக இருக்கின்றோம். (அ-2)

# மாலைதீவின் ஜனாதிபதிக்கு இலங்கை ஜனாதிபதி அழைப்பு

(கொழும்பு)

மாலைதீவின் புதிய ஜனாதிபதி யாமீன் அப்துல்கயூமை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு ஜனாதிபதி மிஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் அழைப்பு மாலைதீவுக்கான இலங்கை உயர்ஸ் தானிகர் டிக்ஷன் சரத்சந்திரடேலவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டதாக மாலைதீவு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் அழைப்பை மாலைதீவு ஜனாதிபதி யாமீன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் நீண்டகாலமான உறவுகள் இருந்து வருவதாகவும் தனது இலங்கை விஜயம் இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்தும் எனவும் யாமீன் தெரிவித்துள்ளார்.

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் சகோதரரான யாமீன் அப்துல் கயூம் கடந்த நவம்பர் மாதம் 16ஆம் திகதி தேர்தல் மூலம் அந்நாட்டின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கு தீர்வை வழங்கும் எண்ணம் அரசுக்கு கிடையாது

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வை தரும் எண்ணம் அரசாங்கத்திற்கு எள்ளளவும் இல்லை என வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்க விடுதலை தலைவர் மாமனிதர் நெல்சன் மண்டேலாவின் அஞ்சலி நிகழ்வு தமழரசுக்கட்சியின் யாழ். அலுவலகத்தில் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தென்னாபிரிக்க மக்கள் தமது விடுதலையை பெறுவதற்கு அனைத்து போராட்டக்குழுக்களும் ஒரு குடையின் கீழ் நின்று போராடினார்கள். அதே போல் நாமும் குறைந்த பட்சம் சமஷ்டியை தருமாறு கோர வேண்டும்.

நாம் மிகப் பெரும் மனித படுகொலையை கண்ட பின்னரும் ஒரு ஒளிக்கீற்று எமக்கு தெரியவில்லை. நெல்சன் மண்டேலாவின் போராட்ட வரலாறுகளை எமது இளைஞர் சமுதாயத்திற்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

இலங்கை அரசு தமிழர்களுக்கான தீர்வை தானாக தாராது என்று உறுதியாகிவிட்டது.

ஆகையால் இலங்கை மீது பொருளாதார தடைகளை விதித்து சர்வதேச இறுக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமே தீர்வைப் பெற முடியும் என்றார். (அ-4)

## மருத்துவ முகாம் பிற்போடப்பட்டுள்ளது

(மந்திகை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நரம்பியல் விசேட வைத்திய நிபுணர் ரி.திவாகரனால் நாளை புதன்கிழமை நடத்தப்படவிருந்த நரம்பியல் நோய் கிளினிக் தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

பதிவு செய்த நோயாளர்களை அன்றைய தினம் சமுகமளிக்குமாறு வைத்திய அத்தியட்சகர் கேட்டுள்ளார். (அ)

# வடக்கு மாகாண சபைக்கு சிவில் அதிகாரி ஆளுநராக்கப்பட வேண்டும்

## விஜித ஹேரத் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாண சபைக்கும் மத்திய அரசுக்குமிடையில் அரசமைப்பு ரீதியிலான பிரச்சினைகள் ஏற்படுவதற்கு இராணுவ ஆளுநர் நியமிக்கப்பட்டுள்ளமையே அடித்தளமாக இருக்கின்றது என ஜே.வி.பி. குற்றம் சாட்டியுள்ளது.

ஆளுநர் பதவிக்கு இராணுவத் துறையைச் சார்ந்த அதிகாரிகளை நியமிப்பது தவறான செயலாகும்.

எனவே, வடக்கு ஆளுநரை நீக்கிவிட்டு அப்பதவிக்கு நிர்வாகம் தொடர்பில் சிறந்த அனுபவமுள்ள சிவில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கட்சி வலியுறுத்தியது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது வடமாகாண சபைக்கும் மத்திய அரசு மற்றும் ஆளுநருக்குமிடையில் தற்போது அரசமைப்பு ரீதியில் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், வடக்கு ஆளுநர் நீக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வடமாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது தொடர்பில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் தெரிவிக்கையில்,

ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகள் நியமனத்தின் போது இராணுவ அதிகாரிகளையோ அல்லது ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளையோ அத்துறைக்கு நியமிப்பது தவறாகும்.

அந்தப் பதவிகளுக்கு சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் புலமையுள்ள சிவில் அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும் என்பதே ஜே.வி.பியின் நிலைப்பாடாகும்.

எனவே, வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பிரச்சினைகள் முற்றுவதற்கு முன்னர் இராணுவ அதிகாரியை நீக்கிவிட்டு சிவில் அதிகாரிகளை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்றார். (அ-2)

# சிகை ஒப்பனையாளர் சங்க பொதுக் கூட்டம்

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர்களின் ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. ஒன்றியத் தலைவர் கி.இரத்தினராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கௌர விருந்தினர்களாக வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கனகசபாபதி கனகேஸ்வரன், யாழ். மாநகர சபை பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் க.ஆ.ஜீவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் அறிக்கைகள், புதிய பொருளாளர் தெரிவு, கேள்வி நேரம், யாப்பு அங்கீகாரம் செய்தல் என்பன இடம்பெறவுள்ளதால் சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் அன்றைய தினம் மூடி விட்டு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-9)


# குருதி அழுத்தம் (Blood pressure)

குருதியானது இரத்தக் குழாய்களினூடாகப் பயணிக்கும் போது அதன் சுவர்களில் ஏற்படும் அழுத்தமே குருதி அழுத்தம் எனப்படும்.

இந்த அழுத்தமான இதயத்தசைகள் சுருங்கும் போது ஏற்படும் அழுத்தமானது இதயத் தசைகள் விரியும் போது ஏற்படும் அழுத்தத்தைவிட அதிகமாக இருக்கும்.

சாதாரண ஒருவரில் குருதி அழுத்தம் இதய தசைகள் சுருங்கும் போது 120 மில்லிமீற்றர் பாதரச அழுத்தமாகவும் இதய தசைகள் விரியும்போது 80 மில்லி மீற்றர் பாதரச அழுத்தமாகவும் இருக்கும். இதனையே 120/80 mmHg எனக் குறிப்பிடப்படும்.

எனினும் இந்த அளவானது சற்று கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ காணப்படுமிடத்து உடன



டியாக நோயாளியாகக் கருத முடியாது.

2 அல்லது 3 தடவைகள் குருதி அழுத்தமானது சோதிக்கப்பட்ட பின்னரே சாதாரண ஒருவரோ அல்லது நோயாளியோ என்பதனை முடிபு செய்ய முடியும். அத்துடன் வயது, பால் என்பவற்றுடன் சற்று அதிகரித்தோ, குறைந்தோ காணப்படுவது சாதாரணமாகும். எனவே, இவற்றை வைத்தியர் ஒருவராலேயே தீர்மானிக்க முடியும்.

குருதி அழுத்தமானது உயர்வாக இருப்பதும் தாழ்வாக இருப்பதும் பாதிப்பை ஏற்படுத்தும்.

உயர் குருதி அழுத்தம் (Hypertension) High Blood pressure

இருவகைப்படும்.

1. முதன்மையானது (Primary)
2. இரண்டாவது / Secondary)

✷ முதலாவது எனும்போது வேறு எதுவித நோய் நிலைகளும் இல்லாத போது குருதி அழுத்தமானது அதிகரித்த நிலையாகும்.

இதற்கான காரணங்கள்

✷ புகை பிடித்தல், மது, போதைப் பொருட்களைப் பாவித்தல்

✷ வாழ்க்கைப்பளு (Stres)

✷ உடற்பருமன் அதிகரித்தவர்கள்

✷ உணவில் அதிக உப்பு பயன்படுத்துபவர்களில் ஏற்பட வாய்ப்பதிகம்.

இரண்டாவது எனும்போது வேறு ஏதாவது நோய் நிலைகளைத் தொடர்ந்து குருதி அழுத்தமானது அதிகரித்தல் என்பதாகும்.

அதாவது குருதிக் குழாய்ச் சுவர்களில் கொழுப்புப் படிந்து குழாய் குறுகலடைதல், குழாய் சுவரின் மீள் தன்மை இழத்தல் போன்றவற்றால் ஏற்படுகின்றது.

உ-ம்:- இருதய நோய்கள் (Coronary Heart disease), சிறுநீரக நோய்கள், சலரோகம் (Diabetic), அதிகளவு தைரொயிட், அதிரினல் சுரப்பியில் கட்டி போன்றன.

உயர்குருதி அழுத்தமானது பெரும்பாலானவர்களில் நோய் குறிகுணங்களை வெளிக்காட்டுவதில்லை. கூடுதலாக அதிகரித்த பின்னர்/வேறு நோய்களுக்கு மருந்து எடுப்பதற்காகச் செல்லும்போது வைத்தியரினால் சோதித்து அறியப்படுகிறது. எனவே இதனை அமைதியாக வரும் கொலையாளி (Silent Kiler) எனக் குறிப்பிடப்படுகிறது.

**குணம் குறிகளாக**

தலையிடி, வியர்த்தல் அதிகமாக




இருத்தல், விரைவான நாடித்துடிப்பு, விரைவில் மூச்சிரைப்பு, தலை சுற்றல், பார்வை தெளிவின்மை, கழுத்தின் பின்பகுதியில் (பிடரி) நோ போன்றவற்றில் ஒன்றோ பலவோ காணப்படலாம்.

இவை காணப்படுமிடத்து வைத்தியரை நாடிச் சென்று அறிவுரை பெற்றுக் கொள்வதன் மூலம் பாதிப்புகளிலிருந்து விலகிக் கொள்ள முடியும். அலட்சியம் செய்வதனால் பாரதூரமான விளைவுகளை (உ+ம்:- பாரிசவாதம்) எதிர்நோக்க நேரிடும்.

**அறிவுரைகள்:-**

மாதம் ஒரு தடவையாவது வைத்திய ஆலோசனை பெறல். கிளினிக்கினை தவறாது பயன்படுத்துதல்,

உப்பு உணவினைக் குறைத்தல் அல்லது தவிர்த்தல்,

கொழும்பு அதிகம் உள்ள உணவுகள், தேங்காய்ப்பால் பொருட்கள், இறைச்சி வகைகளைத் தவிர்த்தல்,

பால் எடுப்பின் நன்றாகக் காய்ச்சி ஆறவிட்ட பின்னர் ஆடை அகற்றி பருகுதல்,

கோழி இறைச்சியை மட்டும் குறைந்தளவில் பயன்படுத்தலாம்,

மாப்பண்டங்களை குறைந்த அளவில் பயன்படுத்துதல்,

நார்ச்சத்துள்ள உணவுகள், தானியங்கள், அவரைக் குடும்ப தாவர உணவுகள் என்பவற்றை அதிகமாக உண்ணுதல்,

தினமும் இலைக்கறி வகைககள், மரக்கறிகள், பழ வகைகள் என்பவற்றை அதிகளவில் உணவில் சேர்த்துக் கொள்ளல்,

உடல் நிறையைக் குறைத்தல்,

உடற்பயிற்சி,

போதியளவு நித்திரை/ தூக்கம் இரவில் ஏற்படுத்தல்,

தியானம், யோகாசனம் என்பவற்றினால் மன உளைச்சல், வாழ்க்கைப்பளு என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளல்,

புகைத்தல், மது போதை என்பவற்றைத் தவிர்த்தல்,

வெண்தாமரைப் பூவிலே குடிநீர் செய்து பருகுதல்,

வெள்ளைப்பூடு, வெந்தயம், வெங்காயம் என்பவற்றை தினமும் சாப்பாட்டிலோ அல்லது வெறுமையாகவோ உட்கொள்ளல்,

கறிவேப்பிலை அண்ணளவாக 4/5 கூட்டிலைகளை தினமும் சாப்பாட்டில் அல்லது பச்சையாக துவையல் செய்து உட்கொள்ளல்,

பசன்புருட் இலையை துவையல் அல்லது வறைசெய்து உட்கொள்ளல்,

சாறணை கீரையினை சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளல்,

நீற்றுப்பூசணி, வத்தகை, கெக்கரிக்காய் போன்றன வாரத்தில் நான்கு தடவைகளேனும் உட்கொள்ளல்,

**தாழ்வான குருதி அழுத்தம் (Hypotension) Low Blood pressure**

அதாவது உடல் உறுப்புக்களுக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறைவாக இருத்தல்

**காரணம்**

1. இரத்தத்தின் அளவு (Volume) குறைத்தல்

உ-ம்: இரத்தப்பெருக்கு Dehydration

2. இருதயத்தின் பாதிப்புகள்

உ-ம்:- Heart attact cardio myopathy

3. நாடிகளின் சுவரின் தன்மை (tension) குறைதல்

4. மருந்துகளின்தொடர்பாவனை/ தவறான பாவனை

உ-ம்:- வைத்திய ஆலோசனை இன்றி தொடர்ச்சியாகப் பயன்படுத்தல், மன அழுத்த மாத்திரைகள்

5. கிருமித் தாக்கங்கள்

உ-ம்:- சிறுநீரக கிருமி, இரத்தத்தில் கிருமி

**குணம்குறிகள்**

✷ சோர்வு, தலைச்சுற்று, மயக்கம், நிலை மாற்றத்தின்போது (இருத்தல், எழும்பல், படுதல்) தலைச்சுற்று

✷ கண் மங்கலடைதல்

✷ நெஞ்சு படபடப்பு

✷ களைப்பு

✷ தாகம் என்பவற்றில் ஒன்றோ பலவோ ஏற்படுகிறது. இவ்வாறான நிலையில் வைத்திய ஆலோசனையைப் பெற்று அதன்படி கைக்கொள்ள வேண்டும். இல்லாதவிடத்து இருதயரோகம், சிறுநீரகம் பாதிப்படைதல் (Kidney failure) கை, கால்கள் செயலிழத்தல், அதிர்ச்சி (Shock) என்பன ஏற்பட்டு பாரிய விளைவை ஏற்படுத்தும்.

**அறிவுரைகள்**


1. நீராகாரங்களை அதிகளவில் எடுத்தல்
2. நீர் பருகுதலை அதிகரித்தல்
3. உணவில் உப்பின் அளவை ஓரளவு அதிகரித்து உட்கொள்ளல்.
4. இலைக்கறி வகைகள், பழ வகைகள், சூப் வகைகள், கஞ்சி வகைகள் பயன்படுத்துதல்
5. பேரீச்சம்பழத்தை தினமும் 3/4 உட்கொள்வது சிறந்தது.

மேற்கூறப்பட்டவற்றைக் கைக்கொள்வதுடன் அவ்வவ் வேளைகளில் வைத்திய ஆலோசனையைப் பெற்று குருதி அழுத்தத்தை சாதாரண நிலையில் பராமரித்து சுகதேகிகளாக வாழ்வோமாக.

*நன்றி:- அருள்ஒளி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார தடையா..? போர்க்குற்ற விசாரணையா..?



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்த மார்ச் மாத அமர்வு குறித்து கலக்கத்தில் உள்ள அரசாங்கத்துக்கு, எதிர்க்கட்சிகளும் பேதியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

கடந்த வாரம், நாடாளுமன்றத்தில் உரையாற்றி ஐ.தே.க உறுப்பினர் சஜித் பிறேமதாச, இலங்கைக்கு எதிராக பொருளாதாரத்தடைகூட விதிக்கப்படலாம் என்று எச்சரித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் இலங்கைக்கு எதிராக கடுமையானதொரு நடவடிக்கையில் இறங்க வாய்ப்புக்கள் உள்ளன என்பதே இப்போதுள்ள கணிப்பாகும். அரசாங்கத் தரப்பும் மறுக்கத் தயாராக இல்லை, இதனால் தமக்கு ஆதரவான அணியை தயார்ப்படுத்தும் நடவடிக்கையில் அரசாங்கமும் ஏற்கனவே இறங்கியுள்ளது.

குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அங்கம் வகிக்கும் நாடுகளில், இலங்கைக்கு ஆதரவளிக்கக்கூடிய நாடுகளை அடையாளம் கண்டு, அவற்றின் ஆதரவை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. இதற்கு முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இம்முறை அரசாங்கத்துக்கு அதிகளவு நெருக்கடி ஏற்படலாம்.

ஏனென்றால், ஏற்கனவே இரண்டு காலக்கெடுக்கள் கொடுக்கப்பட்ட போதிலும், அவற்றை அரசாங்கம் நிறைவேற்றத் தவறியதால் மேற்குலக நாடுகள் குறிப்பாக, அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகள் கடுப்பில் இருக்கின்றன. இதனால் அடுத்தகட்டமான- சுதந்திரமான சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதே ஒரேவழி என்ற நிலைக்கு இந்த நாடுகள் தள்ளப்பட்டுள்ளன. அதற்கான முன் முயற்சிகளை வரும் மார்ச்மாத கூட்டத்தொடரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை முன்னெடுப்பதற்கு சாத்தியங்கள் உள்ளன.

ஆனால், சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஊடாக நியமிப்பதில் சட்டரீதியான தடைகள் இருப்பதாகத் தெரிகிறது. சர்வதேச விசாரணைப் பொறிமுறையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையினால் அமைக்க முடியாது என்று இலங்கை அரசாங்கம் நெடுநாளாகவே கூறி வருகிறது.

ஐ.நா பாதுகாப்புச் சபை மூலமே சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்க முடியும் என்றும், ஆனால் வீட்டோ அதிகாரம் கொண்ட ரஷ்யாவும் சீனாவும் தமக்கு ஆதரவாக இருப்பதால், ஒருபோதும் அத்தகைய விசாரணைக் குழு அமைக்க முடியாது என்பது இலங்கை அரசாங்கத்தின் கருத்து. இத்தகையதொரு துணிவும்கூட இலங்கை அரசாங்கத்தின் அலட்சியப் போக்கிற்கு காரணமாக அமைந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையின் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து நம்பகமான, நடுநிலையானதொரு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே, மேற்குலகினது விருப்பமாக உள்ளது.

சர்வதேச விசாரணைப்பொறிமுறை ஒன்றை உருவாக்குவதில் உள்ள சிக்கல்கள் குறித்து, அமெரிக்கா போன்ற நாடுகள் கவனத்தில் கொள்ளாது செயற்பட வாய்ப்புக்கள் இல்லை.

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன்கூட, வரும் மார்ச் மாதத்துக்குள் இலங்கை அரசாங்கம் ஒரு நம்பகமான நடுநிலையான விசாரணையை மேற்கொள்ளத் தவறினால், சர்வதேச விசாரணைப்பொறிமுறையை வலியுறுத்துவோம் என்றுதான் குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு கட்டத்திலும் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்குவோம் என்று பிரித்தானியாவோ, அல்லது வேறு நாடுகளோ குறிப்பிடவில்லை.

ஒருவிடயத்தை வலியுறுத்துவதற்கு எந்த நாட்டுக்கும் எந்தக் கட்டுப்பாடும் இருக்காது. ஆனால், அதை செயற்படுத்துவதற்கு சட்டவரம்புகளுக்கு உட்பட்டாக வேண்டும்.

சர்வதேச விசாரணைப் பொறிமுறையை வலியுறுத்தப்போவதாக, பிரித்தானியா கூறியுள்ளதை வைத்துக்கொண்டு, சர்வதேச விசாரணைப் பொறிமுறை அடுத்த ஜெனீவா கூட்டத் தொடரில் உருவாக்கப்பட்டு விடும் என்று மிகையாக கனவு காண முடியாது. இது ஒருவகையில் இலங்கைக்கான அழுத்தங்களை அதிகரிக்கச் செய்வதற்கான உத்தியாகவும் கருதப்படலாம். அதற்கான முயற்சிகளிலேயே பிரித்தானியாவும் ஏனைய நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன. வெளிநாட்டுத் தலையீடுகளின் மூலம், பொறுப்புக்கூறலை மேற்கொள்வதில் உள்ள தடங்கல்களால்தான், இலங்கையே சுதந்திரமான உள்ளக விசாரணையை நடத்த வேண்டும் என்று மேற்குலகம் வலியுறுத்தி வருகிறது.

சர்வதேச விசாரணைப்பொறிமுறை ஒன்றை உருவாக்குவது, இலங்கைக்கு எத்தகைய கடுமையான விளைவுகளை ஏற்படுத்துமோ, அதேபோன்று சர்வதேச சமூகத்துக்கும் அது ஒரு பெரும் சிக்கலான முயற்சியாகவே இருக்கும்.

இந்தநிலையில்தான், இலங்கையை வழிக்குக்கொண்டு வருவதற்கான முயற்சிகளில் சர்வதேச சமூகம் குறிப்பாக மேற்குலகம் இனிமேல் அதிக கவனம் செலுத்தக்கூடும்.

பிரித்தானியப் பிரதமர் டேவிட் கெமரூன் கொழும்பிலும் லண்டனிலும் விடுத்த எச்சரிக்கையை அடுத்து, இணைய ஊடகங்கள் பலவற்றில், இலங்கைக்கு எதிராக பிரித்தானியா பொருளாதாரத்தடையை விதிப்பது குறித்து ஆலோசித்து வருவதாக செய்திகள் வெளியாகின. ஆனால், பிரித்தானிய அரசாங்க மட்டத்தில் இருந்து அதற்கான வாய்ப்புக்கள் தொடர்பான எந்தக் கருத்தும் வெளியிடப்பட்டதாகத் தெரியவில்லை.

பொருளாதாரத்தடை என்பது இன்றைய உலகின் சக்திவாய்ந்த ஒரு ஆயுதமாக கருதப்படுகின்றது. முன்னர் ஒரு காலத்தில் மிகப்பெரிய படைகளை வைத்து நாடுகளை மிரட்டும் போக்கு காணப்பட்டது.

பின்னர் டாங்கிகளும் பீரங்கிகளும் அதை தீர்மானிக்கும் காரணிகளாகின. அதையடுத்து, வலிமையான கடற்படை, விமானப்படைகளை வைத்து மிரட்டும் போக்கு இருந்தது. பின்னர், அணுவாயுதங்களை வைத்து மிரட்டும் காலம் இருந்து வந்தது. இப்போதெல்லாம் வல்லரசு நாடுகள், ஆயுதங்களைக் காண்பித்து மிரட்டுவதில்லை.

பொருளாதாரத் தடையைக் காட்டியே மிரட்டுகின்றன. ஏனென்றால், சர்வதேச பொருளாதாரத்தடை என்பது ஒரு நாட்டை சீரழித்துவிடும் என்பதுடன், அதன் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் அடியோடு பெயர்த்துப் போட்டுவிடும். அதன் விளைவு உள்நாட்டில் ஆட்சி மாற்றத்துக்கும் வழி வகுக்கும்.

அண்மைக்காலத்தில் அமெரிக்காவின் தடைகளை அடுத்து, மியான்மரும் ஈரானும் தமது பிடிவாதப் போக்கை தளர்த்திக்கொள்ள முன்வந்தன. இந்த இரண்டு நாடுகளும் அமெரிக்காவைக் கடுமையாக எதிர்த்து வந்த நாடுகள். ஆனால், பொருளாதாரத் தடை இந்த நாடுகளையும் வளைந்து கொடுக்க வேண்டிய நிலையை ஏற்படுத்திவிட்டது.

மிகப்பெரிய எண்ணெய்ப் பொருளாதாரத்தைக் கொண்டிருந்தபோதிலும் அமெரிக்காவின் தடைகளை எதிர்த்து ஈரானால் எதையுமே செய்ய முடியவில்லை. இந்தளவுக்கு பொருளாதாரத் தடை என்பது இன்று வலிமை மிக்க ஆயுதமாக கருதப்படுகிறது.

இத்தகைய கட்டத்தில்தான், இலங்கை மீது பொருளாதாரத்தடைகூட விதிக்கப்படலாம் என்று எச்சரித்திருந்தார் சஜித் பிறேமதாச.

அதேவேளை, இணைய ஊடகங்களில் உலா வந்தது போன்று பிரித்தானியா தனித்து இலங்கைக்கு எதிராக பொருளாதாரத்தடையை விதிக்க வாய்ப்புக்கள் குறைவே. ஆனால், அத்தகையதொரு பிரேரணையை சர்வதேச அரங்கில் பிரித்தானியா முன்வைக்கக்கூடும். இலங்கையின் ஏற்றுமதிப் பங்காளர்களில் பிரித்தானியா கிட்டத்தட்ட 12 சதவீதத்தை கொண்டுள்ள ஒரு நாடு. என்றாலும், பிரித்தானியா மட்டும், பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவருவதன்மூலம் மட்டுமே இலங்கையை வழிக்குக் கொண்டுவந்துவிடலாம் என்று எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால் ஒருவேளை அதற்குப் பின்னரும் இலங்கை பணிந்து போக மறுத்தால், பிரித்தானியாவின் பெயர் கெட்டுப்போகும். எனவே, இத்தகையதொரு பொருளாதாரத் தடைக்கான முயற்சியை, ஏனைய நட்பு நாடுகளுடன் கலந்தாலேசித்தே பிரித்தானியா முடிவெடுக்கும்.

கடந்த வாரம் பிரித்தானியா நாடாளுமன்றத்தில் பேசிய வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக இணை அமைச்சர் ஹியூகோ சுவைர், இலங்கை விவகாரம் தொடர்பாக ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடப்படும் என்று கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரத் தடை என்பது இன்றைய நிலையில் சர்வதேச சமூகத்தினால் பயன்படுத்தப்படும் இறுதி ஆயுதமாகவே கருதப்படுகிறது. ஏனென்றால் அதன் பாதிப்புக்களை எந்த நாட்டினதும் ஆட்சியாளர்கள் அனுபவிப்பதில்லை. அந்த நாட்டு மக்களே அதனை அனுபவிக்கின்றனர். இதனால், அந்த ஆயுதத்தை கையில் எடுப்பதற்கு முன்னர் ஒன்றுக்குப் பலமுறை ஆலோசனைகள் நடத்தப்படும். இலங்கை விவகாரத்தில்கூட, பொருளாதாரத்தடை என்ற ஆயுதம் பிரயோகிக்கப்படுமா என்பதுகூட உறுதியில்லை. ஆனால், அதுபற்றிப் பேசப்படும் நிலை ஒன்று உருவாகியுள்ளது.

ஒன்றுக்கு இரண்டு ஜெனீவா தீர்மானங்கள் உதாசீனம் செய்யப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதற்கு மேற்கு நாடுகளுக்கு வலுவானதொரு ஆயுதம் தேவைப்படுகிறது. இதனால் அமெரிக்காவுடன் இணைந்து கொண்டு, ஐரோப்பிய ஒன்றியத்தை இலங்கைக்கு எதிராக பொருளாதாரத் தடையை விதிக்க பிரித்தானியா வலியுறுத்தக்கூடும்.

அமெரிக்க- ஐரோப்பிய ஒன்றிய கூட்டுப் பொருளாதாரத்தடை ஒன்று விதிக்கப்படுமானால் அது இலங்கையின் பொருளாதாரத்தை நிச்சயம் ஆட்டம் காணச்செய்யும். ஏனென்றால், அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் முக்கியமான ஏற்றுமதிப் பங்காளர்கள்.

இலங்கையின் முதன்மைப் பத்து இடங்களிலுள்ள ஏற்றுமதிப் பங்காளி நாடுகளில், அமெரிக்கா, பிரித்தானியா, ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம், ஃபிரான்ஸ் ஆகிய நாடுகள் அடங்கியுள்ளன. 2012 ஆம் ஆண்டு புள்ளிவிபரங்களின் படி, இலங்கையின் ஏற்றுமதியில் அமெரிக்கா 22.6 வீதம், பிரித்தானியா 9.8 வீதம், பெல்ஜியம் 5.2 வீதம், ஜெர்மனி 4.8 வீதம், இத்தாலி 4.3 வீதம், ஃபிரான்ஸ் 2.62 வீதம் பங்களிப்புச் செய்கின்றன.

அமெரிக்கா- ஐரோப்பிய ஒன்றிய பொருளாதாரத்தடை ஒன்று ஏற்படுமானால், இலங்கை இந்த ஏற்றுமதி வாய்ப்புக்களை இழக்க நேரிடும். இதன்மூலம், இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் அரைப் பங்கு அடியோடு பெயர்ந்து போகும். அத்தகையதொரு நிலை ஏற்படுமானால் இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகும்.

அது அடிபணிவுக்கோ, ஆட்சி மாற்றத்துக்கோ காரணமாக அமையலாம். ஏனென்றால் இத்தகைய பொருளாதாரத் தடை பொதுமக்களை பெரிதும் பாதிக்கும். எனவே, இந்த பொருளாதாரத் தடையை விதிக்க முன்னர் மேற்குலகம் ஒன்றுக்குப் பலமுறை யோசிக்கும்.

இலங்கை மீது அழுத்தம் கொடுப்பதற்கு- அதனை வழிக்குக்கொண்டு வருவதற்கு வேறு சாதகமான வழிமுறைகள் இல்லாத சூழலில் இது பற்றி யோசிப்பதைத் தவிர, மேற்குலகிற்கு வேறு கதியும் இல்லை.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உங்கள் குழந்தைகளுக்காக கனவு காண்பவரா நீங்கள்?



ஆன்மீகம் 69

...சத்குரு: நம்மைப் பொருத்தவரை, ஒரு ஓட்டையை வைத்துக் கொண்டு, அதற குள் யாரெல்லாம் பொருந்துகிறார்களோ, அவர்கள் மட்டும்தான் குறை இல்லாதவர்கள்.

ஒரே விதமான கல்வி முறையில் அனைவரையும் திணித்து, வெளிவருபவர்கள் எல்லாம் டாக்டராகவோ, இஞ்சினியராகவோ தான் வெளிவர வேண்டும். இப்படிப்பட்ட கொடுமைகளைத்தான் உங்கள் குழந்தைகள் மீது நீங்கள் திணித்து வருகிறீர்கள். அதனால்தான் சில குழந்தைகளுக்கு ADD/ADHD போன்ற குறைகள் இருப்பது போலத் தெரிகிறது. இல்லையென்றால், ஒவ்வொருவருக்குமே ஒவ்வொரு விதமான திறமை இருக்கிறது. சிலர் எல்லாம், இயல்பாகவே மிக சந்தோஷமாக இருப்பதால், அவர்கள் ஏதும் செய்யக்கூட மாட்டார்கள்.

காட்டில் வாழும் மான்களைப் பாருங்கள். சுமார் எட்டு முப்பது மணியளவில், அவை எல்லாம் ஒன்றாகக் கூடும். சும்மா. ஏதோ சாப்பிடும், இங்கும் அங்கும் துள்ளிக் குதித்து ஓடும். வேலை எல்லாம் செய்யாது. காளை மாடு- இந்த மான்களைக் கண்டால், 'அந்த உபயோகமற்ற மான்களைப் பார் ஒரு வேலையும் செய்வதில்லை' என்றுதான் சொல்லும். என்ன செய்வது? யானை கூடத் தான் ஒன்றும் செய்வதில்லை. அது துள்ளிக் குதிக்காது, ஏறி மிதித்து நசுக்கி சின்னா பின்னம் ஆக்கிச் செல்லும். பரவாயில்லை. அவை அப்படித்தான் இருக்க வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக நாம் இயந்திர வர்க் கத்தினராக ஆகிவிட்ட படியால், நமது சக்கரங்களுக்கு அச்சாணிகள்தான் தேவைபடுகிறது. நமக்கு இனி மனிதர்கள் தேவையில்லை. நமக்கு நாம் உருவாக்கியிருக்கும் அமைப்பில் நன்கு பொருந்திக் கொள்கிற ஆணிகளும் திருகாணிகளும்தான் வேண்டும். இதில் ஓரளவிற்கு நாம் வெற்றியும் கண்டுவிட்டோம. வேறெப்படியும் சிந்திக்கத் தெரியாத அச்சுகள் பல நாம் ஏற்கனவே உருவாக்கிவிட்டோம்.



இந்த கண்ணோட்டத்திலேயே நாம் பார்ப்பதால் தான் பலருக்குக் குறை இருப்பது போல் தெரிகிறது. இன்னும் சொல்லப்போனால், நீங்கள் குறை இருக்கிறது என்று முத்திரையிட்டிருக்கும் அந்த 50 சதவிகிதக் குழந்தைகள் தான் 'குறையற்ற' குழந்தைகளாக இருக்கும். மற்ற குழந்தைகள் எல்லாம் மெஷினில் வடிவமைக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இது சற்றே அதிகப்படியாகத் தோன றினாலும், துரதிர்ஷ்டவசமாக நாம் அவ்வழியில்தான் பயணித்துக் கொண்டிருக்கிறோம். நாம் வாழ்வதைப் பற்றி சிந்திப்பதில்லை. எப்பொழுதும் லாபக் கணக்கு மட்டுமே பார்க்கிறோம். அதனால் லாபம் அதிகமாகத் தரக்கூடிய மெஷின்களை உருவாக்குவதிலே தான் நம் கவனம முழுவதும் இருக்கிறது.

இப்படி இருப்பதால், எது ஒன்று நீங்கள் எதிர்பார்த்த அளவு செயல்படவில்லையோ, அது திடீரென 'குறை உள்ளதாக'த் தெரிகிறது.

நாம் அனைவரும், ஒரேவிதமான செயல்திறன் கொண்டிருக்க வேண்டும் என்று கட்டாயமில்லை.

சிலரால் நடக்க முடியும், சிலரால் தவழ முடியும், சிலரால் பறக்கமுடியும், பரவாயில்லை. (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# "குண்டு வைக்கப் போவது தெரிந்திருந்தால், கர்ப்பிணி மனைவியை அனுப்பி வைத்திருப்பேனா?"

## -முருகனின் கருத்துக்கள்-



"ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பேரறிவாளன் வாக்குமூலத்தை அப்படியே பதிவு செய்யவில்லை. திருத்தம் செய்தோம்" என்று வழக்கு விசாரணை அதிகாரி தியாகராஜன் சொன்ன நிலையில்...

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி ஆகியோரது வாக்குமூலங்களும் திருத்தப்பட்டுள்ளது என்ற தகவல் வெளியாகியுள்ளது. கடந்த 7-ம் திகதி வேலூர் சிறையில் முருகனை சந்தித்திருக்கிறார் சென்னை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி.

முருகன் சொன்னதாக எஸ்.துரைசாமி சில தகவல்களை முதலில் சொன்னார்.

"பேரறிவாளன் வாக்குமூலம் திருத்தப்பட்டது போல நளினியின் வாக்குமூலமும் திருத்தப்பட்டது.

"ராஜீவ் காந்தியை ஸ்ரீபெரும்புதூர் பொதுக்கூட்டத்தில் கொல்ல இருப்பது எனக்குத் தெரியும் என்று நளினி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக பொலிஸார் பதிவு செய்துள்ளது முற்றிலும் தவறானது.

"குண்டு வெடிப்பு நடநதபோது நான் அங்கே தான் இருந்தேன் என்றும் நளினி வாக்கு மூலத்தில் சொல்லவில்லை.

உண்மையில் என்ன நடந்தது என்றால், "நான் தனியே போகிறேன் அக்கா நளினி வரவேணடாம் என்று தனு கூறி விட்டுச் சென்றுள்ளார். நளினியின் கையைப் பிடித்து சுபாவிடம் ஒப்படைத்தார். அந்த இடத்தைவிட்டு நளினி வெளியேறிய அரைமணி நேரத்துக்குப் பின்னர்தான் குண்டுவெடித்தது. இதைத்தான் வாக்குமூலத்தில் நளினி சொன்னார்.

பொட்டு அம்மான் கட்டளைப்படி சிவராசனுக்கு சிறுசிறு உதவிகளை நான் செய்து கொடுத்தேன். ஆனால், சிவராசனின் நோக்கம் ராஜீவ் காந்தியைக் கொல்வதுதான் என்று எனக்கு முன்பே தெரியாது. அப்படி தெரிந்திருந்தால் கர்ப்பிணியான எனது மனைவி நளினியை சிவராசனுக்கு அறிமுகம் செய்து வைத்திருக்க மாட்டேன்.

குண்டு வெடிக்க இருக்கும் இடத்துக்கு யாராவது கர்ப்பிணி மனைவியை அனுப்பி வைப்பார்களா? வி.பி.சிங் கூட்டத்துக்கு அவர்கள் சென்றபோது எதுவும் நடக்கவில்லை. அதுபோலத்தான் ராஜீவ்காந்தி கூட்டத்துக்கும் செல்வதாக நினைத்தேன். ராஜீவ் காந்தியை கொல்ல இருப்பது நளினிக்கு தெரியாது. இதையெல்லாம் ஒப்புதல் வாக்கு மூலத்தில் நளினி சொன்னார்.

ஆனால், விசாரணை அதிகாரிகள், "ராஜீவ் காந்தியை படுகொலை செய்வதன் மூலம் தனு சரித்திரம் படைக்கப் போகிறாள் என்று சுபா தன்னிடம் சொன்னதாக நளினி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்று எழுதிவிட்டனர்.

இப்படிக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமூலங்களை, விசாரணை அதிகாரிகள் வழக்குக்கு வலுசேர்க்கும் வகையில் ஆங்காங்கு அவர்கள் இஷ்டப்படி எழுதிக்கொண்டனர். இதெல்லாம் இப்போது தான் ஒன்றன்பின் ஒன்றாக வெளிவருகிறது" என்று முருகன் தன்னிடம் சொன்னதாக வழக்கறிஞர் எஸ்.துரைசாமி சொல்கிறார்.

தொடர்ந்து பேசிய வழக்கறிஞர் எஸ்.துரைசாமி, "ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சி.பி.ஐ. கண்டுபிடிக்க முடியாத மர்ம முடிச்சுகள் பல இருக்கின்றன என்று ஆரம்பகாலத்தில் இருந்து நான் சொல்லி வருகிறேன். அதுபற்றி சி.பி.ஐ-க்கும் காங்கிரஸ் அரசுக்கும் எந்த அக்கறையும் இல்லை. சில அப்பாவிகளை தூக்கில் போட்டுவிட்டு வழக்கை முடித்து விடத்தான் அவர்கள் துடிக்கிறார்கள்.

சி.பி.ஐ. கண்டுபிடிக்கத் தவறிய மிக முக்கியமான விஷயம், ராஜீவ் காந்தி வந்த விமானம் தாமதம் ஆகிவிட்டது என்ற விவரத்தை சிவராஜனுக்கு சொன்னது யார்? விசாகப்பட்டினத்தில் இருந்து மாலை 5.30-க்கு கிளம்ப வேண்டிய விமானத்தில் ராஜீவ் வருவதாக திட்டமிடப்பட்டது. ஆனால், ஒரு மணி நேரம் தாமதமாக 6.30-க்குத்தான் அந்த விமானம் அங்கிருந்து கிளம்பியது. சிவராஜன் ஒரு துண்டு சீட்டில் "சென்னை புறப்பாடு 5.30 மணி என்று முதலில் எழுதி, அதை அடித்துவிட்டு 6.30 என்று எழுதி இருந்தார். இதனை சி.பி.ஐ. கைப்பற்றி ஆதாரமாகக் காட்டியுள்ளது.

விசாகப்பட்டினத்தில் ராஜீவ் காந்தி விமானம் தாமதமாகப் புறப்படுகிறது என்ற தகவல ஸ்ரீபெரும்புதூரில் உள்ள வி.ஐ.பி-க்கள், போலீஸாருக்குக்கூடத் தெரியவில்லை. இப் போது உள்ளதுபோல 1991-ம் ஆண்டில் செல்போன், இன்டர்நெட் வசதிகள் எல்லாம் கிடையாது.

இருப்பினும் சிவராசனுக்கு ராஜீவ் காந்தியின் விமானம் தாமதமாகப் புறப்படுகிறது என்ற தகவல் முன்கூட்டியே எப்படி கிடைத்தது... இந்தத் தகவலை கொடுத்தது யார்? என்று சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரிக்கவே இல்லை. கண்டுபிடிக்க முயற்சிக்கவும் இல்லை. "பெப்ரவரியில் சிவராசனிடம் 9 வோல்ட் பேட்டரி வாங்கிக் கொடுத்தேன் என்று மட்டும்தான் பேரறிவாளன் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

ஆனால், விசாரணை அதிகாரி தியாகராஜன், "அந்த பேட்டரியை பயன்படுத்தித் தான் மே 21-ம் தேதி ராஜீவ் காந்தியை கொல்ல பயன்படுத்திய குண்டை வெடிக்கச் செய்தனர் என்று பேரறிவாளன் கூறியதாகவே ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ளே புகுத்திவிட்டனர். இப்படி சி.பி.ஐ. தன்னுடைய கற்பனைக்கு ஏற்றமாதிரி வாக்கு மூலங்களைத் திரித்து எழுதி உள்ளது.


அதை மையப்படுத்தி, "ராஜீவ் காந்தி கொலை - மர்மங்களும் மறைக்கப்பட்ட உண்மைகளும் என்று ஆங்கிலத்திலும் தமிழிலும் புத்தகம் எழுதியுள்ளேன" என்று சொன்னார்.

அந்தப் புத்தகத்தில் பல மர்மங்கள் வெளிச்சத்துக்கு வரும்!

-விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் உதைபந்தாட்ட லீக்; அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது



(மானிப்பாய்)

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கானது கடந்த வெள்ளிக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ, திட்ட அமைப்பாளர் அனுர டீ சில்வா, முன்னாள் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் மு.நடராஜா ஆகியோரினால் இவ் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன்மூலம் மிக நீண்ட காலமாக இருந்து வந்த பலரது எதிர்பார்ப்பு நனவாகியுள்ளது. இதுவரை காலமும் யாழ்.மாவட்டத்தினைப் பொறுத்தவரை பருத்தித்துறை மற்றும் யாழ். லீக் மட்டுமே இருந்து வந்துள்ளது.

புதிதாக வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கானது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதன் மூலம் பலரின் திறமைகள் வெளிக்கொணரப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

புதிதாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினது பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் உடுவில் பிரதேச சபைக் கட்டடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது தலைவராக கா.நவரத்தினராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செயலராக இ.யுகராஜ்ஜும், பொருளாளராக க.யோகலிங்கமும் தெரிவானார்கள்.

இங்கு உரையாற்றிய இலங்கை காற்பந்து சம்மேளனத்தின் தலைவர் ரஞ்சித் றொட்றிக்கோ யாழ்.மாவட்டத்தின் உதைபந்தாட்டத் துறையினை உயர்த்துவதற்கு சகலவிதமான பங்களிப்புகளையும் இலங்கை காற்பந்து சம்மேளனம் செய்யும் எனவும், வடக்கிலிருந்து இன்னும் பல வீரர்கள் தேசியத்திற்கு வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கானது உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியொன்றினை விரைவில் நடத்தவுள்ளது. (23)

## ஊரெழு றோயல் வி.க. உதைபந்தாட்ட போட்டி

ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வந்த யாழ்ப்பாண காற்பந்துச் சமரின் ஏனைய போட்டிகள் விரைவில் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அறுபதுக்கு மேற்பட்ட அணிகள் பங்கு கொண்ட இச்சுற்றுப் போட்டி விலகல் முறையில் நடைபெற்றது.

முதல் சுற்று ஆட்டங்களிலிருந்து எட்டு அணிகள் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

இப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன், வல்வெட்டித்துறை வல்லை, இளவாலை யங்ஹென்றிஸ், நாவாந்துறை சென்.நிக்கலஸ், மானிப்பாய் றெட்றோஞ்சர்ஸ், நாவாந்துறை சென்.மேரிஸ், ஊரெழு றோயல், குருநகர் பாடுமீன் ஆகிய அணிகள் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

இவ் அணிகளுக்கு இடையிலான லீக் போட்டிகள் நடைபெற்று வந்தன.

ஏனைய அணிகளுக்கு இடையிலான போட்டி அட்டவணைக்கு ஏற்ப இப்போட்டிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் விரைவில் போட்டி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இப்போட்டியில் புள்ளிகள் அடிப்படையி[ல்] முதல் நான்கு இடங்களை பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெறும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

# தென்னாபிரிக்கா டெஸ்ட் கோலிக்கு சவாலானது



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்டில் சச்சின் இடத்தில் கோலி களமிறங்க உள்ளதால் கடும் நெருக்கடியில் சிக்கித்தவிக்கிறார்.

தென்னாபிரிக்கா சென்றுள்ள இந்திய அணி ஒருநாள் தொடரை இழந்துள்ளதால், பல்வேறு விமர்சனாங்களுக்கு ஆளாகி வருகிறது.

நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் ஓய்வுக்கு பின், இந்தியா மோதும முதல் டெஸ்ட் என்பதாலும் எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ளது.

இதற்கிடையே சச்சின் இடத்தில் யார் களமிறங்குவார் என்ற விவாதம எழுந்துள்ளது, இதில் முதல் தெரிவாக இருப்பவர் வீராட் கோலி.

எனவே இதற்காக தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார், பந்துகள எகிறும் தென்னாபிரிக்க ஆடுகளத்தில் திறமையை நிரூபிக்க தயாராக உள்ளார்.

வலைப்பயிற்சியின் போது உமேஷ் யாதவ், ஷாகிர் கான், இஷாந்த சர்மா உள்ளிட்டோரை பவுன்சர் முறையில் பந்து வீசச் சொல்லி பயிற்சி கொள்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்சியாளர் ரேஜென்னிங்ஸ் கூறுகையில், சுழற்பந்துவீச்சை கோலி சிறப்பாக எதிர்கொள்வார். ஆனால தென்னாபிரிக்க மண்ணில் வேகப்பந்துவீச்சை எதிர்கொள்வது கடினம். இவரது இந்த பலவீனம ஒருநாள் தொடரில் நன்கு வெளிப்பட்டது. மணிக்கு 100 கி.மீ., வேகத்தில் செல்லும் காரை ஓட்டியவரை, திடீரென மணிக்கு 170 கி.மீ., வேகத்தில் பறக்கும் காரை ஓட்டச் சொன்னால் தடுமாற்றம ஏற்படத் தானே செய்யும். டெஸ்ட் தொடர் கோலிக்கு கண்டிப்பாக சவாலானதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

## வலம்புரி SPORTS

G. Matheisan

விளையாட்டுச் செய்திகள்

# உலகக் கிண்ண கபடி; இந்திய அணி சம்பியன்



உலகக் கிண்ண கபடிப் போட்டித்தொடரின் இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்திய இந்திய அணி சம்பியன் பட்டத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இந்திய அணி தொடர்ந்து நான்காவது முறையாக சாம்பியன் பட்டம் வென்று சாதித்துள்ளது.

பஞ்சாப் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டம் சனிக்கிழமை இரவு லூதியானாவில் உள்ள குருநானக் மைதானத்தில் நடைபெற்றது. இதில் நடப்பு சம்பியன் இந்தியா பாகிஸ்தானை சந்தித்தது. தொடக்கத்தில் இரு அணிகளும் சம அளவில் புள்ளிகளைப் பெற்றன.

பின்னர் இந்திய வீரர்கள் சுதாரித்து ஆட்டத்தை தங்கள் வசம் கொண்டு வந்தனர். முடிவில் 48:39 என்ற புள்ளிக் கணக்கில் இந்திய அணி வெற்றி பெற்றது.

சம்பியன் பட்டம் வென்ற இந்திய அணிக்கு வெற்றிக் கிண்ணமும் இரண்டு கோடி ரூபா பணப்பரிசும், பாகிஸ்தான் அணிக்கு கிண்ணம் மற்றும் ஒரு கோடி ரூபாய் பரிசும் வழங்கப்பட்டன.

# ஜூனியர் உலகக் கிண்ண ஹொக்கி; 6ஆவது முறையாக ஜேர்மன் சம்பியன்



ஜூனியர் உலக கிண்ண ஹொக்கி போட்டியில் ஜேர்மன் அணி 6 ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தது.

டில்லியில் ஆண்களுக்கான 10ஆவது ஜூனியர் உலக கிண்ண ஹொக்கி தொடர் நடந்தது.

இதில் நேற்று முன்தினம் நடந்த இறுதிப் போட்டியில் ஜேர்மன்- பிரான்ஸ் அணிகள் மோதின. ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் நிகோலஸ் வெல்லன் முதல் கோல் அடித்தார்.

இதற்கு 16ஆவது நிமிடத்தில் பிரான்ஸ் வீரர் காஸ்பர்டு பாம்கார்டன் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார்.

முதல் பாதி முடிவில் போட்டி 1:1 என்ற கணக்கில் சமநிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் பிரான்ஸ் அணியின் காஸ்பர்டு பாம்கார்டன் 40ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோல் அடித்தார்.

பின் சுதாரித்துக் கொண்ட ஜேர்மனியின் நிக்கோலஸ் வெல்லன் 44, 46ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல் அடித்து முன்னிலை பெற்றுத் தந்தார். தொடர்ந்து அசத்திய ஜேர்மனி அணிக்கு ஜோனஸ் கோமால்(60ஆவது நிமிடம்), கிறிஸ்டோபர் ரூர்(68ஆவது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். முடிவில், 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, 6ஆவது முறையாக (1982, 85, 89, 93, 2009, 13) சம்பியன் பட்டத்தை வென்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சர்வதேச போர்க்குற்ற விசாரணையை கூட்டமைப்பு வலியுறுத்த வேண்டும்

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன்

(குருமன்காடு)

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகள் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை சர்வதேச போர் குற்றவிசாரணைக்கு உட்படுத்துவதை நோக்கமாக கொண்டதாக இருக்க வேண்டும் என வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.**


தமது ஆதரவாளர்களுடனான சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது மண்ணில் இடம்பெற்ற கொடூர யுத்தத்தால் மரணித்த போராளிகள், பொதுமக்கள் ஆகியோரின் ஆத்மாக்கள் சர்வதேசத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பியுள்ளது.

இதனால் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசை சர்வதேச போர் குற்ற விசாரணைக்குட்படுத்த 2014 ஆம் ஆண்டு பங்குனி மாதத்தை சர்வதேசம் எதிர்பார்த்து காத்திருக்கின்றது.

இதனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் எமது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைகளும், அறிக்கைகளும் அது நோக்கியதாக இருக்க வேண்டும்.



இந்த விடயத்தில் எமது மக்களுக்காக போராடுகின்ற இந்திய மக்கள், தென்னிந்திய மீனவர்கள், புலம்பெயர் தமிழர்கள், ஜனநாயக பண்புகளை மதிக்கும் சிங்கள, முஸ்லிம் சகோதரர்கள் ஆகியோரின் மனதுகளை புண்படுத்தும் அறிக்கைகளையோ அல்லது கருத்துக்களையோ கூட்டமைப்பு உறுப்பினர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

அரசாங்கம் போர் குற்ற விசாரணையில் இருந்து தப்புவதற்காக எமக்கு ஆதரவாக செயற்படுபவர்களை எமது மக்களிடம் இருந்தும் கூட்டமைப்பிடம் இருந்தும் பிரித்து வைக்க முயன்று வருகின்றது. குறிப்பாக தென்னிந்திய மீனவர்கள் பிரச்சினையை கூட அரசாங்கம் அவ்வாறு தான் கையாள முயல்கிறது.

அவ் விடயத்தில் நாம் கவனமாக செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-250-266)




# சுண்டிக்குளம் பகுதியில் இயற்கை வளங்கள் அழிப்பு

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

சுண்டிக்குளம் பகுதியில் இயற்கை வளத்தை பாதுகாக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் ஒன்றை முன் வைத்துள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் எல்லைப் பிரதேசமாக காணப்படும் சுண்டிக்குளம், கல்லாறு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் காணப்படுகின்ற இயற்கை வளங்கள் பெருமளவில் அழிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அப் பிரதேசத்தில் இயற்கையாக விலங்குகளும் பறவைகளும் அதிகளவாக காணப்படுவதுடன் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்ற இடமாக காணப்படுகின்ற போதும் சட்டவிரோதமான மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதனாலும் காடுகள் அழிக்கப்பட்டு மரங்கள் திருடப்படுவதாலும் இயற்கை வளங்கள் மிக மோசமாக பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (ம-263)

# முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத வீதி திருத்தப்படுமா?

(இராமநாதபுரம்)

வட்டக்கச்சி பொதுச் சந்தை யின் ஊடாக சின்னச் சந்தை, கல் மடு நகர், கட்டைக்காடு, தர்மபுரம் வைத்தியசாலையை சென்றடையும் மக்களின் அன்றாட தேவைக்காக பயன்படும் இவ்வீதி பெரும் சேதத்திற்குள்ளாகியுள்ளது. எனவே பயணிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு பல தடவைகள் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காது அசமந்தப் போக்காகவே அதிகாரிகள் இருக்கின்றனர்.

எனவே இவ்வீதியூடாக தினமும் பெரும் எண்ணிக்கை யான மக்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் பயணம் மேற்கொள்கின்றார்கள்.

தற்போது பெய்து வரும் மழையால் இவ் வீதியால் பயணம் தடைப்படும் அபாயம் உள்ளது.

எனவே இவ்வீதியை புனர்நிர்மாணம் செய்தவற்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறிப்பாக சின்னச்சந்தை, கல்மடுநகர், கட்டைக்காடு மக்கள் தினமும் தர்மபுரம் வைத்தியசாலைக்கு இவ்வீதியைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

எனவே வெகுவிரைவில் இவ் வீதி திருத்தம் பெறுமா என கேள்வி எழுப்பப்படுகிறது. (ம-269)





2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் தொடர்பாக வட மாகாண மற்றும் புத்தளம் அனுராதபுரம் அரச அதிபர்கள் உட்பட அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோது, அதிதிகள் அழைத்து வரப்படுவதையும் யாழ்.மாவட்ட அரசாங்கம் அதிபர் சு.அருமைநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்ட செய்தியாளர்)

# வரவு செலவுத்திட்டம் தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் விளக்கம்

(பூந்தோட்டம்)

2014 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தொடர்பாக அரச அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கும் கருத்தரங்கொன்று நேற்று வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா அரசாங்க அதிபர் பந்துல கரிச்சந்திர தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் நிதி அமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர 2014 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் விளக்கம் அளித்திருந்ததுடன் எதிர்வரும் ஆண்டுகளில் அரச திட்டங்களில் ஏற்படும் திணைக்கள ரீதியான மாற்றங்கள் மற்றும் துறை சார்ந்த அபிவிருத்தி திட்டங்கள் என்பன தொடர்பாகவும் அரச அதிகாரிகளுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக சமுர்த்தி திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்பாடுகள் மற்றும் பெண்களுக்கான அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விளக்கம் கொடுக்கப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் பட்ஜெட்டின் ஊடாக சமுர்த்தி திட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் பெண்களின் சுய தொழில் அபிவிருத்திகள் மற்றும் வங்கி நடவடிக்கைகள் தொடர்பிலும் கருத்து தெரிவிக்கப்பட்டதுடன் பிராந்திய வங்கிகளின் உருவாககம் தொடர்பாகவும் கருத்து தெரிவித்திருந்தார்.

இந் நிகழ்வில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி.பி. அபயகோன், வவுனியா. மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, புத்தளம், அனுராதபுரம், மட்டக்களப்பு அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அரச திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ம-266)

# சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் அரங்கப் பயிற்சிப் பட்டறை நிகழ்வு

கிளிநொச்சி செஞ்சோலை இல்ல சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல் அரங்கப் பயிற்சிப்பட்டறை நிகழ்வு நேற்றமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இப்பயிற்சிப்பட்டறையில் செஞ்சோலை இல்லத்தைச் சேர்ந்த 80 மாணவிகள் கலந்து கொண்ட னர்.

பயிற்சிப் பட்டறையின் வளவாளர்களாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வழிகாட்டலும் ஆலோசனைப் பிரிவின் ஆசிரியருமான நா.கு. மகிழ்ச்சிகரன், யாழ். மத்திய கல்லூரியின் நாடகத்துறை ஆசிரியர் எஸ்.ரி.குமரன், சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மதி அமிர்தன் ஜெனீவன் , இந்தியாவைச் சேர்ந்த வோல்ரன் சுதா ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சிப்பட்டறைக் கான ஒழுங்கமைப்பை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த கரன் மேற்கொண்டார்.



இப்பயிற்சிப்பட்டறையில் மகிழ்வான கற்றலுக்கு மாணவர்களுக்கு தடையாக உள்ள விடயங்களை நீக்குவதற்கான வழிகள் கற்பனையாற்றல் விருத்தி செய்தல் , படைப்பாக்கத்திறன் , மகிழ்வான வாழ்வைக் கட்டியெழுப்புதல் போன்ற விடயங்கள் மாணவர்களுக்கு பயிற்சிகளாக வழங்கப்பட்டன.

இப்பயிற்சிப்பட்டறை தொடர்பாக மாணவிகள் கருத்து தெரிவிக்கும் போது , மிகவும் பயனுள்ள வகையில் அமைந்ததுடன் கற்றலுக்கான இலக்கு நோக்கி அடைவதற்கான வழிவகைகள் தொடர்பாக அறிந்ததாகவும் மகிழ்வான ஒரு பொழுதாக இருந்ததாகவும் கருத்து தெரிவித்தார்கள். இப்பயிற்சிப்பட்டறையில் சிறுவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். (ம-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் நிதி உதவிக்கு ஆப்கான் ஜனாதிபதி பாராட்டு



இந்தியாவின் நிதி உதவியினால் ஆப்கானின் உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையும் என்று அந்நாட்டு பிரதமர் ஹமீது கர்சாய் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள கர்சாய், புனேயில் நேற்று முன் தினம் நடைபெற்ற சர்வதேச உறவுகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஆப்கானுக்கு போதுமான அளவு இந்தியா நிதி உதவி அளித்துள்ளது. அது பயங்கரவாதத்திலிருந்து மீண்டு நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்துக்கு ஏதுவாக இருக்கும்.

பயங்கரவாதத்துக்கு எதிராக மக்களைக் காக்கும் பொறுப்பு நமக்கு உண்டு. ஜனநாயகத்தின் மீதான எதிர்மறை எண்ணங்கள் தவறு என்பதை இந்தியா நிரூபித்துள்ளது. கல்வித் துறையில் ஆப்கான் மேம்பாடு அடைய இந்தியா அளித்து வரும் உதவிகள் பாராட்டுக்குரியது.

ஆப்கானைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தியாவில் கல்வி பயின்று வருகின்றனர் என்று கர்சாய் தெரிவித்தார். (2)

## லோக்பால் மசோதாவை எதிர்ப்பது அர்த்தமற்றது சல்மான் குர்ஷித்

ஹசாரே ஒப்புக் கொண்ட பின்னர் லோக்பால் மசோதாவை எதிர்ப்பது அர்த்தமற்றது என இந்தியாவிற்கான வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஜன் லோக்பால் மசோதாவிற்கு, ஊழலை எதிர்த்து போராடி வரும் காந்தீயவாதி அன்னா ஹசாரே ஆதரவு தெரிவித்துள்ளார்.

ஆனால், இம்மசோதாவைக் கொண்டு சுண்டெலியை கூட சிறையிலடைக்க முடியாது என்று கெஜ்ரிவால் கூறியுள்ளார். அவரது இந்த கருத்துக்கு வெளியுறவுத்துறை அமைச்சர்சல்மான்குர்ஷித்கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசுகையில் ஹசாரே இம்மசோதாவை ஒப்புக்கொண்டபோது, அதை எதிர்த்து விவாதம் செய்வது தேவையற்றது என்றார். நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரிலேயே இம்மசோதா கட்டாயம் நிறைவேற்றப்படும் என அவர் கூறினார். (2)

# நாகை மீனவர்கள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம்

நாகை மீனவர்கள்கால வரையற்ற போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் 110 பேரை கடந்த வாரம் இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

இதை கண்டித்தும் அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் நாகை தாலுகா மீனவர்கள் கால வரையறையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இதன் காரணமாக கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களும் உடனடியாக கரை திரும்பும் படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தலைமன்னார் கடல் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்களை இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டு எச்சரித்தும், மீன்பிடி சாதனங்களை சேதப்படுத்தியும் விரட்டியடித்தனர்.

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து கடந்த சனிக்கிழமை காலை 300 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு சென்றனர்.

தலைமன்னார் கடல் பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் இராமேஸ்வரம் மீனவர்கள் 10இற்கும் மேற்பட்ட படகுகளில் இருந்து கடலில் விரித்திருந்த வலைகளை வெட்டினர்.

மேலும், வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு எச்சரித்து விரட்டினர்.

இதனால் உயிர்தப்பிய மீனவர்கள் சேதமடைந்த வலைகளை எடுத்துக் கொண்டு நேற்று முன்தினம் காலை கரைக்கு திரும்பினர். (2)

# டில்லி தலைவர்களை கடத்த தீவிரவாதிகள் சதித்திட்டம்

## உளவுத்துறையினர் உஷார் நிலை



(புதுடில்லி)

**டில்லியில் முக்கிய அரசியல் தலைவர்களை கடத்திச் செல்ல லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ள அதிர்ச்சி தகவல் தெரிய வந்துள்ளது.**

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியின் லஷ்கர் தொய்பா தளபதியாக இருப்பவன் ஜாவித் பலூசி. இவனது நடவடிக்கைகளையும், தொலைபேசி பேச்சுக்களையும் கடந்த சில மாதங்களாக மத்திய உளவுத்துறையினர் கண்காணித்து வந்தனர்.

டில்லி, ராஜஸ்தான், அரியானா, உத்தரபிரதேசத்தில் உள்ள சிலருடன ஜாவித் பலூசி அடிக்கடி பேசுவதை உளவுத்துறையினர்கண்டுபிடித தனர.

இதையடுத்து நடத்தப்பட்ட வேட்டையில் கடந்த வாரம் முகம்மது ஷாகித என்ற முக்கிய தீவிரவாதி பிடிபட்டான்.

அவனிடம் தீவிர விசாரணை நடத்தப்பட்ட போது, டில்லியில் முக்கிய அரசியல்வாதிகளை கடத்தி செலல லஷ்கர் தொய்பா தீவிரவாதிகள திட்ட மிட்டுள்ள அதிர்ச்சி தகவல் தெரிய வந்தது.

இந்த கடத்தல் திட்டத்தை வெற்றிகர மாக நடத்தி முடிக்கும் பொறுப்பை லஷ்கர்தொய்பா மூத்த தலைவர்கள, ஜாவித் பலூசியிடம் ஒப்படைத்து இருப்பதாகவும் தெரிய வந்தது.

பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பு மிக முக்கிய தலைவரை கடத்த ஜாவித் திட்டமிட்டிருந்தான்.

இதற் காக டில்லி புறகரில் உள்ள பலரு டன் பேசி அவன் ஒரு இணையத் தளத்தை உருவாக்கியுள்ளார். அதிர்ஷ்ட வசமாக இந்த சதி திட்டம் உளவுத் துறை மூலம் கண்டுபிடிக் கப்பட்டு விட்டது.

முக்கிய அரசியல் தலைவரை கடத்தி சென்ற பின்னர் அவரை பிணைக் கைதியாக வைத்து சிறைகளில் உள்ள தீவிர வாதிகளை விடுதலை செய்ய கெடு விதிக்க தீவிரவாதிகள் திட்டமிட்டி ருந்தது தெரிய வந்துள்ளது. (2)

# கஞ்சா பயிரிடுவதற்கு உருகுவே நாட்டில் அனுமதி

(மோன்டேவீடியோ)

தென் அமெரிக்க நாடான உருகுவே, கஞ்சா பயன்படுத்துவதற்கும், விற்பனை செய்வதற்கும், சட்ட பூர்வமான அங்கீகாரத்தை அளித்துள்ளது.

கஞ்சாவை பயிரிடுவதற்கு அங்கீகாரம் அளிக்கும் மசோதா, அந்நாட்டு பாராளுமன்றில் கடந்த வாரம், 12 மணி நேர விவாதத்திற்குப் பின்னர் நிறைவேற்றப்பட்டது.

இந்த மசோ தாவில், உருகுவே ஜனாதிபதி ஜோசே முஜிகா கையெழுத்திட்ட பின், சட்டமாக அமுல் படுத்தப்படும்.

இந்த மசோதா நிறைவேற்றப்பட்டதை அறிந்த, பாராளுமன்றிற்கு வெளியில் கூடியிருந்த ஆதரவாளர்கள், வாணவேடிக்கையுடன், தங்கள் மகிழ்ச்சியை வெளிப் படுத்தினர்.

போதைப் பொருளுக்கு எதிர்க் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், மசோதா நிறைவேற்றப்பட்ட நாள் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க தினம் என, ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரான அல்பர்ட் குரியல் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அந்நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள வருமாறு,

இந்த சட்டத்தின்படி, 18 வயது நிரம்பிய, உருகுவே நாட்டு மக்கள் அனைவரும், கஞ்சா எனப்படும், மரிஜுவானாவை பயிரிடலாம் ஒவ்வொருவரும், ஆறு செடிகளை வைத்திருக்க அனுமதிக்கப்படும். செடிகளை வளர்க்க விரும்புவோர் தங்களைப் பற்றிய விபரங்களை அரசிடம் பதிவு செய்வது அவசியம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# மரண தண்டனை நிறுத்த வேண்டும்

## பேரறிவாளனின் தாயார் பேட்டி



(மன்னார்குடி)

தூக்குத் தண்டனையை இரத்து செய்ய வேண்டும். இத் தண்டனை முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட முடிபு செய்துள்ளதாக பேரறிவாளனின் தாயார் அற்புதத்தம்மாள் தெரிவித்துள்ளார்.

மன்னார்குடியில் தமிழின உணர்வாளர்கள் அமைப்பு சார்பில் மரண தண்டனைக்கு எதிரான உயிர்வலி என்ற ஆவணப்படத்தின் குறுந்தகடு (சி.டி.) வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியில் பேரறிவாளனின் தாயார் அற்புதத்தம்மாள் கலந்து கொண்டு ஆவண படத்தை வெளியிட்டார்.

பின்னர அவர் நிருபர்களிடம் கூறியதாவது,

ராஜீவ்காந்தி கொலை வழக்கு விசாரணை அதிகாரி தியாகராஜன் வெளியிட்டுள்ள கருத்தால் எனது மகனுக்கும் ராஜீவ்காந்தி கொலைக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பது 23 ஆண்டுகள் சிறைவாசம் முடித்த பின்னர் தெரியவந்துள்ளது.

பேரறிவாளன் உள்ளிட்ட 3 பேரின் தூக்கு தண்டனையை இரத்து செய்ய வேண்டும் என சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றி முதல் அமைச்சர் ஜெயலலிதா தூக்கு தண்டனையை நிறுத்தி வைக்க காரணமாக இருந்தார்.

முதல் அமைச்சர் ஜெயலலிதா பேரறிவாளன் உள்ளிட்ட 3 பேரையும் விடுதலை செய்வதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும.

மேலும் நாடு முழுவதும் தூக்குத் தண்டனை பெற்ற பலர் அப்பாவிகளாக உள்ளனர். அவர்களிடம் மறு விசாரணை செய்து தூக்கு தண்டனையை இரத்துசெய்ய வேண்டும்.

இத் தண்டனை முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காக போராட முடிவு செய்துள்ளேன. என அவர் கூறினார். (2)

# சிலி ஜனாதிபதி தேர்தல்; மிச்செலி அமோக வெற்றி



(சாண்டியாகோ)

சிலி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மிச்செலி (வயது 62) அமோக வெற்றி பெற்று அந்நாட்டில் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

லத்தீன் அமெரிக்க நாடான சிலியில் சமீபத்தில் ஜனாதிபதி தேர்தல் நடந்தது.

அதில், ஆளும் சோஷலிஸ்ட் கட்சி சார்பில் முன் னாள் அமைச்சர் எவ்லின் மத்தேயியும், எதிர் கட்சியின் சார்பில் இடதுசாரி வேட்பாளராக மிச்செலி பேச்லெட்டும் போட்டியிட்டனர்.

நேற்று முன்தினம் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்ட நிலையில் எதிர்க்கட்சி வேட்பாளர்ர் மிச்செலி அமோக வெற்றி பெற்றார்.

இவருக்கு 62 சதவீத வாக்குகளும், எவ்லின் மத்தேயிக்கு 38 சதவீதம் வாக்குகளும் கிடைத்தன.

இது குறித்து கருத்து தெரிவித்த மிச்செலி, சிலி நாட்டு மக்கள் அனைவருக்கும் ஜனாதிபதியாக இருந்து நாட்டின் முன்னேற்றத்துக்கு பாடுபடுவேன் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்
~ திருவள்ளுவர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வட மாகாணத்தை அச்சுறுத்திவரும் வேலையில்லாப் பிரச்சினை

கிறுக்கல் சித்திரம் என்பது சித்திர வகைகளில் ஒன்று.

எனக்கு சித்திரம் கீறத்தெரியவில்லையே என்று ஏங்குவோரை கிறுக்கல் சித்திரம் ஆற்றுப் படுத்தும்.

மனம் போன போக்கில் கிறுக்கல் செய்து பின்னர் அக்கிறுக்கலில் இருந்து சித்திர வடிவங் களை இனம் கண்டு அதனை வெளிப்படுத்துவதே இதுவாகும்.

இந்த முறைமையில் மற்றவர்களை ஈர்க்கக் கூடிய சித்திரங்களை படைத்துவிட முடியாது. மாறாக ஏதோ நாமும் சித்திரம் கிறினோம் என திருப்தி அடைவதற்கானதே இதுவாகும்.

சித்திரங்களில் உள்ள இக் கிறுக்கல் நடை முறையை வேறு எந்தத் துறையிலும் பிரயோகிக்க முடியாது.

அவ்வாறு பிரயோகித்தால் அந்த துறையில் நாம் படுதோல்வி காண்பது சர்வ நிச்சயமாகி விடும்.

எனினும் துரதிர்ஷ்டவசமாக வட புலத்தின் பொருளாதார வர்த்தகத்துறைகளில் கிறுக்கல் சித்திரப் பிரயோகம் நடைபெற்றுள்ளதை இப்போது நாம் உணர முடிகின்றது.

ஒரு காலத்தில் உற்பத்தித் துறையில் உயர்ந்து நின்ற வடமாகாணம் யுத்த கால சூழ்நிலையால் வர்த்தகத்துறைக்கு பாய்ந்து கொண்டது.

பொருளாதாரத் தடை காரணமாக வர்த்தகத்தில் அதி உச்ச இலாபத்தை இலக்காக்கி அதன் முழுச் சுமையையும் நுகர்வோர் மீது சுமத்திக் கொண்ட கொடுமைத்தனங்கள் வட புலத்தின் பொருளாதாரத் திற்கு சாபக்கேடாக அமைந்து போயிற்று.

ஆம்! போர் காலச்சூழலால் வர்த்தகத்துறையில் ஈடுபட்டோருக்கு எல்லை மீறிய இலாபம் கிடைக்க, அதுவே நிரந்தரம் எனக் கருதிய வட புலத்து முயற்சி யாளர்கள் தங்களின் உற்பத்தி முயற்சிகளை விடுத்து வர்த்தகத்துறைக்கு தாவினர்.

இதன் காரணமாக எங்கெல்லாம் தார்வீதி காணப்பட்டதோ அங்கெல்லாம் கடை கட்டுவதில் பலரும் தீவிரம் காட்டினர்.

வட மாகாணத்தின் ஒட்டு மொத்த மக்கள் சமூக மும் வர்த்தகத்துறையை நம்பி முதலீடு செய்ய, அதே நேரம் போர்ச் சூழலும் தணிந்து கொண்டது.

இப்போது எங்கள் வர்த்தகத்துறை அதலபாதா ளத்தில் வீழ்ந்து கொண்டு இருக்கின்றது. இந்த வீழ்ச்சிக்கு லீசிங் கம்பனிகளும் காப்புறுதி அமைப் புக்களும் நிதி நிறுவனங்களும் கரகோசம் செய்து உற்சாகப்படுத்த பலர் இருந்த இடம் தெரியாமல் தப்பி ஓடினர். இன்னும் சிலர் தங்களது உயிரையே மாய்த்துக் கொண்டனர். இன்னும் சிலரோ மற்ற வர்களின் உயிரை எடுத்து தாங்கள் தப்பிப் பிழைத்தனர்.

இவ்வாறான ஆபத்து சூழ்நிலையில் இருக்கக் கூடிய வட மாகாணத்தில் இப்போது வேலை இல் லாப் பிரச்சினை எனும் பூதம் எங்கள் மக்களை துரத்தத் தொடங்கி விட்டது.

வீதி அகலிப்பு புனரமைப்புப் பணிகளில் சிறிது காலம் வேலை செய்த ஒரு குறிப்பிட்ட நம்மவர்கள் இப்போது அந்த பணி நிறைவடைந்ததை தொடர்ந்து வேலை அற்றவர்களாக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர கட்டிடத்தொழில், மாபிள் பதித்தல், தச்சுவேலை என்ற தொழில் துறைகளை தென் பகுதியைச் சேர்ந்த பலர் கைப்பற்றியுள்ள நிலை யில் எம்மவரின் தொழில் இழப்பு பெரும் பிரச்சி னையாக மாறி உள்ளது.

எனவே, இது தொடர்பில் பொருத்தமான மாற்று நடவடிக்கைகளை வடக்கு மாகாண அரசு முன்னெடுக்க வேண்டும். தாமதித்தால் நிலைமை மோசமாகும்.

# போதனா தொண்டர் தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குங்கள்

## அரச தாதிமார் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை யில் கடமை புரியும் தொண்டர் தொழி லாளர்களை மனிதநேயத்துடன் கருத் திற்கொண்டு அவர்களுக்கான நிரந்தர நியமனத்தைப் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச் சர்கள் முன்வர வேண்டுமென அரச தாதிய உத்தியோகத்தர் சங்க யாழ். போதனா வைத்தியசாலைக் கிளையி னர் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் விடுத் துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ள விடயங்கள் வருமாறு;

நீண்டகாலம் தொழிலாளர் வெற்றி டத்தை ஈடு செய்ய யாழ். போதனா வைத்தியசாலையில் மிகச் சொற்ப மான சம்பளத்துடன் (175 ரூபா. /நாள்) மின் உயர்த்தி இல்லாத காலகட்டத்தில் நோயாளரை மேல் மாடிகளுக்குக் காவிச் சென்றும் விடுதிகள், சத்திர சிகிச் சைக் கூடம், x-ray, ECU, ICU, EU இரத்த வங்கி, ஆய்வுகூடம், மருந்தகம், சாய்சா லைகள் (Clinic) போன்ற பல்வேறு பிரிவுகளிலும் இரவு பகல் பாராது வேலை செய்து வைத்தியாசாலையின் நோயா ளர் சேவை பாதிப்பின்றி முன்னெடுக்க மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்த இத் தொண்டர் தொழிலாளர்களை மனித நேயத்துடன் கருத்திற் கொண்டு அவர்க ளுக்கான நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள் முன்வரவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம் என்றுள்ளது. (செ-2)

# காளி அம்மனின் சிலை உடைப்பு தமிழர்களை விசனமடைய செய்துள்ளது

## ஈ.பி.டி.பி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

கோயில்கள் உடைக்கப்படுவது தமிழ் மக்களின் நம்பிக்கையை உடைப்ப தற்கு சமமாகும். யார்? அதைச் செய் தாலும் அது கண்டனத்துக்குரியதாகும் என ஈ.பி.டி.பி கண்டனம் தெரிவித்து ள்ளது. அக்கட்சியின் கண்டன அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏற்கெனவே வலிகாமம் வடக்கில் கோயில்கள் உடைக்கப்படுவதாக வெளி யான செய்திகள் உண்மையாக இருக்கு மானால் அதை உடனடியாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி அவர்களுக்கு அவசர மான கடிதம் எழுதி இருந்தோம்.

அதற்குப் பின்னர் ஹாலிஎல உடுவர வலஸ்பெத்த முருகன் ஆலயத் தில் அமைந்திருந்த நூற்றி ஐம்பது வரு டப் பழமையான காளி அம்மன் சிலை இனந்தெரியாத சிலரால் சேதமாக்கப் பட்டதாக வெளியான செய்தி தமிழ் மக் களை விசனமடையச் செய்திருக்கின்றது.

கோயில்கள் மீதான தாக்குதல்களி லும், உடைப்புக்களிலும் சம்மந்தப்பட் டவர்களை கண்டறிந்து உரிய நடவ டிக்கை எடுக்கப்படவும் தமிழ் மக்களின் மனதை புண்படுத்தும் இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடை பெறாமல் இருப்பதற்கும் ஜனாதிபதி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டு மென ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஜனாதிபதிக்கு மீண்டுமொரு அவசரக் கோரிக்கை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

எனவே தமிழ் மக்கள் எதிர் கொள் ளும் அரசியல் மற்றும் பல்வேறு பிரச் சினைகள் இங்கு உள்ளன. அவற்று க்கு கௌரவமான தீர்வு காணப்பட வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின் றோம்

அதற்காக ஐக்கியமாக பாடுபட வேண்டிய இக்கால கட்டத்தில் கோயில் கள் உடைக்கப்படுவதும் கொள்ளை யடிக்கப்படுவதும் ஐக்கியத்தை சிதைப் பதோடு நாட்டுக் கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆலயத்தில் திருட்டு

(மூங்கிலாறு)

மூங்கிலாறு ரச்சத விநாயகர் ஆலய த்தில் நேற்று முன்தினம் இரவு பொருட் கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தெரியவருவ தாவது,

ஆலய கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள். அங்குள்ள பொரு ட்களை எடுத்து தப்பிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக புதுக்குடியி ருப்பு பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இரண்டாவது தடவையாக இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-268)

# மதுசாரத்திற்கு எதிரான இரண்டாவது மாநாடு

(யாழ்ப்பாணம்)

ஹெல்தி லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் மதுசாரம், சிகரட் உட்பட போதைப்பொருள் தடுப்பு தேசிய வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணி இயங்கி வருகின்றது. தமது அமைப்பு தமிழ் பேசும் மக்கள் மத்தி யில் மதுசாரம் மற்றும் சிகரட் உட்பட போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை களை மேற்கொண்டு வருவதாக அதன் தலைவர் தே. பிறேமராஜா அறிவித்துள் ளார்.

யுத்தத்தின் பின்னர் மதுசாரம், சிகரட் கம்பனிகள் திட்டமிட்ட வகையில் பிரதேசங்களில் வியாபார நடவடிக்கை களை மிகவும் கைங்கரியமாக மேற் கொண்டு வருகின்றன.

இதற்கு சவாலாக இளைஞர்கள் இணைந்து மதுசாரம் , சிகரட் கம்பனி களின் முயற்சிகளை முறியடிக்கும் நோக்கத்துடனும் மக்களுக்கு விழிப்பு ணர்வுகளை ஏற்படுத்துவதற்கும் செய ற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின் றனர்.

மேலும் இவ் அமைப்பு தோற்றம் பெற்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தியா வதை முன்னிட்டு மதுசாரத்திற்கு எதி ரான தமிழ் இளைஞர் அணி இரண் டாவது மாநாட்டை நடத்தத் திட்டமிட் டுள்ளது.

இம்மாநாடு நாளை புதன்கிழமை யாழ். நாவலர் மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (அ)

# இரத்ததான முகாம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக மும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இரத்ததான முகாம் நாளை புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இவ் குருதிக் கொடை நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சம்மேளன இளைஞர்கள் யுவதிகள் இரத்ததானம் செய்யவுள்ள னர்.

அத்துடன் உயிர் காக்கும் உன்னத பணியிற்கு ஆர்வமுள்ள அனைவரை யும் கலந்து கொடை செய்து ஆதரவு அளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். (அ-9-23)

ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி



இந்துநெறி காப்போம்
இந்துவாக வாழ்வோம்

இந்துக்களே உங்களுடைய தார் மீக கடமையாக ஓம் நமசிவாய மந் திரத்தினை ஆயிரக்கணக்கில் எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப் பித்து எமது சமயத்தினையும் சமய விழுமியங்களையும் எம்மக்களை யும் காத்திட அர்ப்பணிப்புடன் ஐந்தெழு த்து மந்திரம் முதலீடு செய்யுமாறு சர்வ தேச இந்து மத குருமார் ஒன்றியம் அறிவித்துள்ளது.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## மீண்டும் திரும்பி வரும்



1. நமது வாழ்க்கை சிறந்ததாகவும், தூய்மையான தாகவும் இருந்தால் மட்டுமே உலகமும் சிறப்புடை யதாக இருக்கும்.
2. அறியாமையுடன் வாழ்வதைக் காட்டிலும், போரில் ஈடுபடும் வீரனைப் போல போராடி மாய்வதே மேலானது.
3. உண்மை எங்கே இழுத்துச் சென்றாலும், அதைப் பின்பற்றுங்கள். நேர்மையின் பாதையில் செல்லுங்கள். கோழையாகவும், வேடதாரியாகவும் இருக்காதீர்கள்.
4. கொடுக்கும் சக்தி உங்களிடம் உள்ள வரையில் கொடுங்கள். அது ஆயிரம் மடங்காகப் பெருகி உங்களிடமே மீண்டும் வரும்.
5. எல்லாவற்றையும் செவி சாய்த்துக் கேளுங்கள். உங்களுக்கு எது நல்லதென்று படுகின்றதோ, அதை உறுதியாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பெருங்கடலில் சீனாவுக்குப் போட்டியாக இந்தியா

இந்தியப் பெருங்கடலில் இந்தியா தனது மூலோபாய அடித்தளத்தை விரிவாக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது.

இந்தியா, இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளை உள்ளடக்கிய முத்தரப்பு பாதுகாப்புக் குழுவில், மொறிசியஸ், செசெல்ஸ் ஆகிய நாடுகளையும் இணைத்து, அந்தக் குழு விரிவாக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 19ஆம் திகதி இந்த மூன்று நாடுகளின் மூத்த அதிகாரிகள் சந்தித்து, இந்த நாடுகளையும் முறைப்படியாக இணைத்துக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

இந்தியாவின் சார்பில் இந்தக் கூட்டத்தில், பங்கேற்கும் குழுவுக்கு பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நேச்சல் சந்து தலைமை தாங்கவுள்ளார்.

இதுதொடர்பாக, முறைப்படியான முடிவுகளை எடுப்பதற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்திலான முத்தரப்புக் கூட்டம், இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நடத்தப்படும் என்று இந்திய அரசாங்க வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளன.

இந்தியப் பெருங்கடல் நாடுகளைக் கவனித்துக் கொள்ளும் புதிய பிராந்திய பிரிவு ஒன்றை உருவாக்கும் இலக்கிலான இராஜதந்திர நடவடிக்கைகளை இந்திய வெளிவிவகார அமைச்சு, தீவிரப்படுத்தியுள்ளது.

இரண்டாவது முத்தரப்பு கூட்டத்தை அடுத்து. மூன்று நாடுகளும், பல்வேறு இணக்கப்பாடுகளை எட்டியிருந்தன.

ஒன்றின் பொருளாதார கடல் எல்லையை மற்றொரு நாடு கண்காணிக்கவும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

மாலைதீவு, இலங்கை உள்ளிட்ட இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் அண்மைக்காலமாக, சீனா மிகப்பெரியளவில் ஊடுருவியுள்ள நிலையிலேயே, இந்தியா தனது காலை ஊன்றத் தொடங்கியுள்ளது. (அ-2)

## கொள்ளையர்கள் அறுவர் கைது

(புத்தளம்)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஆறு பேரை புத்தளம் தொகுதி விசேட புலனாய்வுப் பிரிவு மற்றும் விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யதுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் தலைமை தாங்கியவர் முறைப்படி இராணுவத்திலிருந்து விலகிய ஒருவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்தோடு இவர்கள் ஆறு பேரும் பலவகை குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என்றும் அறிய முடிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)



திசைகாட்டி விசா ஆலோசனை நிறுவனத்தின் நிதியூட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட திசைகாட்டி கலை இலக்கிய மன்ற ஆரம்ப விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆனைபந்தி சந்தியிலுள்ள திசைகாட்டி குழுமக் காரியாலயத்தில் நடைபெற்றது. மேற்படி நிகழ்வில் விழிப்புல வலுவிழந்தோர் இல்ல வாழ்வகத்தின் தலைவர் ரவீந்திரனுக்கு திசைகாட்டி நிறுவனத்தின் ஸ்தாபகரும் மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணியுமான வி.எஸ். நிரஞ்சன் மடிக்கணனி ஒன்றை வழங்குவதையும் திசை காட்டி குறூப் தலைவரும் பட்டயக் கணக்காளருமான எஸ். செல்வராஜா, கலை இலக்கிய மன்ற தலைவர் கலாநிதி த.கலாமணி, பொருளார் கவிஞர் சோ. பத்மநாதன் ஆகியோர் அமந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# ஏதாவதொரு விளையாட்டில் மாணவர்கள் ஈடுபடவேண்டும்

## அமுலுக்கு வருகிறது திட்டம்

நாடு முழுவதிலும் உள்ள பாடசாலை மாணவர்களை ஏதாவது ஒரு விளையாட்டில் கட்டாயம் ஈடுபடுத்தும் முறைமை அடுத்த வருடம் முதல் அமுல்படுத்தப்படவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் விளையாட்டுத்துறை அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இது தொடர்பில் கல்வி அமைச்சும் எமது அமைச்சும் இணைந்து புதிய திட்டம் ஒன்றை வகுத்துள்ளதுடன் சகல பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சின் ஊடாக சுற்று நிருபம் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை நாட்டிலுள்ள சகல பிரஜைகளையும் ஏதாவது ஒரு விளையாட்டில் ஈடுபடுத்துவதும் எமது இலக்காகும்.

பாடசாலைகளில் சுமார் 5 வீதமான மாணவர்களே விளையாட்டுப் போட்டிகள், மெய்வல்லுநர் போட்டிகளில் ஈடுபடுகின்றனர்.

நாட்டில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித் துச் செல்கிறது.

சிறுவர்களும், இளைஞர்களும் தற்காலத்தில் நோய்வாய்ப்பட்டுச் செல்கின்றனர். இதற்கு பயிற்சியும், விளையாட்டில் ஈடுபாடும் இல்லாமையே காரணமாகும். இதனாலேயே கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு மாகாண சபைகளுடன் இணைந்து புதிய நடைமுறையைக் கொண்டுவர தீர்மானித்துள்ளது என்றார். (அ-2)

# கௌதம புத்தரின் புனித சின்னங்கள் திருட்டு

இலங்கையிலிருந்து கம்போடியாவுக்கு கொண்டு செல்லப்பட்ட கௌதம புத்தரின் கேசம், பற்கள், எலும்புகளைக் கொண்ட தங்கப் பேழையொன்று திருட்டுப் .போயுள்ளது.

இதனை தேடிவருவதாக கம்போடிய பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி மலைப் பிராந்திய புனித ஸ்தலமொன்றிலிருந்து களவாடப்பட்ட அநேக சிறிய திருவுருவ சிலைகள் கடந்த வாரம் உடோங் நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதும் புனித சின்னங்களைக் கொண்ட பேழையைக் கண்டு பிடிக்க முடியவில்லை என அந் நாட்டு பொலிஸ் பேச்சாளர் கிர்த் சந்தாரித் கூறினார்.

அந்தப் பேழை எங்கிருக்கிறது என்பது எமக்குத் தெரியவில்லை. நாம் அதனைத் தொடர்ந்து தேடி வருகிறோம் எனக் கூறிய சந்தாரித் மேற்படி திருட்டுடன் தொடர்புடைய 5 காவலர்களை கைது செய்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த புனித சின்னங்கள் 1950 களில் புத்தரின் 2500ஆவது பிறந்த தினத்தைக் குறிக்கும் வகையில் இலங்கையிலிருந்து கம்போடியாவுக்கு கொண்டுசெல்லப்பட்டதாக நம்பப்படுகிறது.

மேற்படி புனித சின்னங்கள் 2002 ஆம் ஆண்டில் மறைந்த மன்னர் நொரோடம் சிஹனோக் கால் கம்போடிய தலைநகரிலிருந்து உடோங் பிராந்தியத்திலுள்ள புனித ஸ்தலத்துக்கு கொண்டு செல்லப்பட்டன. (அ-2)

# மிளகாய் செய்கை விவசாயிகளை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிற்கு வருடாந்தம் ஐம்பதாயிரம் மெற்றிக்தொன் செத்தல் மிளகாய் பாவனைக்குத் தேவைப்படுகின்றது.

உள்ளூர்த் தேவையை ஈடுசெய்வதற்காக தற்போது வருடாந்தம் 35 மில்லியன் மெற்றிக்தொன் செத்தல் மிளகாய் இறக்கு மதி செய்யப்படுகிறது.

செத்தல் மிளகாய் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் முகமாக வாழ்வின் எழுச்சி தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் செத்தல் மிளகாய் உற்பத்திக்கு 150 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் மீண்டும் இலங்கையை செத்தல் மிளகாய் செய்கையில் தன்னிறைவு அடையச் செய்வதே அமைச்சரின் நோக்கமாகும்.

தற்போது கமநலசேவை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ரொஹான் விஜயகோன் தலைமையில் நடெங்கிலும் செத்தல் மிளகாய் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோர் அதனை கூடுதலாக செய்கை பண்ண ஊக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

செத்தல் மிளகாய் செய்கைக்கான கூடுதலான நிதியை நாடெங்கிலும் உள்ள விவசாயிகளுக்கு கொடுத்து ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கமநல சேவை அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன உத்தரவிட்டுள்ளார்.

குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உள்ள 15 ஆயிரம் செத்தல் மிளகாய் உற்பத்தியாளர்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இவர்கள் செத்தல் மிளகாயுடன் பழம் மற்றும் காய்கறிகளையும் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ-2)

# தமிழீழ கனவை நிறைவேற்றவே ஜப்பான் தூதுவர் விரும்புகிறார்

## குணதாச கொதிப்பு

(கொழும்பு)

ஆயுதத்தினால் பெறமுடியாது போன தமிழீழ கனவை நிறைவேற்றும் நோக்கத்துடன், யசூசி அகாஷி போன்றவர்கள் செயற்பட்டு வருவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

30 வருடங்கள் ஆயுதப் போராட்டம் நடத்திய விடுதலைப் புலிகளால் அடைய முடியாது போன தமிழீழம் என்ற கனவை, நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கில் பலர் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர்.

ஜப்பானின் விசேட சமாதான தூதுவர் யசூசி அகாஷியின் செயற்பாடுகளும் கருத்துக்களும் கூட அவ்வாறே அமைந்துள்ளன.

எனவே, அரசு இவ்வாறான முகமூடிக்காரர்களை நம்பி ஏமாந்து விடக்கூடாது.

நண்பர்களைப் போன்று நாட்டுக்குள் நுழைந்து நாசகார சக்திகளின் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய செயற்பட்டு வருபவர்களை இனம் கண்டு கொள்ள வேண்டும்.

அத்தோடு அவர்களிடமிருந்து விலகிக் கொள்ள வேண்டும். இல்லையேல் நாடு பிளவுபடுவதை தவிர்க்க முடியாது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு...

லேயே பல மாற்றங்கள் இது வரை நிகழ்ந்ததில்லை. கிளிநொச்சியும், முல்லைத்தீவும் முற்றாக அழிக்கப்பட்டு மீண்டும் குடியேறி வாழ்கின்ற நிலையில் மீண்டும் ஒரு அழிவுப் பாதையில் கொண்டு செல்வதற்குதான் இந்த இரணை மடுதிட்டம் கொண்டுவரப்பட்டதா என்கிறார்கள் அவர்கள்.

இரணைமடு குளம் 34 அடி நீரைக் கொண்டது. ஆனால் 2 அடி தண்ணீரைக் கூட்டி நாங்கள் அந்த மேலதிக நீரிணைத்தான் யாழ்ப்பாணம் கொண்டு செல்கின்றோம் என அதனைக் கொண்டு செல்கின்றவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் அதுவல்ல உண்மை. கிளிநொச்சி இரணைமடுக் குளத்திலிருந்து கிளிநொச்சி மாவட்டத்தில் 34 ஆயிரம் ஏக்கருக்கு நீர் பாய்ச்ச முடியும். ஆனால் அந்த 34 ஆயிரம் ஏக்கரில் சிறுபோகத்திற்கு 8ஆயிரம் ஏக்கருக்குத்தான் நீர் பாய்ச்ச முடியும்.

அந்த விவசாயிகள் கடந்த 70 தொடக்கம் 80 வருடங்களாக கேட்கிறார்கள். இந்த 8 ஆயிரம் ஏக்கரினை உங்களால் 16 ஆயிரம் ஏக்கராக மாற்றமுடியுமா? எமது விவசாய நிலங்களினை கூட்டமுடியுமா எனக்கேட்கிறார்கள்.

இது வரை இத்திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடனோ அல்லது அதன் பாராளுமன்ற உறுப்பினர்களிடமோ அவர்கள் பேசவில்லை.

அவர்கள் ஒரு சார்பாக நின்றார்கள். நாம் எடுத்த முடிவு சரி என்று நின்றார்கள். மாகாண சபை வந்தது தேர்தல் நடந்தது. மாகாண சபையிடம் இரணை மடுக்குளம் வந்து விட்டது. விவசாயிகளிடம் மீண்டும் கையெழுத்து வாங்குகின்ற காலம் வந்துவிட்டது.

இரணைமடுஎன்பது எம்மை அழிப்பதற்கான நீர்த்திட்டமாக இருக்க கூடாது. அது அந்த மண்ணிலே முதலில் அந்த விவசாயிகளிற்கு பயன்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் நீரை அசுத்தமடைய செய்கிறோம். சுன்னாகத்தில் மின்சார சபையின் கழிவொயிலினால் கிணறுகளில் கழிவொயில் கலந்துள்ளது. அதற்கான வழிமுறை இது வரை கண்டறியப்படவில்லை.

குப்பைகளினை சேகரிக்க எம்மிடம் திட்டமில்லை. உமையாள்புரத்தில் விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் எவ்வாறு குப்பைகளினை சேர்த்து மீள்சுழற்சிக்கு பயன்படுத்தினர் என்று நாம் அறிந்து இருப்பது அவசியம்.

விடுதலைபுலிகள் இத்திட்டத்திற்கு சம்மதம் தெரிவித்திருந்தார்கள் என கூறுகின்றார்கள் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு கடிதம் கொடுத்திருக்கின்றார்கள் என்று எல்லாம் சொல்லுகின்றார். விடுதலைபுலிகளினுடைய காலம் தமிழீழத்தில் வாழ்ந்த காலம். அவர்களினை நம்பி மக்கள் இருந்தார்கள்

சொல்வதனை செய்தார்கள். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கூட விடுதலைப் புலிகளினை நாங்கள் ஏற்கவில்லையென பகிரங்கமாக சொன்னால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பே அதன் அடையாள ஆணிவேரினை இழக்க செய்யும் காலம் தான் இந்தகாலம்.

நான் எதிர்க்கவில்லை. நியாயங்களை கேட்கிறேன். நானும் யாழ் மாவட்டத்தினை சேர்ந்தவன்தான் யாழ் மாவட்டத்திலுள்ள வாக்காளர்களினை கவர வேண்டும் என்பதற்காக நான் கிளிநொச்சி மாவட்ட த்திற்கு துரோகம் செய்ய தயாரில்லை.

எனக்கு பாராளுமன்ற பதவி வேண்டும் என்பதற்காக நடக்கின்ற அநியாயங்களை மறைப்பதற்கு நான் தயாரில்லை.

முதலமைச்சர் இதனை புரிந்து கொண்டு செயற்படுவார். இதனை இத்திட்டத்தினை கொண்டுவருபவர்கள் அதனை வெளிப்படையாக்க வேண்டும்.

நான் நடப்பது தவறாக இருந்தால் வரலாறு என்னை மன்னிக்காது. நான் சொல்வது சரியாக இருந்தால் வரலாறு நாளை என்னை போற்றும்.

ஆகவே நான் வரலாற்று தவறினை விடத் தயாராகவில்லை. யாழின் பல இடங்களில் தண்ணீரை போத்தலில் அடைத்து விற்பனை செய்கிறார்கள் .

ஏன்! யாழ் பல் கலைக்கழகம் இத் தண்ணீர் தொடர்பாக மௌனம் காக்கின்றது. இது தொடர்பில் யாழ் பல்கலைக்கழகம் அறிக்கை விடு க்கட்டும்.

இத்தண்ணீர் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டால்

பல தற்கொலைகள் கிளிநொச்சியில் நடக்கும் என்றார் சிறிதரன்.

இதேவேளை இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அதற்கு பதிலளித்துப் பேசுகையில், செயற் திட்டங்கள் பற்றிப் பேசும் போது உணர்ச்சி வயப்படுவதில் பிரயோசனம் இல்லை. அது உள்ளத்திலிருந்து வரவேண்டும். அறிவு பூர்வமாக இந்தச் செயற்திட்டம் வடமாகாண மக்களுக்கு நன்மை பயக்கிறதா? என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட விடயத்தை நாங்கள் பேசி ஆராய்ந்த பின்னர்தான் நான் தம்பியிடம் நீங்கள் தண்ணீர் கொண்டுவருவீர்களா? இல்லையா? என்று கேட்டேன்.


இரணமடுக்குளத்தில் 12அடி தண்ணீர் இருந்தால் அதை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை. 32 அடிக்கு மேல் இருந்தால் அது யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படும் எனவும் முதலமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.

இந்த நிகழ்விற்கு இவர்களோடு வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர்கே.சயந்தன், சாவகச்சேரி நகராட்சி மன்றத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தமிழ்ப் பண்பாட்டை பேணுகின்ற பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றதோடு மறவுன் புலவு க.சச்சிதானந்தன் அறிஞர் வரிசையில் நேற்று கௌரவிக்கப்பட்டார். (செ-4)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை கந்தசாமி



யாழ்ப்பாணம் அச்சுவேலி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் திருகோணமலையில் வசித்து வந்தவருமான ஓய்வுநிலை தலைமையாசிரியர் வேலுப்பிள்ளை கந்தசாமி (J.P) (மாப்பாண வாத்தியார்) 16.12.2013 அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக அச்சுவேலி இடைக்காட்டில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் வைக்கப்பட்டு தகனக் கிரியைக்காக பிற்பகல் 4.00 மணிக்கு இடைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மகன் க.முருகவேல்
வலயக்கல்விப் பணிப்பாளர்,கிளிநொச்சி.

(இ-5804)

## சாரதி தேவை

கனரக வாகனம் (AD) சாரதி உடன் தேவை. மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
0776729641, 0750403632

## சிதம்பர தரிசனம்



**நாளை நமக்கொரு தீர்வுதர தேரேறி வருகிறான்**

ஈழத்து சிதம்பரத்தில் தேரேறி வருகிறான்
நாளை நமக்கொரு தீர்வுதர தேரேறி வருகிறான்
வாழும் முறைசெய்த சிவன் தேரேறி வருகிறான்
வண்ணப் பேரழகி சௌந்தராவுடன் தேரேறி வருகிறான்
சூழும் துயர்தீர்க்க சுந்தரேசன் தேரேறி வருகிறான்
சுபீட்சம் சுதந்திரம் சமாதானம் தந்தாள தேரேறி வருகிறான்.
நீள நிலைந்து வாழ வழிகாட்டும் சிவன் தேரேறி வருகிறான்.
நிரந்தர தீர்வுதர சிதம்பரத்தில் தேரேறி வருகிறான்.

**மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன்**

**இன்று (2013/12/17) செவ்வாய்க்கிழமை ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரதபவனி)**

(சு-5731)




யூனியன் வங்கி

உங்களுக்கு மேலும் சிறந்த சேவை வழங்குவதற்காக

**யூனியன் வங்கி சுன்னாகம் கிளை**

இன்று இடமாற்றம் செய்யப்படும்.

118, சேர் பி. இராமனாதன் (கே.கே.எஸ்) வீதி,
சுன்னாகம்.

021 2240930

5th Elephant

(சு-5801)

பிச் ரேட்டிங் BB+(lka), RAM BBB/P3
யூனியன் பாங்க் ஒப் கலம்பு பி.எல்.சி. இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் வர்த்தக வங்கியாகும்.

தலைமை அலுவலகம்: 64, காலி வீதி, கொழும்பு 03. தொலை: 011 2 374 100
www.unionb.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து மகாசபை...








மேற்படி பாதயாத்திரை இடம் பெற்றுள்ளது.

மாணவர்களிற்கு சமய விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களினை ஆன்மீகத்திற்குள் வரவழைக்கும் நோக்குடனும் இப்பாத யாத்திரை இடம் பெற்றுள்ளது.

சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் ஸ்ரீ சபா வாசுதேவ குருக்களின் ஆசியுடன் ஆரம்பமாகிய இப் பாதயாத்திரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வலிமேற்கு பிரதேச சபைத்தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், பிரதேச சபை உறுப்பினர் த. நடனேந்திரன், பிரமச்சாரி யாக்கிரதை சைதன்யா, இந்து மகாசபை பிரதிநிதிகள், அம்பாறை திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய வெளி மாவட்டங்களினைச் சேர்ந்த பலநூற்றுக்கணக்கான சிவ தொண்டன் அமைப்பினைச் சேர்ந்தவர்களும் பாதயாத்திரையில் கலந்து கொண்டிருந்தனர்.

இதே வேளை இப்பாதயாத்திரையின் போது சம்பில் துறையில் உள்ள 21 சிவன் தரிசிப்பும் இடம்பெற்றது. (செ-4-6)

## இலங்கை மீதான...

களை ஏற்படுத்தக் கூடும். இலங்கையில் 30 ஆண்டு கால யுத்தம் நிறைவுக்குக் கொண்டு வரப்பட் டமை குறித்து ஐரோப்பிய பாராளுமன்றம் கவனம் செலுத்தத் தவறியுள்ளது.

இலங்கையின் வடக்கில் சிறு தொகுதி மக்களினால்தான் பயங்கர வாதம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கும் தமிழ் மக்களுக்கும் தொடர்பு கிடையாது என்றார்.

மேலும் ஆக்கபூர்வமான முறையில் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குதே சிறப்பான வழிமுறையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## யாழ். போதனா...

கின்ற நோயாளர்களை விடுதிகளுக்கு கொண்டு செல்லும் பணியை இந்த தொண்டர் ஊழியர்கள் இதுவரை காலமும் மேற்கொண்டு வந்துள்ளனர்.

நான்கு நாட்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கவனயீர்ப்பு போராட்டத்தினால் நோயாளர்களை, அவர்களது உறவினர்களே விடுதிகளுக்கு அழைத்து செல்ல வேண்டிய அவதி நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ் போதனா வைத்தியசாலையின் தொண்டர் ஊழியர்களின் நியமனம் குறித்து ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து தான் உடனடியாக அறிந்து கொண்டதாக சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக்க குறிப்பிட்டார்.

அத்துடன், சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மற்றும் யாழ். மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உரிய அதிகாரிகளுடன் இந்த விடயம் தொடர்பில் வெகுவிரைவில் கலந்துரையாடவுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## தமிழகத்து...

பொதுக்குழுவில் அறிவித்திருக்கிறார். உண்மை என்னவென்றால் அந்த இரண்டு கட்சியுமே கருணாநிதியை சேர்த்துக் கொள்ள தயார் இல்லை. தனிச்சு விடப்பட்டவர் இன்னிக்கு இவர் தனியா போறதா சொறாரு. உங்க நடிப்பை மக்கள் மறக்க மாட்டாங்க.

மத்தியில் ஆட்சியில் இருக்கும் போது ஒண்ணும் செய்யாமல் சும்மா வேடிக்க பார்த்த கருணாநிதி இன்றைக்கு ஈழ மக்களுக்கு ஆதரவாக அறிக்கை விடுகிறார். 1 லட்சத்து 76 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இவர் அசஞ்சு கூட கொடுக்கல. திருச்சி, ஊட்டியில இலங்கை ராணுவத்துக்கு பயிற்சி கொடுத்தார். தமிழகத்தில் கருணாநிதி குடும்ப ஆட்சி நடப்பதை போல, இலங்கையில் ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷன்னு ஒரு குடும்பம் கூடமே ஆட்சி செய்யுது.

கருணாநிதி தமிழகத்து ராஜபக்ஷ, ராஜபக்ஷ இலங்கையின் கருணாநிதி, இந்த இரண்டு பேருக்கும் வித்தியாசம் இல்லை. அம்மாவைப்போல் சட்ட சபையில் தீர்மானம் போடாத கருணாநிதி, தன்னுடைய மகளை அனுப்பி ராஜபக்ஷவிடம் பரிசு வாங்கிட்டு வந்து பொக்கிஷமா பாதுகாக்கிறார் என்றார். (செ-11)

**விற்பனையாகின்றன**

வெளிக்கள போதனாசிரியர் போட்டிப்பரீட்சை வழிகாட்டி
கமநல திணைக்கள போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி நூல்
ஆக்கம்
**P. கமல்தாசன்**
கிடைக்கும் இடங்கள் :
பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலை,
கஜன், இராமச்சந்திரா புத்தகசாலை (வவுனியா)
(C-5802)

## ஜனாதிபதி மகிந்த...

கென்யாவுக்கான இந்த விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட 9 புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் புதிய கற்கை நெறிகள்

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**IELTS** Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above >
Duration: 2 1/2 Months

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

**Young Learners for English (YLE)** (வயதெல்லை : 7 - 12)
இது ஒரு சர்வதேசப் பரீட்சை என்பதுடன் University of Cambridge வழங்கும் சான்றிதழ்

| Batch - 1 | Batch - 2 | Batch - 3 | Batch - 4 |
|---|---|---|---|
| 20-12-2013 | 23-12-2013 | 28-12-2013 | 30-12-2013 |

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

## மகிந்த அரசிற்கு...

வேண்டும் என தெரிவித்தார்.

சகலவற்றுக்கும் அரசாங்கம் பயன்படுத்தும் மகிந்த சிந்தனையில் போதைக்கு முற்றுப்புள்ளி என தெரிவிக் கப்பட்டிருந்தாலும் பிரதமரும் ஹெரோயின் போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்டுள்ளார்.

எதிர்காலத்தில் அவருக்கு "குடு (தூள்) ஜயே" என்று பட்டப் பெயர் வைக்கப்படலாம் எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டார். (செ-11)

## போதைப் பொருள்...

உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையற்றுகையில்;

மாணவ சமுதாயம் இன்று ஒரு மிகத்தவறானதகாத சூழலுக்கு முகம் கொடுத்து வர வேண்டியுள்ளது. முன்னெப்பொழுதும் இல்லாத அளவுக்கு போதைப் பொருள் பிரயோகம் குடா நாட்டினுள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர்தான் மிகப் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் அளவுக்கு குடா நாட்டினுள் மேற்படி பழக்கம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன் அறிமுகம் திட்டமிட்டு நடத்தப்பட்டதாகவே தெரிகிறது. 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் யார் யார் இங்கு வந்தார்கள் வருகிறார்கள் என்று உள்ளூர்வாசிகள் கவனிக்க, ஆராய்ந்து பார்க்க எந்த வித வழிமுறையும் அமைந்திருக்கவில்லை.

அன்றிலிருந்து இன்று வரையில் சகலதுமே இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளது. இராணுவத்தின் பிரசன்னத்தால் பொலிஸார் தமது பணிகளைச் சரியாகச் செய்துவரக் கூடியதாக இருக்கின்றதா என்று கேட்க வேண்டியுள்ளது.

எமது மாணவ சமுதாயத்தைச் சீர்குலையச் செய்ய சிலர் கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றார்கள். சுதந்திர வேட்கையை அவர்களிடம் இருந்து அழித்து கல்வி மீதுள்ள பற்றை இல்லாதாக்கி புலன் இன்பங்களில் அவர்கள் எண்ணங்களைத் திசைதிருப்ப நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகின்றன.

ஏன் எதற்காக என்ற கேள்விகளுக்கு பதில் பெறுவது அவ்வளவு கடினமில்லை. இவற்றை எல்லாம் மாணவ சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டும். உணர்ந்து கொள்ள வேண்டும். இப்பொழுது மாணவர்களுக்குக் கல்வியே முக்கியமானது.

விளையட்டுக்களில் பங்கு பற்றுவதும் முக்கியம். கலைகளில் ஈடுபடுவதும் முக்கியம். கல்வி, கலை, விளையாட்டுக்கள் போன்றவற்றில் மாணவ மாணவியர்கள் ஈடுபாடு காட்டவேண்டும்.

புலன் இன்பங்களுக்குக் காலம் இருக்கிறது. முதலில் கட்டுப்பாடுடன் வளர மாணவ சமுதாயம் முன்வர வேண்டும். அவ்வாறு கட்டுப்பாடுடன் வளர விடக் கூடாது என்று தடுக்க சில சக்திகள் பிரயத்தனங்கள் எடுத்து வருகின்றன என்பதை மறவாதீர்கள். இப் பேர்ப்பட்ட விழாக்கள் மாணவர் மனதில் மகிழ்வையும் கலாசாரம் மீது மதிப்பையும் உண்டாக்குவன என்று எதிர்பார்க்கிறேன். பண்பாட்டை உணர்ந்தால் நாம் பாதை தவறமாட்டோம். இது நிச்சயம். உங்கள் அனைவருக்கும் இறைவன் ஆசி என்றென்றும் கிட்டுவதாக! என அவர் தெரிவித்தார். (செ-4)

**ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்கு.**
தரமான ஓடுகள் (டபிள் நந்தி மார்க், நூறாணி மார்க், பெப்ஸி மார்க், ஸ்டார் மார்க்) போன்ற ஓடுகள் யாழ், வன்னி ஆகிய இடங்களுக்கு விநியோகம் செய்துதரப்படும்
தொடர்புகளுக்கு - 077 3818799 (C-5798)
பிரணவன் என்ரபிறைசஸ்
இல- 365, பருத்தித்துறை வீதி நல்லூர் யாழ்ப்பாணம்.

**Shakthy microtec** Computer wholesaler
Hotline: 0779120842
Rs. 12,000/- — P4 2.80Ghz Processor, 1GB Ram, 40GB Hard disk, DVD Rom, 17" Monitor, Keyboard and Mouse
Rs. 17,000/- — C2D 1.80Ghz Processor, 1GB Ram, 80GB Hard disk, DVD Rom, 17" Monitor, Keyboard and Mouse
Rs. 23,000/- — C2D 1.86Ghz Processor, 2GB Ram, 320GB Hard disk, DVD Rom, 17" Monitor, Keyboard and Mouse
நத்தார் பண்டிகையை முன்னிட்டு Branded கணனிகள் மலிவு விலையில்... 31.12.2013 வரை
Rs.500/- Rs.350/- Rs.800/- Rs.16,500/- 3 language kayboard Rs.600/- Rs.500/- Rs.850/-
No.170, Palaly Road, Vigneswara Building, Kondavil East, Jaffna.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org